தமிழரசு
டிசம்பர் 2003





தமிழ்நாடு இயல் இசை நாடக

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 2003
மலர் : 35 இதழ் : 6
விலை ரூ.10

முதல் பக்க அட்டை : சென்னையில் நடைபெற்ற 7ஆவது தேசிய மின் ஆளுமை மாநாடு
இரண்டாம் பக்க அட்டை : கலைமாமணி விருது வழங்கும் விழா
நான்காம் பக்க அட்டை : காவலர்களுக்கான குடியரசுத் தலைவர் முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா

இந்த இதழில்...


- மின் ஆளுமை – சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 2
- அனைத்துத்துறைகளிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்ந்திட காவல்துறை துணை நிற்கும் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ........ 8
- "தமிழ்நாடு நாள் விழா" – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி ........ 13
- அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை ........ 19
- தமிழ்நாட்டில் மின்தடை நீக்க கணினி பணி மையம் ........ 20
- கடலூரில் 50–ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா ........ 22
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் இணை நிருவாகி சந்திப்பு ........ 24
- குழந்தைகளுக்கான சத்துணவில் கறிவேப்பிலை மற்றும் முருங்கை இலைப்பொடி ........ 26
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள் சந்திப்பு ........ 28
- அறிவியல் தமிழ்ப் பாடநூல் ........ 33
- குற்ற வழக்குத் தொடர் புத் துறைக்கு வாகனங்கள் ........ 34
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் தலைவர் சந்திப்பு ........ 35
- விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு ........ 36
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநில முதலமைச்சரோடு ஆலோசனை ........ 37
- கலைமாமணி விருது வழங்கும் விழா ........ 41
- புதுடெல்லி அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு நாள் விழா ........ 45
- புதிய ஊட்டச்சத்துக் கொள்கை ........ 48
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகள் ........ 55
- புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மதுரை மாவட்டத்தில் உருவாகும் தொழிற்சாலைகள் ........ 58
- தருமபுரி மாவட்டத்தில் முன்னோடியாகச் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்கள் ........ 60
- சேலம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ........ 64
- ஈரோடு மாவட்டத்தில் மானாவாரி பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நவப்ரா திட்டம் ........ 65
- புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் ........ 67
- தூத்துக்குடி மாவட்டத்தில்அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் செயல்பாடுகள் ........ 71
- பாதரி (சிறுகதை) ........ 72
- தேனி மாவட்டத்தில் மாங்கனி ஏற்றுமதி மண்டலம் ........ 74
- வேலூர் மாவட்டத்தில் பாலியல் ஊனமுற்றவர்களுக்கான தொகுப்பு வீடுகள் ........ 76
- வாழ்க்கை வாழ்வதற்கே ........ 77
- விழுப்புரம் மாவட்டத்தில் காற்று ஒலிப்பான்களை அகற்றுவதில் சாதனை! ........ 80


*ஆசிரியரும் வெளியிடுபவரும்:*

**வெ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926 மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



ஆளுமையை முழுமையாகப் பயன்படுத்துவதன் நோக்கம் தகவல் தொழில்நுட்ப புரட்சியின் மூலம் கிடைத்த பயன்களை கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் கிடைக்கச் செய்து அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையில் மின் ஆளுமைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடியொற்றி கிராமப்புற மக்கள் 'ராசி' (RASI) திட்டத்தின் மூலம் இணையதளத்தை பயன்படுத்தி என்னென்ன திட்டங்கள் உள்ளது என்பதை எளிதில் தெரிந்துகொள்ள இதில் வகை செய்யப்பட்டுள்ளது. என்னுடைய ஆட்சியில் கிராமப்புறங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத் துறையின் பயன்பாடுகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தமிழக தகவல் தொழில்நுட்ப வரலாற்றில் இடம்பெறும் என்பதில் நான் உறுதியாக நம்புகிறேன்.

## இணையதளத்தில் வசதி

முன்னோடித் திட்டமாக மிகச்சிறிய அளவில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் செயல்பாடுகளை கூர்ந்து நோக்கும் போது சமூகப் பொருளாதார விளைவுகளை மிக நுட்பமாக ஆராய்ந்ததன் மூலம் ஊரகப் பகுதி மக்களுக்குக் கூடுதல் அதிகாரம் அளிப்பதற்காகவும் தகவல் தொழில்நுட்ப புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பயன்களை கிராமப்புற மக்களுக்கு வழங்கும் விதத்தில் இன்று இத்திட்டம் பத்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இருந்து சர்வதேச அளவில் மிகவும் பிரசித்திப்பெற்ற மதுரை கண் மருத்துவமனையின் தரமான மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை கிராமப்புறங்களில் வாழும் அடித்தள மக்களும் தொலைதூர மருத்துவச்சிகிச்சை மூலம் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வசதி கிடைத்து வருகின்றது.

வேளாண்மைத் துறையில் உருவாகும் பிரச்சினை–களுக்கு, ஆலோசனைகளும் தீர்வுகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை அணுகி விவசாயிகள் பெறுவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் வருவாய் துறை பத்திர பதிவுத் துறை மற்றும் வளர்ச்சித் துறை ஆகியவற்றில் உள்ள பொதுநலப் பணிகளில் தேவைகள் குறித்த தகவல்களும் தமிழக அரசின் இணையதளத்தில் தெரிந்து கொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லா நடவடிக்கைகளும் எனக்கு முழு அளவில் மன திருப்தியை தருவதற்குக் காரணம் இதனை செயல்படுத்துவதன் மூலம் காலவிரயம் தடுக்கப்படுவதுடன் ஊழலற்ற முறையில் திறந்த நிலையில் பணிகள் விரைந்து வேகமாக நடைபெறுவதுதான்.

பெண்களை சமூகப் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையச் செய்வதற்கு நான் எடுத்துக்

கொண்ட வழிமுறைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடு தான் 'ராசி' (RASI) திட்டம். மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் தமிழக அரசின் செயல்திறனை கிராமப்புறங்களில் பார்க்கமுடியும் என்று நான் நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் 'ராசி' (RASI) திட்டம் மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறிவிப்பதை பெருமையாகக் கருதுகின்றேன். என்னுடைய தலைமையிலான அரசு இந்தியாவிலேயே தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாக்க வேண்டும் என்று தனக்கு தானே ஒரு கொள்கையையும் இலட்சியத்தையும் உருவாக்கிக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இதனை வெற்றிடத்தில் செயல்படுத்த முடியாது. தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை விரைவுபடுத்தி அதனுடைய முழுப் பயன்களையும் நாம் அடைய வேண்டுமானால் அதற்கு முதுகெலும்பாக அமைந்திருக்கும் கிராமப்புற அடிப்படை உள்கட்டமைப்பை நாம் மேம்படுத்தியாக வேண்டிய நிலையில் உள்ளோம்.

## ஒரு இலட்சம் பேருக்குப் பயிற்சி

இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒரு பாதியை தான் இதுவரை நாம் பேசி வருகின்றோம். அடுத்த பகுதியான வேலைவாய்ப்பு, மனித வளம், பயிற்சி, உள்கட்டமைப்பு ஆகியவற்றிலும் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இதனுடைய ஒரு பகுதியாக வருவாய் பத்திரப்பதிவு, சுகாதாரம் மற்றும் தலைமைச் செயலகம் ஆகியவற்றில் பணி புரியும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களுக்கு மின் ஆளுமை குறித்த பயிற்சியை அளித்து வருகின்றோம்.

அதனைத் தொடர்ந்து தற்போது தமிழக அரசு கிராமப்புறங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள சுமார் ஒரு இலட்சம் பேருக்கு இந்த வகைப் பயிற்சியை வழங்குவதன் மூலம் அவர்களின் தொழில்நுட்ப–பொருளாதார நிலையை தரம் உயர்த்துவதற்கு இது முக்கிய அடிப்படைக் காரணியாக இருக்கும்.

தத்துவயியலில் மிகுந்த நம்பிக்கை எனக்கு உண்டு. அதன்படி "ஒரு செயலில் பெரிய அளவில் திட்ட மிட்டு, சிறிய அளவில் அப்பணிகளைத் துவக்கி, விரைந்து அதனை விரிவுபடுத்து" என்பதுதான் அது.

புகழ் வாய்ந்த நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென் கூற்றுப்படி வளர்ச்சி குறித்து திட்டமிடும்போதும் அந்த வளர்ச்சியை எட்டுவதற்கான இலக்குகளை வகுக்கும்போதும் முழுவதுமாக மனிதாபிமான அடிப்படையில் இருக்கும் வகையில் வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

சமூகத்தில் மிகவும் பின்தங்கி உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை பார்க்கும் போது தகவல் தொழில்நுட்ப பயன்களை அரசு நிருவாகத்தில் பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய சேவை–களையும் வளர்ச்சிக்கான செயல்பாடுகளில் ஒருங்கிணைக்க முடிகின்றது என்பது மின் ஆளுமையைப் பயன்படுத்தியதன் மூலம் அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளில் அச்சமூகத்தை இணைத்து கொண்டுள்ளோமே ஒழிய ஒதுக்கவில்லை என்பது தெளிவாக தெரிகின்றது.

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கணினிப் பயிற்சி

இந்த மாற்றத்தைப் பயன்படுத்தி தலைவர்களின் எண்ணங்களையும், மாற்றி அமைக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி பயன்படுத்துவது குறித்த பயிற்சி அளிக்கப்படும்.

இந்த இணைப்புகளை அடிப்படை உள் கட்டமைப்பு தேவைப்படும் துறைகளில் செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு ஸ்டேட் வைட் ஏரியா நெட் ஒர்க்" (Tamil Nadu State Wide Area Network - TNSWAN) என்னும் புதிய நவீனத் திட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள மாநில அரசின் அனைத்து துறைகள் மற்றும் அலுவலகங்களை ஒருங்கிணைப்பதுடன், 29 மாவட்ட நிருவாகங்களையும் இணைத்து, அதனைத் தொடர்ந்து அனைத்து தாலுக்கா அலுவலகங்களுக்கும் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தோடு இணைக்கப்படும். ஒரு நொடிக்கு 2 மெகா பைட் பிராட்பேண்டை (Broadband) பயன்படுத்தி குரல் இணைப்பு (வாய்ஸ்), காட்சி இணைப்பு (வீடியோ), புள்ளி விவர தகவல் (டேட்டா) இணைப்பு ஆகியவற்றை இந்த வைட் ஏரியா நெட்ஒர்க் திட்டம் வழங்கும். இந்த வசதியை மாநிலத்தில் செயல்படும் தனியார் தகவல் தொடர்பு நிறுவனங்கள் இலவசமாக வழங்கும்.

மாநில அரசின் செயல் திட்டங்களை செயல்படுத்துவதில் முக்கியக் காரணிகளான குடிமக்களின் எண்ணங்கள், தலைமைப்பண்பு, முதலீடு, திட்டமிடுதல், வெளிப்படையான நிருவாக செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பம் மின்னணு நிருவாகத்தின் மூலம் பங்கு பெறச் செய்வதன் அடிப்படையில்தான் இதனுடைய வெற்றி அமைந்துள்ளது.

மின் ஆயத்த நிலை என்பதற்கு இவைதான் அடிப்படையான முக்கியக் காரணிகளாகும். இந்த ஆயத்த நிலையில் மேம்பட்ட மாநிலங்கள் என்ற வகையில் இந்திய

அரசு பல்வேறு அடிப்படைக் காரணிகளைக் கொண்டு ஆய்வு செய்ததன் மூலம் தமிழ்நாடு, கர்நாடகம், மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை இத்துறையில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது என்று இனம் கண்டுள்ளது.

இத்துறையில் நாட்டில் பல்வேறு மாநிலங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த நிலை முக்கியமான ஒரு கேள்வியை எழுப்புகின்றது. தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு இடையே வேறுபாடு நிலவுவது ஏன்? என்பது தான் அது. மனிதவள தேவையான அடிப்படை அம்சமான மின் ஆளுமையை எல்லா மாநிலங்களும் ஒட்டு மொத்தமாக ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்துவதற்குத் தடையாக உள்ள காரணிகள் எவை என்பதை இனம் கண்டறிய வேண்டும்.

இந்த தேசிய அமைப்பின் மூலம் உள்ள மிகப்பெரிய இலக்கு எதிர்காலத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து இதனைச் செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டிய வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதனை செயல்படுத்துவதில் யாரும் பின் தங்காத நிலையை உருவாக்க வேண்டும்.




மேம்பாட்டிற்கும் மின் ஆயத்த நிலைக்கும் ஏதேனும் உறவு உண்டா?

எந்த மாநிலங்களில் அதிக கல்வி அறிவு குழந்தைகள் இறப்பு குறைவாக உள்ள நிலை மற்றும் பிரசவ காலங்களில் தாய் மரணமடையும் விகிதம் குறைவாக உள்ள நிலை, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பு ஆகிய காரணிகள் சிறப்பாக உள்ளதோ அந்த மாநிலங்கள் மின் ஆயத்த நிலையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்வது தெரிய வருகின்றது.

மின் ஆளுமை தனிமைபடுத்தப்பட்டுள்ளதா என்பதை இந்த மின் ஆளுமை மாநாடு முக்கியமாக விவாதிக்க வேண்டும்.

**மனித வளர்ச்சிக்கான முக்கிய காரணி கண்டறியப்படும்**

மனித வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளான கல்வி மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத்

முதலாவதாக மண்டல அளவில் மாநாடுகளை நடத்த வேண்டும் என்ற திட்டத்தை செயல்படுத்தியதை நான் முழு மனதுடன் வரவேற்கின்றேன். காரணம் என்னவென்றால் மண்டலத்திற்கு மண்டலம் கொள்கைகள் வேறுபடுகின்றன. ஒரு திட்டத்தை இறுதிப்படுத்துவதற்கு இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தியது வரவேற்கக் கூடிய ஓர் அம்சம்.

ஒவ்வொரு மண்டலங்களிலும் உள்ள உள்ளூர் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தேவையான நெறிமுறைகளை சேர்த்துக் கொள்வது மற்றும் சில வரைவு திட்டங்களை மாற்றியமைப்பது ஆகியவற்றை செய்வதன் மூலம் உள்ளூர் சூழ்நிலைகளை உணர்ந்து ஒரு தெளிவான வரைவு திட்டத்தை செயல்படுத்த இயலும்.

இரண்டாவதாக மத்திய அரசு ஒரு மின் ஆளுமை நிருவாக இணைப்புக் குழுவை உருவாக்கி அதில் அதிக அளவில் மண்டல அளவிலான பிரதிநிதிகளை பங்கேற்க செய்ய வழிவகை செய்ய வேண்டும். இக்குழு தொடர்ந்து



கூடி நிலைமையைக் கண்காணிப்பதுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தேவையான செயல் திட்டங்களை வகுத்து அதனை முழுமையான அளவில் தன்னிறைவு பெறும் வகையில் அதனைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் பணியாற்ற வேண்டும்.

## நாடு முழுவதும் இணைக்கத் திட்டம்

மூன்றாவதாக நாடு முழுவதும் உள்ள சாலை போக்குவரத்தை இணைக்க நம்மிடம் உள்ள வளங்களைப் பயன்படுத்தி எடுத்த நடவடிக்கையை போன்றும் மத்திய அரசு ஆப்டிக்கல் பைபர் கேபிள் இணைப்பைக் குறிப்பாக நாடு முழுவதிலும் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமப்புற மக்களையும் இதில் இணைக்கும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கி விரைந்துச் செயல்படுத்த வேண்டும்.

பிரான்செஸ் கெய்ர்ன்கிராஸ் எழுதிய தி டெத் ஆப் டிஸ்டன்ஸ் (THE DEATH OF DISTANCE-How the communications revolution will change our lives) நூலில் தகவல் தொடர்பு புரட்சி எந்த அளவிற்கு நம்முடைய வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்று விரிவாக குறிப்பிட்டுள்ளார். தகவல் தொழில்நுட்பப் புரட்சி எந்த அளவிற்கு புவியியல் அமைப்பினை மாற்றி அமைத்துள்ளது என்றும் விவரிக்கிறது.

## வரலாற்றில் மட்டுமே பார்க்க முடியும்

புதிய எண்ணங்கள் மற்றும் தகவல்கள் உலகில் மிகவும் பின்தங்கிய மூலை முடுக்கெல்லாம் வேகமாக தடைகள் மற்றும் எல்லைகளைத் தகர்த்து எறிந்து சென்றடைகின்றது. உண்மையிலேயே புவியியல் அமைப்பின் கட்டுப்பாடுகள் என்பவை இனிமேல் வரலாற்றில் மட்டும்தான் பார்க்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த சில நாட்களுக்கு தலைசிறந்த அறிவாற்றல் பெற்ற அதிகாரிகள், தொழில் துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள் ஆகியோர் இத்துறையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய பல்வேறு திட்டங்களுக்கு தங்களுடைய வாழ்வில் உணர்ந்த அடிப்படை அனுபவங்கள் மற்றும் தாங்கள் பெற்ற கல்வியின் மூலம் தெரிந்தவற்றை இங்கு மின் ஆளுமை தொடர்பான பல்வேறு துறைகளில், தலைப்புகளில் உரையாற்ற உள்ளார்கள்.

உங்களுடைய ஆய்வரங்கங்களின் மூலம் கிடைக்கும் முடிவுகள் தேசிய மின் ஆளுமை கொள்கையை உருவாக்குவதற்கு ஏதுவாக அமையும். மேலும் சென்னை மாநாடு அதற்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

## உண்மையான ஜனநாயகத்தை உருவாக்கும்

சேவைகள் துறையில் சமீபத்திய தாரக மந்திரம் வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (CUSTOMER RELATIONS MANAGEMENT-CRM) தான். இந்த மாநாடு முடிவடையும் போது (CRM) ஓர் உயர்ந்த நிலைக்கு வரும் வகையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று உங்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அதனை இறுதி செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (CUSTOMER RELATIONS MANAGEMENT-CRM) மக்களிடையே அறிமுகப்படுத்தி நாம் எல்லோரும் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதுடன் எல்லாவற்றிற்கும் மேலாக உண்மையான ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு இது முக்கிய பணியாற்றும் வகையில் இதனை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என்றும் நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

*– சென்னையில் 13–11–2003 அன்று நடைபெற்ற 7ஆவது தேசிய மின்ஆளுமை மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*



# அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்ந்திட காவல் துறை துணை நிற்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

காவல் துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, சிறைத் துறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, ஊர்க்காவல் படை ஆகிய சீருடைப் பணிகளில் ஏற்றமிகு பணிபுரிந்தும் வீரதீரச் செயல் புரிந்தும் தேசிய மற்றும் மாநில அளவில் பதக்கங்கள் பெற்றுள்ள அனைவருக்கும், எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

வீரதீரச் செயல் புரிதல் கடமை உணர்வுடன் நற்பணி ஆற்றுதல் மற்றும் பாராட்டுதலுக்குரிய சேவைகள் செய்தல் – ஆகியவற்றைக் கண்டறிந்து, பாராட்டி அத்தகைய சேவை புரிந்தவர்களை கவுரவித்து மகிழ்வதை எனது இன்றியமையாத கடமையாக நான் கருதுகிறேன்.

ஆண்டுகள் பலவானாலும் காவலரை கவுரவிப்பதைப் புறக்கணித்து பதக்கம் வழங்கும் விழாக்களே நடத்தாமல் விட்டு விட்ட காலகட்டங்களும் தமிழ்நாட்டில் இருந்தன என்பதை அறிவீர்கள். குற்றங்களே இல்லாத அமைதியும் வளமும் நிறைந்த இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாட்டினை மாற்றி அமைக்க நான் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் காவலரைச் சிறப்பிப்பதை ஒரு முக்கியப் பணியாக நான் கருதுவதால் இன்று இவ்வீரவிழா இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பதக்கங்கள் பெற்ற 206 பேருக்கும் நானே பதக்கங்களை அணிவிக்க வேண்டும் என்ற பெரு விருப்பம் எனக்கு இருந்தாலும் காலத்தின் அருமை கருதி 51 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மட்டும் நான் என் கையாலேயே பதக்கங்களை அணிவித்துள்ளேன். மற்றவர்களுக்கு என் சார்பில் உயர் அதிகாரிகள் பதக்கங்களை அணிவித்தனர்.

காவல் துறையை நவீனப்படுத்தவும் அதன் செயல்திறனை உயர்த்தவும் கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக நான் முயற்சிகள் பல மேற்கொண்டுள்ளேன். கடந்த இரண்டு ஆண்டுகளில்

272 கோடியே 40 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் காவல் துறையை நவீனப்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தொலைத் தொடர்பு வசதிகள், உயர் தொழில்நுட்பச் சாதனங்கள், நவீன ரக ஆயுதங்கள் ஆகியவை தமிழகக் காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு அவை அவர்களது சிறப்பான செயல்பாட்டிற்கு உதவுகின்றன. மேலும் நடப்பு 2003–2004 ஆம் ஆண்டிலும் காவல் துறை நவீன மயமாக்குதல் திட்டத்தின் கீழ், 134 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

எந்தத் துறையிலும் பெண்கள் சிறந்து விளங்க முடியும் என்றால் காவல் துற்ற மட்டும் அதற்கு விதி விலக்கா என்ன ? காவல் துறையில் பெண்களுக்கு உரிய இடத்தை அளிக்க வேண்டும் என்ற எனது எண்ணம் அனைத்து மகளிர் காவல் நிலையமாகப் பரிணமித்தது. ஏற்கெனவே தொடங்கிச் செயல்பட்டு வரும் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன், இந்த ஆண்டு மேலும் 40 காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம், இந்த நிதி ஆண்டின் இறுதியில் தமிழ்நாட்டின் அனைத்துக் காவல் துறை உட்கோட்டங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று செயல்படும் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலேயே இந்த அளவிற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயக்கப்படுவது தமிழ்நாட்டில் மட்டுமே என்பதைத் தெரிவிப்பதில் நான் மிகவும் மன நிறைவு அடைகிறேன்.




இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வெறும் சட்டம்–ஒழுங்கு மற்றும் குற்றத் தடுப்பு மையங்களாக மட்டும் செயல்படாமல் துயருறும் பெண்களுக்கு ஆதரவளித்து அறிவுரை, சட்ட உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் நிலையங்களாகவும் விளங்கி வருகின்றன. இதனால் பெண்களும் இன்று காவல் நிலையங்களை தயக்கமின்றி நாடி வந்து, தங்களின் பொதுவான குறைகளுக்கும் மற்றும் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளுக்கும், நல்ல தீர்வு காண என்னுடைய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் இந்தியாவிற்கே வழிகாட்டுவதாக அமைந்துள்ளன.

“பெண்கள் கமாண்டோ படை” என்னால் இந்த ஆண்டு ஜுன் மாதம் தொடங்கி வைக்கப்பட்டது உங்கள் அனைவருக்கும் நினைவு இருக்கும். குதிரைச் சவாரி, Para Sailing, அதிக தூரம் ஓடுதல் போன்ற கடுமையான பயிற்சிகளுடன் ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கிச் சுடுதல் போன்ற திறன்களிலும் இவர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு உதவி ஆய்வாளர்கள் மற்றும் 149 பெண் போலீஸ் கமாண்டோக்கள் இந்தத் தீவிரப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள். இந்தியாவில் பெண் கமாண்டோக்கள் அணி ஒன்றினைக் கொண்ட முதல் மாநிலக் காவல் துறை தமிழகக் காவல் துறை தான் என்பது பெருமைக்குரியது.

பெண் காவலர்களின் குழந்தைகளுக்காக ஆறு "குழந்தைகள் காப்பகங்கள்" அதாவது CRECHES என்னால் ஏற்கெனவே தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, எனது அரசு இந்த ஆண்டு மாவட்ட தலைநகரங்களில் 29 குழந்தைகள் காப்பகங்களை நிறுவிட நடவடிக்கை எடுத்துள்ளது. இது மட்டுமன்றி மாநிலம் முழுவதும் பெண் போலீசார் பணிபுரியும் அலுவலகங்களில் அவர்களுக்கென 114 இடங்களில் ஓய்வு அறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

காவல் துறையில் e-Governance எனப்படும் மின் ஆளுமை செயல்படுத்தப்பட வேண்டும் என்னும் அடிப்படையில் மாநிலம் முழுவதும் உள்ள 1365 காவல் நிலையங்களையும், கணினி மயமாக்கும் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஏற்கெனவே 1250 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி ஆண்டில், எஞ்சிய கணினிகளும் வழங்கப் படும். இதைக் கையாளுவதற்கு காவலர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, உயர் காவல் துறை அலுவலர்களுக்கு, எங்கும் எடுத்துச் செல்ல வசதியாக, 67 மடியமர் கணினிகள் – (Lap Top Computers) வாங்கி வழங்குவதற்கு, அண்மையில் ஆணைகள் பிறப்பித்து உள்ளேன். மேலும், காவல் நிலையம் ஒவ்வொன்றுக்கும் ஒரு வீடியோ கேமரா வழங்கப்படும். மைக்ரோ வேவ் தொலைத் தொடர்பு வசதியை டிஜிட்டல் முறையில் மாற்றியமைக்க, 9 கோடியே 35 இலட்சம் ரூபாயில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரக் காவல் துறையினரின் தகவல் தொடர்பு அமைப்பும் Digital Trunking முறையில் செயல்படும் வகையில் 10 கோடி ரூபாய் செலவில், மாற்றியமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு ஆலோசனை நல்கி உதவிட காவல் நிலைய வரவேற்பு அதிகாரிகளாக பெண் காவலர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும், சென்னை மாநகரக் காவல் துறையினரால் தற்போது செயல்படுத்தப்படுகிறது.

காவலர்களின் நலனை பேணிப் பாதுகாப்பதில், நான் எப்போதும் எனது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்துள்ளேன். கடந்த ஆண்டு காவலர்களின் குறையை நேரடியாக நான் 5 நாட்கள் கேட்டறிந்து அவற்றிற்குத் தீர்வு கண்டது, எந்த ஒரு மாநிலத்திலும் நடைபெறாத, ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போது மாநில சரக மற்றும் மாவட்ட அளவிலும் காவல் துறை உயர் அதிகாரிகள் நேரடிக் குறை தீர்த்தல் நடவடிக்கையை தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள் என்னும் செய்தி, எனக்கு மன நிறைவு அளிக்கிறது. நான் மே 2001–இல் பதவி ஏற்ற போது, கருணை அடிப்படையில் வேலை வேண்டி இறந்து போன காவலர்களின் வாரிசுகள் ஏராளமானோர், காத்திருப்போர் பட்டியலில் இருந்தனர். இவர்களது துயர்துடைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை மொத்தம் 465 பேர் இரண்டாம்



நிலைக் காவலர்களாகப் பணி அமர்த்தப்பட்டனர். மேலும், அமைச்சுப் பணியில் 111 பேரும், பிற பணிகளில் 366 பேரும், அரசுப் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். 805 பேர்களுக்கு, கணினி அடிப்படை விவரப்பதிவு ஊழியர், DATA ENTRY OPERATOR பணி விரைவில் வழங்கப்பட இருக்கிறது. ஆக மொத்தம், 1,747 பேருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு காவலர் நலனைப் போற்றி வரும் எனது அரசு, காவலரின் தியாகங்களை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துவதற்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. காவல் துறையினர் தாங்கள் மேற்கொள்ளும் கடுமையான பணிகளின் போது, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்யும் சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. அவ்வாறு, மக்கள் நலம் காக்க, தங்கள் இன்னுயிரை



அர்ப்பணித்த நல்லவர்களின் தியாகம் என்றென்றும் சரித்திரமாக நிலைத்து நிற்க வேண்டும் என்னும் நோக்கத்தில் அவர்களுக்கு நினைவிடங்கள் கட்டுவது என்ற கொள்கை முடிவை, நான் 1995 ஆம் ஆண்டு காவலர் பதக்கம் வழங்கும் விழா, கோவையில் நடைபெற்ற போது அறிவித்தேன். அந்தக் கொள்கை முடிவின்படி, முதல் கட்டமாக, மறைந்த பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடன் வீர மரணம் அடைந்த 9 காவலர்களின் நினைவாக ஸ்ரீபெரும்புதூரில் 1 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நினைவிடம் அதாவது Memorial அமைக்கப்படும் என்றும் அறிவித்தேன். அதனை அடுத்து சில மாதங்களுக்குள் 1996–இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

ஆனால், அடுத்து வந்த தி.மு.க. அரசு அவ்வாறு காவலர்களுக்கு நினைவிடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று 1997 ஆம் ஆண்டு ஓர் உத்தரவை வெளியிட்டது. அப்படி ஏன் உத்தரவிட்டது? காவலர் என்றாலே முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கு ஆகாதா? அல்லது நான் அறிவித்த திட்டம் என்ற காரணத்திற்காகவே கைவிடப்பட்டதா? எப்படியோ, அப்படி ஒரு திட்டம் தேவையில்லை என்று உத்தரவிட்டது முந்தைய தி.மு.க. அரசு!

மறைந்த பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு அவரது நினைவைப் போற்றும் வகையில் நினைவிடம் அமைப்பது அவசியம். அதே நேரத்தில், அதே துயரச் சம்பவத்தில் அவரோடு உயிர் நீத்த 9 காவலர்களுக்கும் நினைவிடம் அமைக்க வேண்டியதும் அவசியமாகும். பாதுகாப்புப் பணியில் இருந்த போது, தங்களது விலைமதிப்பில்லாத இன்னுயிரை ஈந்த காவலர்களின் தியாகமும் போற்றப்பட வேண்டும் அல்லவா? அவ்வாறு 1991–இல் அந்தக் கோர சம்பவம் நிகழ்ந்த போது அன்றைக்கு காவலர்களின் வீர மரணத்திற்கு இரங்கல் தெரிவித்த ஒரே தலைவர் இந்தியாவிலேயே நான் தான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அவர்களது வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில் நான் 1995–இல் அறிவித்தபடி ஸ்ரீபெரும்புதூரில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் அந்தக் காவலர்களுக்கு நினைவிடம் அமைக்க இப்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை இந்த நேரத்தில் மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நன்மைக்காக தங்களது விலை மதிப்பற்ற உயிரை அர்ப்பணித்த காவலர்களுக்கு, தமிழக மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டுவார்கள்; உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் நன்றி பாராட்டுவேன்; எனது அரசு நன்றி பாராட்டும் என்பதை இந்த நினைவிடம் எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக் காட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சமுதாயக் காவல் போன்ற பொதுமக்கள் – காவலர் இணக்க உறவு அமைப்புகள், இந்த நூற்றாண்டின் இன்றியமையாத ஒரு செயலாக்கமாக உலக அளவில் பேசப்படுகிறது. காவல் துறையை ஒரு பொதுமக்கள் இணக்கமுள்ள துறையாக People Friendly துறையாக நிலை நிறுத்துவது காவலரின் கடமையாக அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதியாகத்தான் சிறுவர்கள் குற்றங்களில் ஈடுபடாமல் அவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை வருங்காலச் சமுதாயத்தில் பொறுப்புள்ள குடிமக்களாக மாற்ற என்னால் அண்மையில் 117 "சிறுவர் குழுமங்கள்" Boys Clubs தொடங்கப்பட்டன. புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இந்தக் குழுமங்கள், நகர்ப்புற குற்றங்களைக் குறைப்பதுடன், மக்களுக்கும் காவல் துறைக்கும் ஒரு நல்லெண்ணப் பாலமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தச் செயலையும் காவலர்கள் நிறைவாகச் செய்து முடிக்க வேண்டும்; அதையும் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும். காவலரின் பணி அப்படிப்பட்டது!

ஒரு சிற்பி, கடவுள் சிலையை வடித்துக் கொண்டிருந்தான். பொதுவாக சாமி சிலையின் முன்

பக்கம் தான், மிக நுட்பமாகச் செதுக்கப்படும். சிலையின் பின்புறத்தைப் பற்றி அவ்வளவாக யாரும் கவலைப் படுவதில்லை. இந்தச் சிற்பி சிலையின் பின்புறத்தையும் மிகுந்த கவனத்துடன் செதுக்கிக் கொண்டிருந்தான். அப்போது, அங்கு வந்த ஒருவர் "பைத்தியக்காரனாக இருக்கிறாயே! சாமி சிலையின் முன் பக்கத்தைத் தானே மக்கள் பார்ப்பார்கள்? பின் பக்கத்தை இவ்வளவு சிரமப்பட்டு செதுக்குகிறாயே? யார் பார்ப்பார்கள்?" என்று கேட்டார். அதற்கு, சிற்பி சொன்ன பதில் என்ன தெரியுமா? "கடவுள் பார்ப்பார்" – இது தான் சிற்பியின் பதில் !

களைவதிலும்; மக்கள் பயமில்லாது அமைதியுடன் தங்களது ஜனநாயக உரிமைகளுடன் நல்வாழ்வு வாழ்வதற்கு உதவுவதிலும்; தீ விபத்து, வெள்ளம் மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் எல்லாச் சம்பவங்களிலும், தகவல் கிடைத்த உடன் விரைந்து சென்று துன்புற்றோர் துயர்துடைப்பதிலும் நீங்கள் உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அனைத்துக்கும் மேலாக உதவி தேடி வரும் பொதுமக்களின் நண்பனாக நீங்கள் விளங்க வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. ஏன், இந்த மாநிலத்தின் எதிர்பார்ப்பும் அது தான் !



அந்த நம்பிக்கை, அந்த மனோபாவம், காவலர்களுக்கு வேண்டும். உங்களை யார் பார்க்கிறார்களோ இல்லையோ உங்கள் மனசாட்சி உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இது பொதுவாக எல்லோருக்கும் இருக்க வேண்டிய மனோபாவம் என்றாலும் காவல் துறையினருக்கு கட்டாயம் தேவையான மனோபாவம் !

குற்றங்களைக் களைந்து, குற்றவாளிகளைச் சரியாக இனங்கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்தி அவர்களுக்கு முறையான தண்டனை கிடைக்கச் செய்வதிலும்; தீவிரவாதம், வன்கொடுமை, திட்டமிட்ட கொடுஞ்செயல், இவற்றை முளையிலேயே கிள்ளியெறிந்து, இவற்றில் ஈடுபட்டோர் தனி நபரானாலும் சரி குற்றம் இழைக்கும் கூட்டங்களாக இருந்தாலும் சரி, அவற்றை ஒடுக்குவதிலும்; பெண்கள், குழந்தைகள் மற்றும் நலிந்தோர் போன்றோருக்கு, எதிராக இழைக்கப்படும் அநீதியினை முழுமையாகக்

இப்படை வெல்லும் அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்க காவல் துறை என்னுடன் துணை நிற்கும் – என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை! அந்த நம்பிக்கையைச் செயல்படுத்த வேண்டியது உங்கள் கடமை என்று தெரிவித்துக் கொண்டு இங்கு பதக்கம் பெற்ற அனைவருக்கும், என் வாழ்த்துகளையும், பாராட்டுதல் களையும் மீண்டும் தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
எனக் கூறி, விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

**(18.11.2003** அன்று இந்தியக் குடியரசுத் தலைவர்மற்றும் முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை)

* * *



# தமிழ்நாட்டில் மகத்தான பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

"மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் 'வியத்தகு இந்தியா 2003' என்ற தொழில் கண்காட்சியில் 'தமிழ்நாடு தினம்' கொண்டாடும் மலேசிய மக்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கோலாலம்பூரில் இதுபோன்ற ஒரு வர்த்தகக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்ததுடன், வர்த்தக மேம்பாட்டிற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ள இந்திய வர்த்தக மேம்பாட்டு குழுவினரை (ITPO) நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த நல்ல நேரத்தில் உங்களுடைய எண்ணங்களெல்லாம் நிறைவேற என்னுடைய வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

### தனித்தன்மையுடன் விளங்கும் மலேசியா

தொன்றுதொட்டு நினைவுக்கெட்டிய நாட்களில் இருந்து நமது பண்பாடும் கலாச்சாரமும் மலேசியாவுடன் பின்னிப் பிணைந்துள்ளது. மேலும் கலைகள் சந்திக்கும் இடமாக புராதன காலம் முதல் மலேசியா இருந்து வருகிறது. மலேசியா இன்று ஒரு குட்டி ஆசியாவாகத் திகழ்கின்றது. வலிமையான, அதே நேரத்தில் வளமான கலைகளுடன் காட்சி அளிக்கிறது.

மலேசியச் சமுதாயம் உலகில் பல்வேறு பகுதிகளில் இருந்து நல்லவைகளை தன்னகத்தே எடுத்துக் கொண்ட போதிலும் தன்னுடைய இயல்பான தன்மையை விட்டுக் கொடுக்காமல் தனித் தன்மையுடன் மிகச் சிறப்பாக விளங்கி வருகிறது. மலேசிய நாட்டையும் மக்களையும் இன்று இந்த அளவிற்கு வியக்கத்தக்க சாதனைகளைப் படைக்கும் வகையில் திட்டங்களை வகுத்து வழிநடத்திச் சென்ற தலைவர்களுக்கு, இந்த நல்ல நேரத்தில் மனமார்ந்த

நன்றியை உரித்தாக்கிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### உறுதியான தலைமை

நவீன, வலிமையான பொருளாதாரம் கொண்ட நாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, இன்று மலேசியா உலக நாடுகளின் நட்சத்திரமாக ஜொலிக்கின்றது. இதற்குச் சந்தர்ப்பமும் வாய்ப்பும் மட்டும் காரணமல்ல; மாறாக மலேசிய மக்களின் சாதனை படைக்க வேண்டும் என்ற உள்ளுணர்வும் தியாகங்களுமே முக்கிய காரணம்.

மலேசிய முன்னாள் பிரதமர் முகம்மது மகாதீர் மற்றும் தற்போதைய பிரதமர் அப்துல்லா அகமது படாவி ஆகியோருடைய உறுதியான தலைமையும் அவர் களுடைய எண்ணங்களும், திட்டமிடுதலும், தொலை நோக்குப் பார்வையும், மக்களை வழிநடத்திச்செல்லும் பாங்கும் என்னை மிகவும் கவர்ந்த அம்சங்களாகும்.

அவர்களின் இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக இன்று மலேசியா உறுதியான மற்றும் வலிமையான நாடாக மாறியுள்ளதோடு பலதரப்பட்ட கலை மற்றும் கலாச்சாரத்தை உள்ளடக்கிய சமுதாயங்களைக் கொண்ட மலேசியா, தற்போது உலக அளவில் வளர்ச்சி பெற்ற பொருளாதார நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மேலும் ஆசியாவில் அர்த்தமுள்ள வளர்ச்சிக்கு மிகவும் முக்கிய பங்காற்றும் வகையிலும் அது பீடுநடை போட்டு வருகிறது.

'வியத்தகு இந்தியா 2003' தொழில் கண்காட்சியை நடத்துவதற்கு கோலாலம்பூரைத் தேர்ந்தெடுத்த இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பினரின் முடிவு எனக்கு மகிழ்ச்சியளித்தது. இந்தியா, மலேசியா இடையேயான வளர்ச்சியில் அபரிமிதமான வகையில் உருவாக்கித் தரும் ஒரு தனித்தன்மையான வாய்ப்பாகவே இந்தக் கண்காட்சியை நான் கருதுகிறேன்.

இந்தியா மற்றும் மலேசியா இடையேயான வர்த்தகம் மிக வேகமான வகையில் வளர்ந்து வந்துள்ளது. இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தின் அளவானது இந்தியா ஏசியான் நாடுகளுடன் கொண்டுள்ள வர்த்தகத்தில் நான்கில் ஒரு பங்கு அளவிற்கு நடைபெற்று வருகிறது.

### வணிக உறவுகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்

கடந்த 2002 மற்றும் 2003ஆம் நிதியாண்டில் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகமானது 2.2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நடைபெற்றுள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 17 சதவிகிதம் அதிகமாகும். இதன்மூலம் இரு நாடுகளுக்கிடையேயான ஆரோக்கியமான வளர்ச்சி எந்த அளவிற்கு உள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த தொழில் கண்காட்சி சரியான தருணத்தில்தான் நடைபெறுகிறது. இதனையே அடிப்படையாகக் கொண்டு இரு நாடுகளிடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வலுவான அடித்தளமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்தியா, மலேசியாவைச் சார்ந்துள்ள வர்த்தகப் பங்குதாரர் கணிசமான அளவு பனை (Palm Oil) எண்ணெய்யை இந்தியா, மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்து வருகிறது. இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மலேசியாவில் இருப்புப் பாதைகளை அமைத்துள்ளனர். மேலும் இந்திய மென்பொருள் வல்லுநர்கள் நவீன மலேசியாவை உருவாக்குவதில் உங்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். இந்த அருமையான உறவுமுறை நல்ல வளமான சூழ்நிலையை எதிர்காலத்தில் உருவாக்குவதற்கும், உறுதி செய்வதற்கும் ஏதுவாக அமையும்.

இந்த வர்த்தகக் கண்காட்சியில் இன்று "தமிழ்நாடு தினம்" கொண்டாடப்படுவதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தொழில் கண்காட்சியில் தமிழ்நாடு மிகப் பெரிய அளவில் பங்குதாரர் கொண்ட மாநிலமாகக் கலந்து கொண்டுள்ளது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இந்தக் கண்காட்சியில் தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் உள்ள வாய்ப்புகள் குறித்து விரிவான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தொழில் கண்காட்சியில் தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் இடையேயான தொழில் வளர்ச்சி குறித்தும், பாரம்பரிய வர்த்தக உறவுகளை ஒருவருக்கொருவர் மேம்படுத்திக் கொள்ளவும் மற்றும் இணைந்து பணியாற்றவும் ஏற்ற வகையில் உள்ள வாய்ப்புகள் குறித்து கருத்தரங்கம் ஒன்றை இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. அதற்காக இந்திய தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்தரங்கின் மூலம் ஒருவருக்கொருவர் வணிக உறவுகளை மேம்படுத்திக் கொள்ளத் தேவையான கருத்துரு உருவாக்கப்பட வேண்டும். மேலும் இந்தக் கருத்தரங்கம் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உந்து சக்தி

வர்த்தக உறவுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவை எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது குறித்து சில கருத்துகளை இங்கு தெரிவிக்க விழைகிறேன்.

இந்த புத்தாயிரம் ஆண்டில் குறிப்பாக 21ஆம் நூற்றாண்டு அறிவு மற்றும் மனித மூலதனத்தை வளர்ச்சியின் மையமாகக் கொண்டுள்ளது. இந்த வளர்ச்சி நடவடிக்கையில் ஆசியாவின் பங்களிப்பு மிகப் பெரிய அளவில் இருக்கப் போவதற்கு காரணம், இங்கு அபரிமிதமாக உள்ள அறிவும் மனிதவளமும் தான். புதிய ஆசியாவின் வெளிப்பாடாக தெற்கு – தெற்கு நாடுகளின் கூட்டுறவு முக்கிய காரணியாக அல்லது அடி கல்லாக அமைந்துள்ளது. இந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் இடையேயான உறவை வலுப்படுத்துவதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன்.

மலேசியாவில் இருந்து அமைச்சர்கள் மற்றும் மாநில அளவிலான உயர்மட்டக்குழுவினர் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு என்னைச் சந்தித்துப் பேசினார்கள். நான் அவர்களுடன் என்னுடைய கருத்துகளைப் பரிமாறிக் கொண்டேன். இந்தச் சந்திப்பு என்னை மீண்டும் தமிழ்நாடு மற்றும் மலேசியா இடையேயான உறவுகளை பலப்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைந்தது.

## அபரிமிதமான வாய்ப்புகள்

பொருளாதார ரீதியில் பலன் தரக்கூடிய அளவிற்குத் தேவையான துறைகளில் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை இனம் கண்டறிவதே இந்தத் தொழில் கண்காட்சியில் கலந்து கொண்டதற்கான முதன்மையான காரணமாகும். இந்திய நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு அபரிமிதமான வளங்களும் வாய்ப்புகளும் உள்ளன. நாங்கள் ஆண்டிற்கு 8 சதவிகித பொருளாதார வளர்ச்சியை எட்ட வேண்டும் என்ற இலக்கோடு செயல்பட்டு வருகிறோம். இந்த பொருளாதார இலட்சியத்தை அடைவதற்காக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் கணிசமான அளவு வளர்ச்சி இலக்கை எட்ட வேண்டும்.

## பன்னாட்டு நிறுவனங்கள்

உண்மையிலேயே இந்தியாவின் உற்பத்தித் துறையின் தாயகமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

> *உற்பத்தித் துறையில் பல்வேறு வகையான வாய்ப்புகள் உள்ளன. ஜவுளித்துறையில் தமிழ்நாடு பாரம்பரியமாக வலிமை படைத்ததாகத் திகழ்ந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள பஞ்சாலை மற்றும் நெசவு ஆலைகளை நவீன மயமாக்குவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஆயத்த ஆடைகள், பஞ்சு மற்றும் நெய்தல் துறைகளில் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன. தரமான, பயிற்சி பெற்ற தொழில் நுணுக்கம் கொண்ட தொழிலாளர்களைக் கொண்ட தனித்தன்மை வாய்ந்த இடமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. இதேபோல் தோல் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாட்டில் அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளது.*

ஏற்கெனவே மெட்ராஸ் என்று அழைக்கப்பட்ட சென்னை மாநகரம் இந்தத் துறையில் இந்தியாவின் முன்னோடி நகரமாக விளங்கி வருகிறது. மேலும் பன்னாட்டு அளவில் மோட்டார் உதிரிப் பாகங்கள் உற்பத்தி துறையில் ஆசியாவின் முன்னோடி நகரமாகவும் திகழக்கூடிய அளவுக்கு அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் சென்னை மாநகரம் மோட்டார் உதிரி பாகங்கள் மற்றும் மோட்டார் வாகன உற்பத்தியில் மிகப்பெரிய ஏற்றுமதியாளராகவும் உருவாகி வருகின்றது. பன்னாட்டு நிறுவனங்களான போர்டு மற்றும் ஹூண்டாய் கம்பெனிகள் தங்களின் உற்பத்தி நிலையங்களை சென்னை நகரில் அமைத்துள்ளன. மிட்சுபிஷி நிறுவனமும் இந்திய நிறுவனத்துடன் கூட்டாக

இணைந்து சென்னையில் தங்கள் நிறுவனத்தின் உற்பத்தி நிலையத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சென்னை நகரில் ஒப்பந்த அடிப்படையில் உற்பத்தி செய்ய தொழிற்சாலை மற்றும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இணைக்கும் தொழில்களிலும் அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன. தமிழ்நாட்டின் மோட்டார் வாகன தொழிலில் வளர்ச்சித் திட்டங்களில் மலேசிய நிறுவனங்கள் கண்டிப்பாக பெருமளவில் பங்கேற்று செயலாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*ஆசியாவின் நுழைவாயில்*

இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் முதலீட்டிற்கான சூழல் தற்போது கணிசமான அளவிற்கு முன்னேறியுள்ளது என்று நான் நம்புகிறேன். கடந்த செப்டம்பர் 2003–இல் நான் புதிய தொழில் கொள்கையை வெளியிட்டேன். இதன் வெளிப்பாடாக தமிழ்நாட்டில் முதலீட்டிற்கான நிலை மிகப்பெரிய அளவில் முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் உருவாகியுள்ளது. இந்தத் தொழில் கொள்கையின் முக்கிய அம்சங்களாக வர்த்தகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், பன்னாட்டு தரத்தில் உள்கட்டமைப்புகளைக் குறிப்பாக தரமான மின்சக்தி அளித்தல், பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் தொழிலாளர் சீர்திருத்தம் ஆகியவையும் அடங்கும்.

*சென்னை மாநகரம் மோட்டார் உதிரிபாகங்கள் மற்றும் மோட்டார் வாகன உற்பத்தியில் மிகப்பெரிய ஏற்றுமதியாளராகவும் உருவாகி வருகின்றது. பன்னாட்டு நிறுவனங்களான போர்டு மற்றும் ஹூண்டாய் கம்பெனிகள் தங்களின் உற்பத்தி நிலையங்களை சென்னை நகரில் அமைத்துள்ளன. மிட்சுபிஷி நிறுவனமும் இந்திய நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து சென்னையில் தங்கள் நிறுவனத்தின் உற்பத்தி நிலையத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை பன்னாட்டுப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்பதே என்னுடைய எண்ணமாகும். நாங்கள் அந்த இலட்சியத்தை அடைவதற்கான முயற்சியில் மிகவும் வேகமாகவும் விரைவாகவும் தீர்க்கமாகவும் செயல்பட்டு வருகிறோம்.

ஆசியாவை வளர்ச்சியடையச் செய்யும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள 1000 கி.மீ. நீண்ட நெடிய கடற்கரை உதவும். மேலும் ஆசியாவுக்கான இந்தியாவின் நுழைவாயிலாக தமிழ்நாடு விளங்கும். தமிழ்நாட்டை இந்தியாவிலேயே தனித்தன்மை வாய்ந்த முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்பதே என்னுடைய இலட்சியமாகும். என்னுடைய இந்த இலட்சியப் பயணத்தில் உங்களையும் பங்கேற்க நான் அழைக்கிறேன்.

உற்பத்தித் துறையில் பல்வேறு வகையான வாய்ப்புகள் உள்ளன. ஜவுளித்துறையில் தமிழ்நாடு பாரம்பரியமாக வலிமை படைத்ததாகத் திகழ்ந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள பஞ்சாலை மற்றும் நெசவு ஆலைகளை நவீன மயமாக்குவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஆயத்த ஆடைகள், பஞ்சு மற்றும் நெய்தல் துறைகளில் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன. தரமான, பயிற்சி பெற்ற தொழில் நுணுக்கம் கொண்ட தொழிலாளர்களைக் கொண்ட தனித்தன்மை வாய்ந்த இடமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. இதேபோல் தோல் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாட்டில் அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளது.

மலேசிய முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் தங்களுடைய உற்பத்தித் தளத்தின் இரண்டாவது இடமாக தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறையின் முக்கிய உற்பத்தித் தளமாக தமிழ்நாடு குறிப்பாக சென்னை விளங்கி வருகிறது. இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை பெறும் அளவுக்கு சென்னை வளர்ச்சி அடைந்துள்ளது. சென்னையின் மென்பொருள் ஏற்றுமதி அளவு 1.4 பில்லியன் அமெரிக்க டாலராகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும்

இருமடங்குக்கும் அதிகமாக ஏற்றுமதி அளவு அதிகரித்துள்ளது.

எங்களின் பலம் தகவல் தொழில்நுட்பத்தில் மென்பொருள் மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் பயிற்சியுமாகும். அதேபோல மலேசியாவில் மேம்பாடு அடைந்த வன்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள் அதிக அளவில் உள்ளது. ஏசியான் நாடுகள் தங்களுடைய பணிகளை சென்னையில் உள்ள சேவைப்பணி நிறுவனங்களிடம் கொடுத்து செய்து வருகின்றன. தெற்கு–தெற்கு ஒத்துழைப்பு மூலம் ஒருவருக்கொருவர் வெற்றிக்குரிய வழியை வென்றெடு என்னும் உத்தியின் மூலம் பயனடைந்துள்ளது தெரிய வருகிறது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறைகளில் உள்ள அளவிடற்கரிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நீங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யலாம் என்று உங்களுக்கு ஆலோசனை வழங்க விழைகிறேன்.

## இணைந்து செயல்பட வேண்டும்

தமிழ்நாட்டில் உள்ள அளவுக்கு அதிகமான அறிவு வளம் கொண்ட மனிதவளத்தின் மூலம் தமிழ்நாடு இந்தியாவிலேயே அறிவு சார்ந்த வல்லுநர்கள் கிடைக்கும் மாநிலங்களில் முதலிடத்திற்கு எளிதில் வந்துவிட்டது. பரந்து விரிந்த எங்களுடைய தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் இணைப்பின் மூலம் தமிழ்நாட்டில் தொழில் நுணுக்கம் கொண்ட பணியாளர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதோடு எப்போது வேண்டுமானாலும் அப்பணியாளர்களை தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

உலகம் முழுவதும் உள்ள கடலுக்கு அடியில் உள்ள ஐ2ஐ (i2i) சிங்கப்பூர் கேபிள் இணைப்பு சந்திக்கும் ஒரு முனையமாக சென்னை விளங்குகிறது. இதனுடைய பேன்ட்வித் ஒரு வினாடிக்கு 8.4 டெராபைட் ஆகும். உலகின் மிக நீண்ட தொடர்புக்கு உத்தரவாதம் இந்த கேபிள் இணைப்பின் மூலம் கிடைக்கிறது. இந்த பலத்தின் அடிப்படையில்தான் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை கடந்த 2002ல் நான் வெளியிட்டேன். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அளவிடற்கரிய அளவில் உள்ளன. ஒருவருக்கொருவர் நாம் இணைந்து செயல்பட வேண்டும்.

சர்வதேச தரத்திலான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் முனைப்புடன் உள்ளேன். இதற்கு மிகப்பெரிய அளவிலான முதலீடு தேவை. மலேசியா குறுகிய காலகட்டத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியது கண்டு நான் மெய் சிலிர்த்தேன். உள்கட்டமைப்பு வசதிகளில் மலேசியாவின் மாற்றம் எனக்குப் பொறாமையாக இருந்தது என்பதை சொல்லிக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை என நான் நினைக்கிறேன். நவீன மலேசியாவின் உள் கட்டமைப்பின் பலம் என்னவென்பது இங்குள்ள புத்தரஜெயா, சைபர்ஜெயா, நெடுஞ்சாலைகள், புதிய விமான நிலையம் ஆகியவை அடையாளமாக விளங்குகின்றன. தமிழ்நாட்டிலும் இதேநிலை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பதில் எனக்கு எந்தவித தயக்கமுமில்லை.

## தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைக்கிறேன்

அடிப்படை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களான சாலை, குடிநீர் வழங்கல், நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு, துறைமுகங்கள் மற்றும் இதுபோன்ற திட்டங்களில் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு உங்களுடைய முதலீட்டை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய நான் உங்களை அழைக்கிறேன். இந்த முதலீட்டிற்கு சரியான சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தருவோம். தமிழ்நாட்டின் அடிப்படை உள்கட்டமைப்பு திட்டங்களில் மலேசிய முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு ஏற்ற வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடல்கள் இந்த

***மலேசிய சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்குரிய சுற்றுலாத் தலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தொன்றுதொட்டு இருந்துவரும் உறவுதான் இதற்குக் காரணம். இதற்கு ஒருபடி மேலே போய் மலேசியாவில் இருந்து வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்ற வகையில் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.***

கருத்தரங்கில் இடம்பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சுற்றுலாத் துறையில் சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்கு ஏற்ற இடமாக மலேசியா மாறிய நிலை உண்மையிலேயே என்னை மிகவும் ஈர்த்தது. தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையை சீரமைத்து மேம்படுத்த, இந்தத் துறையில் அதிக அளவு அனுபவம் கொண்ட உங்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு உங்களை நான் அழைக்கிறேன்.

மலேசிய சுற்றுலாப் பயணிகள் மிக அதிக அளவில் தமிழ்நாட்டில் சுற்றுலா வந்திருப்பார்கள். மலேசிய சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்குரிய சுற்றுலாத் தலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தொன்றுதொட்டு இருந்துவரும் உறவுதான் இதற்குக் காரணம். இதற்கு ஒருபடி மேலே போய் மலேசியாவில் இருந்து வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏற்ற வகையில் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எனவே, இதுகுறித்து தங்களுடைய மேலான கருத்தை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

தமிழ்நாட்டிற்கும் மலேசியாவுக்கும் இடையேயான கலாச்சார ரீதியான உறவு பலமானதும் நீண்ட காலத் தொடர்புள்ளதுமாகும். இந்தியாவை தாயகமாகக் கொண்ட 1.5 மில்லியன் மக்கள் மலேசியாவில் வசித்து வருகின்றனர். அதில் ஒரு கணிசமான அளவுக்கு தமிழர்கள் உள்ளனர். தமிழ்நாட்டின் உணவு வகைகள் மலேசியாவில் மிகவும் பிரபலமான ஒன்றாகும். அதேபோல் சென்னையில் உள்ள மலேசிய ஓட்டல்கள் மிகவும் பிரபலமானவை. இந்தக் கண்காட்சியில் தமிழ்நாட்டின் உணவு மற்றும் திரைப்பட விழாக்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. அதுகுறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் தற்போது உங்களிடம் உரையாற்றிக் கொண்டிருக்கிறேன். ஆனால் என் சிந்தனையோ ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சொன்ன ஒரு கூற்றைப் பற்றி சிந்திக்கின்றது. அந்தக் கூற்றில் ஐன்ஸ்டீன் "எதிர்காலத்தைப் பற்றி நான் எப்போதுமே சிந்திப்பதில்லை; அது தன்னுடைய வழியில் விரைவில் வரும்" என்று கூறுகிறார். மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. புவியியல் அமைப்பு இன்னும் நீண்ட நாட்களுக்கு ஒரு தடையாக இருக்க முடியாது. காரணம் தகவல் தொழில்நுட்பத்தின் பலம், நமக்கு இடையேயான இடைவெளியைக் குறைத்துவிட்டது.

"எதுவுமே நிலையானதோ, மாறாததோ அல்ல" என்பதே மாற்ற முடியாத உறுதிப்பாடு ஆகும் என்று ஜான் எஃப். கென்னடி சொல்வார். எது புரிந்துகொள்ள முடியாததாக நேற்று இருந்ததோ அந்த விஷயம் இன்று அன்றாடப் பணியாக உள்ளது.

**புதிய உத்வேகத்துடன் செயலாற்ற வேண்டும்**

தெற்கு – தெற்கு கூட்டமைப்பு அல்லது ஒத்துழைப்பு என்பது ஒருகாலத்தில் மிக நீண்ட தொலைதூர கனவாகத்தான் கருதப்பட்டது. ஆனால் இன்று அது ஒரு வலிமையான உண்மையான பலமாகக் காட்சி அளிக்கிறது. இந்த புதிய உத்வேகத்தின் அடிப்படையோடு நாம் பொருளாதாரம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஒருவருக்கொருவர் மலேசியாவும் இந்தியாவும் குறிப்பாக தமிழ்நாட்டுடன் ஒத்துழைப்போடு பணியாற்றுவதற்கு உரிய கண்ணோட்டத்தில் மேற்கொண்டு செயலாற்ற வேண்டும்.

இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு, கோலாலம்பூரில் உள்ள மலேசியாவுக்கான இந்திய தூதரகம், இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு ஆகியோர் தங்களுடைய மேலான கடினமான உழைப்பை கொடுத்து இந்த அருமையான வர்த்தக கண்காட்சி, கருத்தரங்கம் மற்றும் விழாக்களை ஏற்பாடு செய்ததற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ள இன்றைய "தமிழ்நாடு தினம்" மிகப்பெரிய வெற்றி பெற வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். இந்த நாள் பொருளாதாரம் மற்றும் கலாச்சார பரிவர்த்தனைகளில் தமிழ்நாடு மற்றும் மலேசியாவுக்கு இடையே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்".

– இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பின் சார்பில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற " வியத்தகு இந்தியா 2003" வர்த்தகக் கண்காட்சியில் 4–12–2003 அன்று கொண்டாடப்பட்ட தமிழ்நாடு நாள் விழாவில் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் வாழ்த்துச் செய்தி.

❖ ❖ ❖



# அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2003–ஆம் ஆண்டிற்கான ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 40 ஆயிரத்தை, நான்கு திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 25.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த 2002 மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக் கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக் கோயிலுக்கு என வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தனது 2003ஆம் ஆண்டிற்கான ஜூலை மாதச் சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, சென்னை கே.கே நகர், அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு, அந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. என். தங்கையா அவர்களிடமும், ஆகஸ்ட் மாதச் சம்பளத் தொகை ரூ.10 ஆயிரத்தை, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு அந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. வி. சுந்தரமூர்த்தி அவர்களிடமும், செப்டம்பர் மாதச் சம்பளத் தொகை ரூ.10 ஆயிரத்தை, திருவண்ணாமலை அருள்மிகு அருணா சலேஸ்வரர் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு அந்தத் திருக்கோயில் உதவி ஆணையர் திரு. பி. ஜெயராமன் அவர்களிடமும், அக்டோபர் மாதச் சம்பளத் தொகை ரூ.10 ஆயிரத்தை, தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் கோவில் அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு அந்தத் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. ஏ. டி. பரஞ்சோதி அவர்களிடமும், 25.11.2003 அன்று நேரில் வழங்கினார்கள்.

* * *



# தமிழ்நாட்டில் மின்தடை நீக்க கணினி பணி மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக, எல்காட் நிறுவனத்தின் மூலம் 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள, புதிய கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கப் பணி மையத்தினை (Computer based Power Failure Redressal Centre) தொடங்கி வைத்தார். இந்தப் பணி மையம் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமையகத்திலிருந்து இயங்கும்.

சென்னை மாநகரில், தற்போது 18 இலட்சம் மின் நுகர்வோர்கள் உள்ளனர். இவர்கள் தங்களது மின் இணைப்புகளில் ஏற்படும் தடங்கல் மற்றும் மின் தடைகளை சீர்செய்து கொள்ளும் வகையில், இது பற்றிய புகார்களை அந்தந்தப் பகுதிகளில் பதிவு செய்ய 54 மின்தடை புகார் மையங்கள் இயங்கி வருகின்றன. ஒரே நேரத்தில் பல மின் நுகர்வோர்கள், இந்த மின் தடை புகார் மையங்களின் தொலைபேசியை அணுகுவதால் தொடர்பு கிடைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, நுகர்வோரின் இந்தச் சிரமங்களை நீக்கும் வகையில், பல முகவர்களைக் கொண்டு, கணினி மூலம் தானாகவே அழைப்புகளை வரிசைப்படுத்தி, பிரித்து வழங்குகின்ற பல இணைப்புகள் உடைய தொலைபேசி அமைப்பினைக் கொண்ட கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் பணி மையம் ஒன்றை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, இத்தகைய பணி மையம் அமைக்கப்படும் என்று



கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரின் போது தமிழக சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் எல்காட் நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள, 30 இணைப்புகள் கொண்ட தொலைபேசி வசதியுடன் கூடிய, கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கும் பணி மையத்தினை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1912 என்ற தொலைபேசி எண் மூலம் இந்த கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கும் பணி மையத்தைத் தொடர்பு கொண்டார். அப்போது மையத்திலிருந்த புகார் பதிவு அலுவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இனிமையுடன் வரவேற்று மின்தடை புகார் ஏதும் உள்ளதா என்று விசாரித்தார். அதற்கு, தற்போது மின் தடை புகார் எதுவும் இல்லை என்றும், மின் தடை ஏற்பட்டால் தொடர்பு கொண்டு தெரிவிப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார். பின்னர், புதிய கணினி அடிப்படையிலான மின்தடை நீக்கும் பணி மையம் சிறப்புடன் செயல்பட தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக மின் வாரியங்களில் கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் மையத்தை சொந்தமாக அமைத்துள்ளது தமிழ்நாடு மின்சார வாரியம் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் பணி மையத்தை, சென்னை மாநகரில் உள்ள அனைத்து மின்நுகர்வோரும், 1912 என்ற நான்கு இலக்க தொலைபேசி எண்ணின் மூலம் எளிதில் தொடர்பு கொள்ளலாம். சென்னை மாநகரின் எந்தப் பகுதியில் இருந்தும் மின் நுகர்வோர் கொடுக்கின்ற புகார்கள் இந்த மையத்தில் பதிவு செய்யப்படும். தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த மையத்தில் உள்ள கணினி மூலம் அவர்களுடைய முகவரி அறியப்படும். நுகர்வோர் வேறு தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டால், மின் தடை ஏற்பட்டுள்ள முகவரியை அவர்கள் தெரிவிக்க வேண்டும். எந்த நாளிலும், எந்த நேரத்திலும் மின் நுகர்வோர் தங்களது புகார்களைப் பதிவு செய்யும் வகையில், பயிற்சி பெற்ற 10 பணியாளர்கள் தொடர்ந்து இந்த மையத்தில் இருப்பார்கள். புகார் பெறப்பட்டதும், மின் வாரியப் பணியாளர்கள் மின் தடை ஏற்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று மின் தடையைச் சரி செய்யும் பணியை மேற்கொண்டு சீர்படுத்துவார்கள். மின் நுகர்வோரின், மின் தடை புகாருக்கு உடனடியாக ஒரு புகார் எண் வழங்கப்படும். இதன் மூலம், புகார் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையின் நிலையை நுகர்வோர் அறிய முடியும். இந்தக் கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் பணி மையம் சென்னையிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமையகத்திலிருந்து இயங்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், எரிசக்தித் துறைச் செயலாளர் திரு. ஆர். ரத்தினசாமி இ.ஆ.ப, தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர் திரு. கே. ஞானதேசிகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

# கடலூரில்
# 50-ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா

கடலூர் சுப்பராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் 50–ஆவது கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி, 20.11.2003 அன்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்றார். அவர் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:–

கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 1,213 பொது விநியோக முழுநேர அங்காடிகளும், 153 பகுதிநேர அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன.

இதில் ஒரு முழுநேர அங்காடியும், 5 பகுதி நேர அங்காடிகளும் மகளிரால் நடத்தப்பட்டு வருகிறது. விருத்தாச்சலம் வட்டத்தைச் சார்ந்த கார்மாங்குடியில் சுயஉதவிக் குழுவினரால் உரைக் கடை ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. வேலைக்கு உணவு திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 22,000 மெ. டன் அரிசி விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு பொது விநியோக அங்காடிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டித் தேயிலைத் தொழிலாளர்களின் துயர்துடைக்க பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது ஒரு சிறப்பான திட்டமாகும். சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் அதிக அளவில் கூட்டுறவுத் துறையில் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். இம்மாவட்டத்தில், செயல்பட்டு வருகின்ற சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக அளவில் கடன் கொடுத்தமைக்கு, கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு மாநில அளவில் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர்.

இவ்விழாவில், மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 15 நபர்களுக்கு ரூ. 9 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 768 நபர்களுக்கு ரூ. 24 இலட்சத்து 56 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு கூட்டுறவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. செ. ம. வேலுச்சாமி அவர்கள் வழங்கினார். பின்னர் அவர் பேசும் போது தெரிவித்ததாவது :

"அடித்தள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கூட்டுறவுத் துறை பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவுத் துறை என்பது ஒவ்வொருவராலும் ரூ.10, ரூ.20 என்று ஒரு சிறுதொகையினை செலுத்தி உருவாக்கப்பட்டது ஆகும். கூட்டுறவுத் துறை சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளில் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறை கடலூர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நன்கு அறிவேன்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையான நிதி நெருக்கடி நிலையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்கள். உலக வங்கி மற்றும் பல்வேறு வங்கிகள்



அரசுக்குக் கடன் அளிக்க மறுத்தது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் திறமையான ஆட்சி நிருவாகத்தால் நிதி நெருக்கடிகளை சமாளித்து திறமையாக அரசு செயல்பட்டு வருவதால், உலக வங்கி தற்போது கடனளிக்க முன் வந்துள்ளது.

கடுமையான நிதி நெருக்கடி சமயத்திலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டித் தொகை ரூ.311 கோடியினை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். கூட்டுறவுத் துறை மூலம், தாங்கள் பெறும் கடனை முறையாகத் திரும்ப செலுத்தும் எண்ணம் அனைவருக்கும் வர வேண்டும். அப்போதுதான் நாமும் உயர்ந்து பிறரையும் உயர்த்த முடியும். கடந்த அரசின் முறையற்ற ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவற்றால் கூட்டுறவுத் துறையின் செயல்பாடு நலிவடைந்திருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சியில், அவைகள் சீர்செய்யப்பட்டு மேலோங்கியுள்ளன.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் ஆகியோரின் துயர் துடைக்கவும், பொதுவினியோகத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் டீ தூள் மற்றும் வேட்டி, சேலைகள் விற்பனை செய்யப்பட்டது.

இதேபோன்று கிராம மக்கள் தயாரிக்கும் சோப்பு போன்ற பொருட்கள் பொதுவினியோக அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.3.50க்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் குறுகிய காலக் கடனாக ரூ.2350.55 கோடியும் மத்திய காலக் கடனாக ரூ.195 கோடியும், சிறுதொழில் கடனாக ரூ.475 கோடியும் பண்ணைச் சாரா கடன் ரூ. 612 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்காக ரூ.112.44 கோடியும் 26,695 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.110 கோடியும் கடன் வழங்கப்பட்டுள்ளது. 9,464 மகளிர்க்கு மகப்பேறு கடனாக ரூ.1.87 கோடியும் சிறுவணிகக் கடனாக ரூ.25.17 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய, வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து காணப்படுகிறது.

இத்துறை, இலட்சக்கணக்கான உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது. இதனை சிறந்த முறையில் நிருவாகம் செய்திட அனைத்து அலுவலர்களும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்'' என்று மாண்புமிகு கூட்டுறவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்விழாவில் நலத்திட்ட உதவிகள், பள்ளி மற்றும் கல்லூரி அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்குக் கேடயம் வழங்கினார்.

விழாவில், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வள்ளல்பெருமான், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எஸ். அருள், கடலூர் நகர்மன்றத் துணைத் தலைவர் திரு. ஜி. குமார், பண்ருட்டி ஒன்றியத் தலைவர் திரு. சொரத்தூர் ஆர். இராஜேந்திரன், கடலூர் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் திரு. சேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில் நெல்லிக்குப்பம் நகர்மன்றத் தலைவர் திருமதி. அம்புஜம், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் திரு. புஷ்பராஜ், மல்லிகா முனுசாமி, ஆர்.கஸ்தூரி, கூட்டுறவாளர்கள் திரு. முருகுமணி, திரு. அன்பழகன், திரு. எல்.எஸ். மணி, திரு. சி.கே. சுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. ரெங்கநாதன் வரவேற்புரையாற்றினார். துணைப் பதிவாளர் சுப்புராயன் நன்றி கூறினார்.

**- என். பாலையா,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*கடலூர்*

# மாண்புமிகு தமிழக முதலமைச்சருடன் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் இணை நிருவாகி சந்திப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 13.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் இணை நிருவாகி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சார்புச் செயலர் (பொது) திரு. ஜெஃபெரின் டியாப்ரே அவர்கள் (Mr. Zephirin Diabre, Associate Administrator, UNDP & Under Secretary General, United Nations, New York) மற்றும் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் இந்தியாவிற்கான உள்ளுறை பிரதிநிதி திருமதி. மேக்சின் ஒல்சன் அவர்கள் (Maxine Olson, Resident Representative, UNDP, India) ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

ஏழை எளிய மக்களின் நலனுக்காகத் திட்டமிட்டுச் செயலாற்றும் வகையில் தொலை நோக்குப் பார்வையோடு தமிழ்நாட்டிற்கான முதல் மனித வள மேம்பாட்டு அறிக்கையினை (Tamil Nadu Human Development Report) தயாரித்துத் தந்துள்ளமைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் இணை நிருவாகி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சார்புச் செயலர் (பொது) திரு. ஜெஃபெரின் டியாப்ரே அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அப்போது, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் புதிய திட்டங்களுக்கு UNDP அமைப்பு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குறிப்பாக மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் UNDP அமைப்பு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தமிழ்நாட்டில் மழை நீர்சேகரிப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும், கிணற்றுப் பாசனத்திற்கு உதவும் வகையில், மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்த UNDP

அமைப்பு தொழில்நுட்ப உதவி மற்றும் நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், தமிழகத்தில் உள்ள கடலோரப் பகுதிகள், கடல் அரிப்பினால் பெரிதும் பாதிக்கப்படுவதால், அதனைத் தடுத்து நிறுத்த தொழில்நுட்ப உதவியும், நிதி உதவியும் UNDP அமைப்பு வழங்க வேண்டும் என்று கோரினார். தமிழ்நாட்டில் பாசனக் கிணறுகளில் பம்பு செட்டுகளை இயக்கவும், மற்றும் கிராமப்புறங்களில் இதர உபயோகங்களுக்கு உதவிடவும், சூரிய ஆற்றலைப் பயன்படுத்தும் வகையில், புதிய திட்டம் வகுக்க வேண்டும் என்றும், அதற்கு UNDP அமைப்பு உதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நிலத்தடி நீரைச் சிக்கனமாகவும், தொடர்ந்தும் பயன்படுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சென்னைக்கு அருகில் உள்ள நிலத்தடி நீரை முறையாகவும், நிரந்தரமாகவும் பயன்படுத்தி சென்னை மாநகருக்கு தொடர்ந்து குடிநீர் வழங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை UNDP அமைப்பு வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழகத்திற்கு மேலும் உதவிகள் புரிய UNDP அமைப்பு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் இணை நிருவாகி திரு. ஜெஃபெரின் டியாப்ரே தெரிவித்துக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் சார்பில், வளர்ந்து வரும் நாடுகளின் தொழில்நுட்ப கூட்டுறவின் சிறப்புப் பிரிவு தனி அலுவலர் (பொறுப்பு) திரு. ரவி ராஜன் (Thiru. Ravi Rajan, Officer- in-charge of the Special Unit on Technical Cooperation Among Developing Countries - TCDC - UNDP, Newyork) நியூயார்க்கில் உள்ள திட்ட நிபுணர் திரு. ரெனாட் மெயர் (Mr. Renaud Meyer, Programme Specialist to Associate Administrator in UNDP, New York) புதுடெல்லியில் உள்ள மனித வள மேம்பாட்டு மையத் தலைவர் டாக்டர் சீதா பிரபு (Dr. Seeta Prabhu, Head Human Development Resource Centre, UNDP, New Delhi) உதவி உள்ளுறை பிரதிநிதி திருமதி. சுரேகா சுபர்வால் (Tmt. Sureka Subarwal, Assistant Resident Representative, UNDP, New Delhi) எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் (Dr. M.S. Swaminathan, Chairman, M.S. Swaminathan Research Foundation) ஆகியோர் உடனிருந்தனர். தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ்,இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறை செயலாளர், திரு. என். நாராயணன்,இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

• • •



## "தேனீ"



- ✶ ராணித்தேனீதான் முட்டைகள் இடும். இவை சில சமயங்களில் ஒரே நாளில் 1,500 முட்டைகள் வரை இடும்.
- ✶ தேன் இருக்கும் இடத்தை ஒரு தேனீ கண்டறிந்துவிட்டால், மற்ற தேனீக்களுக்கு "8" (எட்டு) எண்ணும் எண் வடிவில் சுற்றிப் பறந்து தகவல் தருமாம்.
- ✶ குளிர் காலத் துவக்கத்தில் "சோம்பன்" என்னும் ஆண் தேனீக்கள் இறந்து விடுகின்றன.
- ✶ தேன்கூட்டில் ராணித்தேனீ, பணித்தேனீ, சோம்பன் எனப்படும் ஆண்தேனீ என்ற மூன்று வகையான தேனீக்கள் உள்ளன.
- ✶ ராணித்தேனீக்கு கூம்பு வடிவ பெரிய அறையும், சோம்பன் தேனீக்கு நடுத்தர அளவு அறையும், பணித்தேனீக்கு சிறிய அறையும் கொண்டதாக தேனீக்கள் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன.
- ✶ ஒரு தேன் கூட்டில் 80 ஆயிரம் தேனீக்கள் வரை இருக்கும்.

# குழந்தைகளுக்கான சத்துணவில் கறிவேப்பிலை மற்றும் முருங்கை இலைப் பொடி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்திலுள்ள குழந்தைகளுக்கு வைட்டமின் ''ஏ'' உயிர்ச்சத்துக் குறைபாட்டினைப் போக்கிடும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவில், கறிவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கை இலைப் பொடியினை சேர்த்து வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைவற்ற மாநிலமாக மாற்றுவதற்கு, குழந்தைகளிடையே காணப்படும் சத்துக் குறைபாடுகளை ஆரம்பக் காலத்திலேயே கண்டறிந்து, அவற்றை நீக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் அமையப் பெற்ற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் ஓர் அங்கமாக, தமிழ்நாட்டிலுள்ள 3 வயது தொடங்கி, 5 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு வைட்டமின் ''ஏ'' உயிர்சத்துக் குறைபாட்டினைப் போக்குவதற்கு அங்கன்வாடிகளில் அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவில் கறிவேப்பிலைப் பொடி அல்லது முருங்கை இலைப்பொடி ஆகியவற்றை சேர்த்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார். இதன் அடிப்படையில் இந்தத் திட்டம் முதற்கட்டமாக குறிப்பிட்ட மாவட்டங்களில் பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்பட்டது.

இதன்படி, அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளின் வைட்டமின் ''ஏ'' உயிர்ச்சத்துத் தேவையை ஈடுசெய்யும் வகையில்,





கறிவேப்பிலைப் பொடி அல்லது முருங்கை இலைப் பொடி ஆகியவற்றை சத்துணவுடன் சேர்த்து வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்களில் சத்துணவு சாப்பிடும் ஒவ்வொரு குழந்தைக்கும்நாள் ஒன்றுக்கு 2 கிராம் வீதம், வாரத்தில் 5 நாள்கள் கறிவேப்பிலைப் பொடி அல்லது முருங்கை இலைப் பொடி அவர்கள் உண்ணும் உணவோடு சேர்த்து வழங்கப்படும்.

இந்தத் திட்டம் முதல்கட்டமாக, தேனி, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 6 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஒன்றியங்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இம்மாவட்டங்களில் உள்ள ஆண்டிபட்டி, பெரியகுளம், பரங்கிமலை, காஞ்சிபுரம் கிழக்கு, அணைக்கட்டு, பேரணாம்பட்டு, துரிஞ்சாபுரம், வெம்பாக்கம், கடலூர் கிழக்கு, குறிஞ்சிப்பாடி, திருமானூர், வேம்பன்தட்டை ஆகிய 12 ஊராட்சி ஒன்றியங்களில் ஆண்டுக்கு 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம், இந்த ஒன்றியங்களில் உள்ள சுமார் 35 ஆயிரம் குழந்தைகள் பயனடைவார்கள். இதற்காக, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் செயல்படும் பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலம் கறிவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கை இலைப் பொடி தயாரிக்கப்பட்டு அங்கன்வாடி மையங்களுக்கு அளிக்கப்படும்.

கறிவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கை இலைப் பொடியை குழந்தைகளுக்கு சத்துணவில் சேர்த்து வழங்கும்போது, அவற்றில் உள்ள பீட்டா கரோட்டின், வைட்டமின் ''ஏ'' ஆக மாறி குழந்தைகளுக்குத் தேவையான சக்தியினை அளிக்கிறது. மேலும், கறிவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கை இலைப் பொடியினைத் தயாரித்து வழங்கும் வாய்ப்பு அந்தப் பகுதிகளில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுவதால் அவர்களின் வருமானம் பெருகவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

• • •

# மாண்புமிகு முதலமைச்சருடன் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள் சந்திப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், உகாண்டா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர்கள் சந்தித்துப் பேசினர். அப்போது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சிவி. பிரம்மானந்தம் அவர்கள் உடன் இருந்தார்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கடந்த 9.11.2003 அன்று சென்னையில் 4–ஆவது சர்வதேச எய்ட்ஸ் நோய்த் தடுப்பு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம் "எய்ட்ஸ் நோய் தடுப்பதற்கான இப்போதைய ஒருங்கிணைந்த தீர்வு'' என்பதாகும். இந்த மாநாட்டில் HIV / AIDS நோய் மருத்துவத்தில் தேர்ந்த சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், உகாண்டா, இத்தாலி ஆகிய பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும், தேசிய அளவிலான மருத்துவ வல்லுநர்களும் பங்கேற்று, உலக அளவில் எய்ட்ஸ் நோயைத் தடுப்பது குறித்து தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

4–ஆவது சர்வதேச எய்ட்ஸ் நோய் தடுப்பு மாநாட்டில் பங்கேற்ற இந்தப் பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. வி. பிரம்மானந்தம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர். அப்போது, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள விரிவான எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டங்கள் குறித்து தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். பொதுமக்களுக்கு இந்த நோய் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதில் தமிழகத்தின் செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளதாகப் பாராட்டினர்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டங்களுக்கு தங்களது உதவிகளை அளிப்பதற்குத் தயாராக உள்ளதாகவும், இந்தப் பன்னாட்டு மருத்துவ

நிபுணர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைச் சந்தித்த பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள் பற்றிய விவரம் வருமாறு :

1. செல்வி கவுண்ட்ஸ் அல்பினா (Ms. Countess Albina, Founding President, AFSB Worldwide, Switzerland)

2. டாக்டர் ஹன்ஸ் ஜேகெர் (Dr. Hans Jaeger, Chairperson, KIS - Curatorium for Immunodeficiency, Germany)

3. பேராசிரியர் ஜோனதன் நார்டென் (Prof. Jonathan Norden, Chairman, Jefferiss Research Laboratories, UK)

4. டாக்டர் சிசிலியோ லோபஸ் (Dr. Cecilio Lopez, Centro Nacional de Microbiologia Instituto de Saluk Carlos III Majadahonda, Madrid, Spain)

5. டாக்டர் லிசா எம்ஃப்ரென்கெல், எம்.டி. (Dr. Lisa M.Frenkel, MD, Professor of Pediatric and Laboratory Medicine, Division of Virology, USA)

6. டாக்டர் ஏலி கடப்பிரா (Dr. Eli Katabira, Department of Medicine, Markerere Medical School, Kampala, Uganda)

7. டாக்டர் ஸ்டெஃபேனோ வெல்லா (Dr. Stefano Vella, Chair, HIV Clinical Research Program, Director, Department of Drug Research and Evaluation, Istituto Superiore di sanita (ISS) Italy)

8. டாக்டர் கோய்ன் வான் ரோம்பெ (Dr. Koen Van Rompay, Associate Research Virologist, California National Primate Research Centre, University California, USA)

இந்தச் சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *



மகாகவி பாரதியாரின் 122 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (11.12.2003)



# உலக வங்கியின் சென்னை மையத்திற்கு புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 17.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், வாஷிங்டனில் உள்ள உலக வங்கியின் துணைத் தலைவர் மற்றும் கட்டுப்பாட்டாளரான திரு. ஃபெய்சூல் எச். சௌத்ரி அவர்கள் (Mr. Fayezul H. Choudhury, Vice President and Controller, The World Bank, Washington) சந்தித்தார். அப்போது உலக வங்கியின் சென்னை மையத்தின் தலைமை அலுவலர் திரு. ரவீந்தர் பாட்டியா அவர்கள் (Mr. Ravinder Bhatia, Centre Head, The World Bank, Chennai) உடன் இருந்தார்.

உலக வங்கி தனக்கென்று உள் அலுவலகம் ஒன்றினை நிறுவ, 54 நாடுகளைப் பரிசீலித்து அவற்றில் இந்தியாவைத் தேர்ந்தெடுத்து, அதன் பிறகு இந்தியாவில் சென்னையைத் தேர்ந்தெடுத்து, சென்னையில் அந்த உள் அலுவலகம் (Back Office) நிறுவப்பட்டுள்ளது என்றும், இந்தத் தெரிவினால் உலக வங்கி மிகவும் திருப்தி அடைந்துள்ளதாகவும், இந்தச் சந்திப்பின் போது திரு. ஃபெய்சூல் எச். சௌத்ரி அவர்கள் தெரிவித்தார். மேலும் இந்த மையத்தில், தொடக்கத்தில் 70 பணியாளர்கள் மட்டுமே பணியாற்றினார்கள் என்றும் தற்போது, 180 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார். உலக வங்கியின் அனுபவத்தைப் பொறுத்த மட்டில், இந்தச் சென்னை மையம் மிகவும் நல்ல முறையில் இயங்கி வருவதாகத் தெரிவித்த திரு. ஃபெய்சூல் எச். சௌத்ரி, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின் அடிப்படையில் தமிழக அரசின் முழு உதவியுடன் இந்த அளவிற்கு வெற்றிகரமாக இந்த மையம் வளர்ந்துள்ளது என்று கூறினார். தற்போது, உலக வங்கியின் சென்னை மையம் வாடகைக் கட்டடத்தில்

இயங்கி வருகின்றது என்றும், மையத்தின் செயல்பாடு மிகவும் திருப்திகரமாக அமைந்து உள்ளதால், உலக வங்கி நிரந்தரமாகச் சென்னையில் செயல்படத் தனக்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவது, முடிவெடுத்துள்ளது என்றும் தெரிவித்தார். இதற்காகத் தமிழக அரசு, தரமணியில் டைடல் பார்க் அருகில் 3.55 ஏக்கர் நிலம் ஒதுக்கியதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இந்த இடத்தில் உலக வங்கியின் சென்னை மையத்தின் புதிய கட்டடப் பணி உடனடியாக தொடங்கப்படும் என்றும், அடுத்த ஆண்டு 2004 செப்டம்பர் மாதத்தில் பணி முடிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் சென்னை மையம் இயங்கத் தொடங்கும் என்றும் திரு. ஃபெய்சூல் எச். சௌத்ரி அவர்கள் தெரிவித்தார்.

உலக வங்கியின் சென்னை மையம் மிகவும் சிறப்புடன் நடைபெற்று வருவது குறித்தும், அது சொந்தக் கட்டத்தில் இயங்க இருப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது தலைமைச் செயலாளர், திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் திரு என். நாராயணன் இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பவியல் செயலாளர் திரு. விவேக் ஹரி நாராயணன் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *




ஒட்டைச்சிவிங்கிக்கு மற்ற பிராணிகளைப் போன்று, கண்டபடி உறுமவோ சப்தமிடவோ தெரியாது. எப்போதாவது மென்மையாக ஒரு விசில் சப்தம் போல உண்டாக்கும். இது, அதன் உடல் வலுவினாலும் உதைக்கும் திறமையினாலும் எதையும் சமாளித்துக் கொள்ளும். ஒரு சிங்கம் கூட இதன் உதையில் உருத்தெரியாமல் போய்விடும். ஒட்டைசிவிங்கியின் உயரம் 5.40 மீட்டர் அதன் கழுத்துப் பகுதி மட்டும் 2.10 மீட்டர்.



# முதுநிலை பட்டப்படிப்புக்குரிய புதிய வகுப்பறைக் கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதுநிலை பட்டப்படிப்புக்குரிய புதிய வகுப்பறைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னையில் உள்ள காயிதே மில்லத் மகளிர் அரசினர் கல்லூரியில் ஆங்கிலத் துறைப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றிய டாக்டர் பியாட்ரிக்ஸ் டி'ஸோசா அவர்கள் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். இவர், சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியில் முதுநிலைப் பட்டப் படிப்பு வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட, தனது நாடாளுமன்ற தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.25 இலட்சத்தை ஒதுக்கித் தந்துள்ளார். இந்த நிதியின் மூலம் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.11.2003 அன்று அடிக்கல் நாட்டினார்.

மகளிர் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு சட்டப் பேரவையின் நியமன உறுப்பினராக 1991ஆம் ஆண்டு தன்னை நியமனம் செய்ததையும், பின்னர் மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவராக தன்னை நியமித்ததையும் நினைவு கூர்ந்த டாக்டர் பியாட்ரிக்ஸ் டி'ஸோசா அவர்கள் இந்த நிகழ்வுகளே தனது பொது வாழ்க்கைக்கு வித்திட்டன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நன்றியுடன் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது, கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைச் செயலாளர் செல்வி. லீனா நாயர் இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பியாட்ரிக்ஸ் டி'ஸோசா, கல்லூரி கல்வித் துறையின் இயக்குநர் திரு. முத்து வீரப்பன் ஆகியோர் உடனிருந்தனர். ●



# தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்கான புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு வக்ஃபு வாரியம் உருவாக்கப்பட்ட 1957 ஆம் ஆண்டு முதல், வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இதற்கு சொந்தக் கட்டடம் உருவாக்கித் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் 1981 ஆம் ஆண்டில், அன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது அரசு 3 இலட்சத்து 7 ஆயிரத்து 692 ரூபாயை வக்ஃபு வாரியத்துக்கு வழங்கியது. இந்தத் தொகையைக் கொண்டு சென்னை பாரிமுனை அருகே ஜாபர் சிராங் தெருவில் 13,024 சதுர அடி பரப்பு கொண்ட இடத்தை, வாரியம் வாங்கியது. எனினும், கடந்த 19 ஆண்டுகளாக இந்த இடத்தில் வக்ஃபு வாரியத்திற்கான கட்டடத்தைக் கட்டுவதற்கு எந்தவித முன் முயற்சியும் வாரியத்தால் இதுவரை எடுக்கப்படாதிருந்த நிலையை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், வக்ஃபு வாரியம் இனிச் சொந்தக் கட்டடத்தில்தான் இயங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் 40 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டார்கள்.

இதன்படி, சென்னை பாரிமுனை ஜாபர் சிராங் தெருவில் அமைய உள்ள தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கான புதிய அலுவலகக் கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கான இந்தப் புதியக் கட்டடம் 11,150 சதுர அடியில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதியக் கட்டடம் கட்ட ஒதுக்கீடு செய்து தந்துள்ள ரூபாய் 40 இலட்சம் போக எஞ்சியத் தொகை மத்திய வக்ஃபு கழகத்திடமிருந்து (Central Wakf Council) கடனாகப் பெற்று கட்டடம் உருவாக்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்து, தொழிலாளர் நலம் மற்றும் வக்ஃபு வாரிய அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவர் ஜனாபா. பதர் சயீத், தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். பி. எம்.சையது கான், உள்துறைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர் திரு. சையத் முனீர் ஹோதா, இ.ஆ.ப., தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களான திரு. இ. ஏ. லியாவுதீன் சேட் எம்.எல்.ஏ., திரு. எம்.ஏ. ஹக்கீம் எம்.எல்.ஏ., திரு. எம். எஸ். அப்துல் காதர், திரு. எம்.கே. கான், திருமதி. ஏ.எஸ்.பீ.பீ. ஜான், டாக்டர் எஸ். எம். தஸ்தகீர், திரு. எம். முகமது சிக்கந்தர், திரு. எம்.எஸ்.ஏ. ஷாஜகான், டாக்டர் ஹாஜா கே. மஜீத், வக்ஃபு வாரிய செயல் அலுவலர் திரு. முகம்மது ஜமாலுதீன் மற்றும் கட்டடக் கலை வல்லுநர் செல்வி சாரா ஹுசைன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *



## எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அறிவியல் தமிழ்ப் பாடநூல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 21.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் பயிலுகின்ற எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அனைத்து மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்கென தமிழக அரசால் தயாரிக்கப்பட்டுள்ள அறிவியல் தமிழ்ப் பாடநூல் புத்தகங்களை வெளியிட்டார். முதற்கட்டமாக அச்சடிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 17 இலட்சம் அறிவியல் தமிழ்ப் பாடநூல் புத்தகங்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற குறிக்கோளுடன், தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1995ஆம் ஆண்டிலேயே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "அறிவியலிலும் தமிழ் அனைத்திலும் தமிழ்" என்னும் முழக்கத்தை அறிவித்து, முத்தமிழோடு நான்காம் தமிழாக அறிவியல் தமிழ் வளரத் தமிழக முதலமைச்சர் அவர்கள் வித்திட்டார். தமிழ்நாட்டில் எந்த ஒரு குழந்தையும், தமிழ் மொழியைக் கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாது என்னும் இலட்சியத்தோடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளின் பாடத் திட்டங்களிலும் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப் படுவதை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை மாணவ, மாணவிகள் அனைவருக்கும் அறிவியல் தமிழ் (Scientific Tamil) என்னும் பாடத்தை இந்த ஆண்டிலேயே கற்பிக்க அரசு ஆணை பிறப்பித்து அதனை 15.8.2003 அன்று நடைபெற்ற சுதந்திரத் திருநாளில் மகிழ்ச்சியுடன் அறிவித்தார்கள்.

இதன்படி எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்புக்கும் தனித் தனியாக அந்தந்த வகுப்புக்கு ஏற்ற வகையில் அறிவியல் தமிழ் பாடத் திட்டம் வகுக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் படிக்கின்ற எல்லா மாணவ, மாணவியர்களுக்கும் தேவைப்படுகின்ற 1 கோடியே 33 இலட்சம் அறிவியல் தமிழ்ப் பாடநூல் புத்தகங்களை ரூ.5.42 கோடி செலவில் அச்சிட்டு வழங்கவும், இந்த அறிவியில் தமிழ் பாடம் தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் முதன் முறையாக அறிமுகப்படுத்துவதால், இதற்கான பாடநூல் புத்தகங்களை இலவசமாக வழங்கிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

இதன் முதற்கட்டமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளுக்குத் தேவையான ஏறத்தாழ 17 இலட்சம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ள இந்த அறிவியல் தமிழ்ப் பாடநூல் புத்தகங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 21.11.2003 அன்று வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை, உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர் இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் ஆர்.கே. கன்னா, தொடக்கக் கல்வித் துறை இயக்குநர் இரா. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர். ✶

# குற்ற வழக்குத் தொடர்வுத் துறைக்கு வாகனங்கள்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், குற்ற வழக்குத் தொடர்வுத் துறை துணை இயக்குநர்களின் (Deputy Directors of Prosecution) பயன் பாட்டிற்கென ரூ. 42.27 இலட்சம் மதிப்பிலான 11 ஜீப் வாகனங்களை வழங்கினார்.

தமிழகத்தில், குற்ற வழக்குகள் தொடர்பான பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளுதல், நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குப் பணிகளைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை குற்ற வழக்குத் தொடர்வுத்துறை (Department of Prosecution) மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் குற்ற வழக்குகளுக்காக நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படும் வரைவு குற்றக் குறிப்பாணைகளைத் தயார் செய்து தருவது, குற்ற வழக்குப் பணிகளை மேற்கொள்வோரின் செயல்பாடுகளை மேலாய்வு செய்வது, மற்றும் காவல் துறையினருக்கு சட்டம் தொடர்பான கருத்துகளை வழங்குவது ஆகிய பணிகளை செயல்படுத்துகின்ற இத்துறையின் துணை இயக்குநர்கள், தங்களது அதிகார வரம்பு ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் உள்ளதால், குற்றங்களைக் கண்டுபிடித்து தவறு செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், வழக்குத் தொடர்பான பணிகளை விரைந்து மேற் கொள்ளவும், தங்களுக்கு வாகனவசதி வழங்கிட வேண்டும் என்று நீண்ட நாள்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துறைவாரியாக ஆய்வு மேற்கொண்ட போது, குற்ற வழக்குத் தொடர்வுத் துறையின் மேலாய்வில் இவர்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வாகன வசதி வழங்க ஆணையிட்டார்.

இந்த ஆணையின்படி குற்ற வழக்குத் தொடர்வுத் துறையின் 11 துணை இயக்குநர்களின் பயன்பாட்டிற்கென ரூ.42.27 இலட்சம் மதிப்பிலான ஜீப் வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று வழங்கினார்கள். குற்ற வழக்குத் தொடர்வுத் துறை துணை இயக்குநர்கள் சென்னை, திரு. வி. தியாகராஜன், கோவை திரு. பி. பாலசுப்பிரமணியன், கடலூர் திரு. டி. ராஜமாணிக்கம், காஞ்சிபுரம் திரு. எஸ். ஹரிஹரன், மதுரை திரு. டி. வீரக்குமார். சேலம் திருமதி வி. ராஜேஸ்வரி, சிவகங்கை திரு. சி.ஏ. வேணுகோபால், தஞ்சாவூர் திரு. பி.எம். அப்துல் கரீம், திருச்சிராப்பள்ளி திரு. ஐ. முகமது சிராஜுதீன் மீரா, திருநெல்வேலி திரு. எம்.குணசேகரன் மற்றும் வேலூர் திரு ஜி. ராஜன்பாபு ஆகியோர் தங்களது வாகனங்களுக்குரிய சாவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

வழக்குகள் தொடர்பான பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளும் வகையில் தங்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு குற்றவழக்குத் தொடர்வுத் துறையின் துணை இயக்குநர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ரானேஷ் இ.ஆ.ப., மற்றும் உள்துறைச் செயலாளர் திரு. சையத் முனிர் ஹோடா இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் தலைவர் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 17.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. சுபீர் ரஹா அவர்கள் (Mr. Subir Raha, Chairman and Managing Director, Oil and Natural Gas Corporation, New Delhi) சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது, புதுடெல்லியில் உள்ள எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. சுபீர் ரஹா அவர்கள், தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் உள்ள ஆழ்கடலில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கிடைப்பதற்கு உள்ள சாத்தியக் கூறுகளைக் கண்டறிய, எதிர்வரும் 2004ஆம் ஆண்டில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்தார். குறிப்பாக, வங்காள விரிகுடாவில், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட ஆழ்கடலில் இந்தப் பணி 2004ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று தெரிவித்தார். இந்தத் திட்டத்திற்காகவும், எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிப்பதற்கான பிற திட்டங்களை மேற்கொள்வதற்காகவும், 1,000 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதாகத் தெரிவித்தார். மேலும், குத்தாலம் பகுதியில் தற்போது கிடைத்துள்ள இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சார வாரியத்தினால் அல்லது எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்தின் கூட்டு முயற்சியாக புதிய இயற்கை எரிவாயு நிலையம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்றும் குறிப்பிட்டார். இதனை உடனடியாகச் செயல்படுத்தலாம் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு. அருண் ராமநாதன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர். •



# விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 12–11–2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள 13 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டதற்குரிய ஆணைகளை நேரில் வழங்கி வாழ்த்தினார்கள்.

தமிழகத்தின் சார்பில் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று விருதுகளைத் தேடித் தரும் எதிர்கால சேம்பியன்களை உருவாக்கும் வகையில், விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குப் பயிற்சி மற்றும் உதவிகளை வழங்குகின்ற விளையாட்டு வீரர் மேம்பாட்டுத் திட்டம் 1991–1996ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2001ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சி பொறுப்பேற்றதும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டமிடப்பட்ட பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் வருங்காலத்தில் பல்வேறு சாதனைகளை சர்வதேச அளவில் நிகழ்த்துவதற்காக, திறமை வாய்ந்த பயிற்றுநர்கள் மூலம், இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளையும், உதவிகளையும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் தற்போது மேலும் 13 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கே.ரேவதி, வெய்ன் பிப்பின், ஏ. அனிச்சம் (Athletics), ஹரிகா ரெட்டி, வினோத்குமார், சுருதி அருண்குமார், பி.புவனேஸ்வரி, எஸ்.சுரேஷ்குமார் (Swimming), டி.ராஜா, டி.துவாரகேஷ் (Basket Ball), அபர்ணா மோகன் (Table Tennis), அஜய் செல்வராஜ் (Tennis), சுவாதி சஞ்சய் (Rowing) ஆகியோர் இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த 13 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு, எதிர்கால சேம்பியன்களாக உருவாகும் வகையில் விளையாட்டு வீரர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய ஆணைகளை, 12–11–2003 அன்று நேரில் வழங்கினார்கள். அப்போது, எதிர்காலத்தில் பங்கு பெற உள்ள தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகள் அனைத்திலும் மகத்தான வெற்றி பெற்றுப் புகழ் சேர்க்க வேண்டும் என்று தனது வாழ்த்துகளை அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநில முதலமைச்சரோடு ஆலோசனை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை மாநகரில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை சூழ்நிலை குறித்தும், கடந்த 4 ஆண்டுகளாக சென்னை மாநகரம் எதிர்நோக்கி வரும் கடுமையான வறட்சி குறித்தும் மாண்புமிகு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு கடந்த 15.11.2003 அன்று கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தில் சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வகையில் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாடு பம்ப் செய்து எடுத்துக் கொள்வதற்கு ஆந்திரப்பிரதேச அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, 28.11.2003 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஐதராபாத்திலுள்ள ஆந்திர மாநில அரசின் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் திரு.சந்திரபாபு நாயுடுவை நேரில் சந்தித்து கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாடு பம்ப் செய்து கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

கடந்த 55 ஆண்டுகளில் இல்லாத வகையில், தமிழகத்தில் நீர் ஆதாரங்களில் முன் எப்போதும் இருந்திராத வகையில் மிகக் குறைந்த அளவில் நீர் கையிருப்பு இருப்பதைக் குறித்தும், இதனால் சென்னை மாநகர மக்கள் எதிர்நோக்கியுள்ள கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை குறித்தும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கு கண்டலேறு



நீர்த்தேக்கத்திலிருந்து நீரைத் திறந்துவிடுவதன் அவசியம், இதைத் தவிர வேறு மாற்று வழிமுறை எதுவும் இல்லை என்றும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

கண்டலேறு – பூண்டி கால்வாய் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணிகள் ஏற்கெனவே ஆந்திரம் மற்றும் தமிழகப் பகுதிகளில் முடிவடைந்துள்ள நிலையில் இந்தக் கால்வாய் மூலம் வரும் நீரில் மிக அதிக அளவில் இழப்பு ஏற்படாது என்றும், குறைந்தபட்சம் 1 டி.எம்.சி. தண்ணீர் பூண்டிக்கு வந்து சேரும் என்றும், இதன்மூலம் சென்னை மாநகர மக்களுக்கு 15–12–2003க்குப் பின்னர் மேலும் மூன்று மாதங்களுக்கு குறைந்தபட்ச அளவிற்கு குடிநீர் வழங்க முடியும் என்றும் தமிழக முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

சென்னை மாநகர மக்கள் எதிர்நோக்கியுள்ள மோசமான சூழ்நிலை குறித்து தாம் உணர்ந்துள்ளதாக ஆந்திரப்பிரதேச முதல்வர் தெரிவித்தார். மேலும் இப்பிரச்சினை குறித்து விரிவாக ஆராய்ந்து அடுத்த இரண்டு, மூன்று நாட்களில் தனது முடிவைத் தெரிவிப்பதாக ஆந்திர முதல்வர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதி அளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலர் மற்றும் மேம்பாட்டு ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர், பொதுப்பணித்துறைச் செயலர் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் சார்பில் அம்மாநில நிதி அமைச்சர் திரு. யனமல ராமகிருஷ்ணுடு (Shri Yanamala Ramakrishnudu), பெரிய திட்டங்கள் துறை அமைச்சர் திரு.காதீம் ஸ்ரீஹரி (Shri Kadiam Srihari), ஆந்திரப் பிரதேச தலைமைச் செயலாளர், ஆந்திர முதல்வரின் முதன்மைச் செயலாளர், நீர்ப்பாசனத் துறைச் செயலாளர், நீர்ப்பாசனத் துறை (திட்டங்கள்) செயலாளர் ஆகியோரும் உடனிருந்தனர். ❖

## கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை



"ஆந்திர மாநில முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களே, ஆந்திர மாநில மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, உயர் அதிகாரிகளே, பல்வேறு பணிகளுக்கிடையில் எனது கோரிக்கையை ஏற்று மிகக்குறைந்த கால அளவில் இந்தச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்த ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளாக கடுமையான வறட்சி மற்றும் பருவ நிலை தவறியதால் சென்னை மாநகரம் தொடர்ச்சியாக கடும் வறட்சியைச் சந்தித்து வருகின்ற சூழ்நிலையைத் தாங்கள் அறிவீர்கள் என்பது எனக்குத் தெரியும். கடந்த 2001 மே முதல் சென்னை மாநகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டுச் சூழ்நிலையை பல்வேறு வகையான நடவடிக்கைகளின் மூலம் ஓரளவுக்கு சமாளித்து வருகின்றோம்.

இந்த ஆண்டும் (2003) சென்னை மாநகரம் கடுமையாக, இதுவரை முன் எப்போதும் இருந்திராத வகையில் குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு தேவையான குடிநீர் வழங்க வேண்டிய கடுமையான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தற்போது நாங்கள் குடிநீர் வழங்குவதை குறைத்துள்ளோம். தற்போது ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்ற வகையில் தான் குடிநீர் வழங்கி வருகிறோம்.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழையிலிருந்து நாங்கள் பெற வேண்டிய நீரின் அளவு துரதிருஷ்டவசமாக மிகவும் குறைந்த அளவே கிடைக்கப் பெற்றுள்ளது. வடகிழக்குப் பருவ மழை மூலமாகத் தான் சென்னை மாநகரின் பெரும்பான்மையான நீர்த் தேவை எதிர்கொள்ளப் படுகின்றது.

ஆனால் இந்த ஆண்டு இதுவரை எதிர்பார்த்த நல்ல பலன் கிடைக்கவில்லை. கடந்த பல நாட்களாக நாங்கள் பரவலான குறைந்தபட்ச மழையையே பெற்றுள்ளோம். குறைந்த கால அளவில் எங்களுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அதிக அளவில் நீர் வரத்து இருந்தால் தான் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர் மட்டம் உயரும். பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகிய மூன்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள நீரின் அளவு கடந்த 27.11.2003 அன்று 299 மில்லியன் கன அடியாக இருந்தது.

இது இந்த மூன்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் மொத்த கொள்ளளவான 7,412 மில்லியன் கன அடியில் வெறும் 4 சதவிகிதம் தான். தற்போது உள்ள நீரின் கொள்ளளவானது ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்குவதன் மூலம் டிசம்பர் 15, 2003 வரைதான் போதுமானதாக இருக்கும். கடந்த 55 ஆண்டு காலங்களில் இதுபோன்ற ஒரு மோசமான சூழ்நிலையைச் சந்தித்ததில்லை.

கடந்த 11.5.2000 முதல் 31.12.2000 வரை 3.591 டி.எம்.சி. தண்ணீரும், 1.1.2001 முதல் 19.11.2001 வரை 3.439 டி.எம்.சி. தண்ணீரும், 1.1.2002 முதல் 29.7.2002 வரையில் 3.260 டி.எம்.சி. தண்ணீரும், கிருஷ்ணா நதி மூலம் கடந்த மூன்றாண்டுகளில் சென்னை நகரம் பெற்றுள்ளது. ஆனால், கிருஷ்ணா நதி மூலம் ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீர் பெறுவதற்கு உரிமை உள்ளது. கண்டலேறு நீர்த்தேக்கத்தில் உள்ள குறைவான நீர் கையிருப்பின் காரணமாக தற்போது 2003 ஆம் ஆண்டு இதுவரை சென்னை மாநகரத்துக்குத் தண்ணீர் கிடைக்கப் பெறவில்லை.

கடந்த மார்ச் 2003 ஆம் ஆண்டு சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் பொருட்டு கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீரை பம்ப் செய்து கொள்வதற்கு அனுமதி வேண்டி எங்கள் தலைமைச் செயலாளர் ஆந்திரப் பிரதேச தலைமைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதினார். கண்டலேறு பூண்டி கால்வாய் பழுதடைந்த நிலையில் அதனைச் செப்பனிட்டு கான்கிரீட் போடும் பணிகள் நடைபெற்று வந்த வரையில் தமிழக அரசின் வேண்டுகோளை அந்தச் சூழ்நிலையில் ஆந்திரப் பிரதேச அரசால் செயல்படுத்த முடியவில்லை.

கடந்த மே 2003 தாங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் கண்டலேறு பூண்டிக் கால்வாய் கான்கிரீட் லைனிங் பணிகள் ஆகஸ்ட் 2003க்குள் முடிந்து விடும் என்று எனக்கு எழுதியிருந்தீர்கள். அந்தப் பணிகள் தற்போது முடிவடைந்து விட்டன என்பதை நான் அறிவேன். தமிழகத்தின் பங்காக உள்ள இடங்களில் சீரமைக்கும் பணி மற்றும் கான்கிரீட் லைனிங் போடும் பணியும், நவம்பர் 30, 2003க்குள் முடிவடைந்து விடும்.

இந்தச் சூழ்நிலையில் தற்போது கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து உள்ள நீர் அளவானது சென்னை மாநகர குடிநீர் தேவைக்குத் திறந்துவிட முடியாத நிலையில் அங்கிருந்து பம்ப் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற எங்களது வேண்டுகோளைப் பரிசீலனை செய்யுமாறு தங்களை வலியுறுத்துவதற்காக வந்துள்ளோம்.

கண்டலேறு நீர்த்தேக்கத்தில் தற்போது 4.1 டி.எம்.சி. தண்ணீர் தான் இருப்பு உள்ளது என்பதை அறிவோம்.

ஆனால் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீர் இருந்தால்தான் தண்ணீர் திறந்துவிட முடியும் என்பதையும் அறிவோம். ஆனால் எங்களுக்கு இதைவிட வேறு வழி தெரியவில்லை. எனவே சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் 3 டி.எம்.சி. தண்ணீரை கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து பம்ப் செய்துகொள்ள அனுமதிப்பதுடன் அந்த நீர் ஜீரோ பாயிண்டுக்குச் செல்லும்வரை தேவையான நடவடிக்கைகளை, மேற்கொள்ள வேண்டும் என்றும் தங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் அகலமான நீண்ட பரப்புக் கொண்ட இந்தக் கால்வாயில் தற்போது பெய்துள்ள மழையாலும் ஏற்கெனவே கான்கிரீட் லைனிங் பணிகள் நிறைவடைந்துள்ளதாலும் நீர் இழப்பு அதிக அளவில் இருக்காது.

எனவே, இதன்மூலம் குறைந்தபட்சம் 1 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும் என்று நம்புகின்றோம். இந்த வகையில் கிடைக்கும் நீரைக் கொண்டு சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையை தற்போதுள்ள நடைமுறையின்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்குவதுபோல் தொடர்வதன் மூலம் மேலும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு குடிநீர் வழங்க முடியும்.

சென்னை மாநகர மக்களின் வாழ்க்கை ஜீவாதாரப் பிரச்சினையான குடிநீர்த் தேவைக்காக கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து குடிநீருக்காக தண்ணீரைப் பம்ப் செய்ய அனுமதிப்பதுடன் அந்த நீரானது ஜீரோ பாயிண்ட் வரை பத்திரமாக வந்து சேர்வதற்கும் இடைப்பட்ட இடங்களில் அந்த தண்ணீரை யாரும் தவறாகப் பயன்படுத்தாத வகையில் கண்காணிப்புப் பணிக்காக தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்து கொடுக்க வேண்டுமென்றும் தங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த ஆண்டு டிசம்பர் 2002 என்னுடனான தங்களுடைய சந்திப்புக்குப் பின்னர் வெலுகோடு நீர்த்தேக்கம் மற்றும் சோமசீலா நீர்த்தேக்கத்திற்கும் இடையிலான பகுதியில் கால்வாய் அமைக்கும் பணி துவங்கியது. சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கி வைக்கத் தேவையான மற்ற நடவடிக்கைகளான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் சாலைகளை மாற்றி அமைக்கும் பணிகள் விரைவாக செய்ததன் மூலம் அவற்றின் நீர்த்தேக்க முழுக் கொள்ளளவை எட்ட முடிந்தது.

அதேபோன்று கண்டலேறு பூண்டி கால்வாய் சீரமைப்புப் பணிகள் மற்றும் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணிகளும் மிகவும் விரைவாக வேகமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையில் தங்களுடைய தனிப்பட்ட அக்கறைக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கண்டலேறு அணையிலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிடுவதற்கான அனுமதியினை உடனடியாக வழங்கி, ஒருவார காலத்திற்குள் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்குவீர்களேயானால், நானும் சென்னை மாநகர மக்களும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

வணக்கம்.''



# கலைவல்லுநர்களின் நலனைக் காப்பதில் அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

கலைவாணர் அரங்கில் இன்று கலைமாமணி விருது வழங்கும் விழா.

கண்பட்ட இடம் எல்லாம் கலைமணம் கமழ்கிறது! காரணம் என்ன?

இத்தனை கலை வித்தகர்களும் மொத்தமாய்க் கூடியிருந்தால் கலை மணம் கமழாதா என்ன?

இயலிலும், இசையிலும், நாடகத்திலும் சாதனை படைத்த சகாப்தங்களை இங்கு நான் காண்கிறேன்.

உங்களை காண்பதில் மகிழ்ச்சி. உங்களுக்கு விருதுப் பட்டயம் வழங்குவதில் மகிழ்ச்சி. ஏற்கெனவே விருது பெற்ற மூத்த கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்குவதில் மகிழ்ச்சி.

சிறந்த நாடகக் குழுவுக்கும், சிறந்த கலை நிறுவனத்துக்கும் கேடயம் வழங்குவதில் மகிழ்ச்சி.

**கலையை வளர்க்கும் தாய்**

காலத்தை வென்ற கலை மேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்ததில் ஏற்படும் மகிழ்ச்சி. இப்படி மகிழ்ச்சிகள் பலவற்றைத் தருகின்ற மகிழ்ச்சி விழா இது! மகிழ்ச்சித் திருநாள் இன்று!

இந்த மண் கலை வளர்த்த மண்! கலை வளர்க்கும் மண்! கலைகளை உலகம் கண்டு மகிழ உருவாக்கித் தந்த மண்!

தமிழை முத்தமிழ் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கிறோம். முத்தமிழில் இயல் உண்டு; இசை உண்டு; நாடகம் உண்டு.

கவிதையும், உரைநடையும் 'இயல்' என்று ஒளிவீசும்!

காதுகளில் தேன் பாய்ச்சும் இசையோ 'இசை' என்னும் பெயரால் இசையாதவரையும் இசைய வைக்கும்!

சூறாவளியில் அலைக்கழிக்கப்படாமல் அரிய கலைப் பயிர்கள் காக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வருவது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு!



கண் வழியும், கை வழியும் மட்டும் அல்லாமல், மெய் வழியே உள்ளக் கருத்தை இயம்பிடும் 'கூத்தோ', உவகையினால் உலகையே கூத்தாட வைக்கும்.

இந்த மூன்றையும் சேர்த்து முத்தமிழ் என்றதால் அவ்வாறு முத்தமிழ் வளர்க்கும் அமைப்பை இயல் இசை நாடக மன்றம் என்றோம்.

1955 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைகளையும், கலை வல்லுநர்களையும் வளர்க்கும் தாயாக விளங்குவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

### புதிய பொலிவும் வலிவும்

கலையைக் கடவுளாகக் கண்ட தேசம் இது! பொருளைத் தவிர, அதாவது பணத்தைத் தவிர வேறு பொருள் இல்லை என்னும் பொருளாதாரச்

எனவே தான் இயல் இசை நாடக மன்றத்துக்குப் புதிய பொலிவையும் வலிவையும் அளித்து வருகிறோம்.

கலையை வளர்ப்பது என்பது கலை வல்லுநர்களை வளர்ப்பதே ஆகும்.

எனவே, கலை வல்லுநர்களின் நலனைக் காப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 498 கலைஞர்களுக்கு மாதம் 500 ரூபாய் நிதி உதவி வழங்க நான் ஆணையிட்டேன். இந்த ஆண்டு 500 கலைஞர்களுக்கு மாதம் 500 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.




## கலைக்குழுக்களுக்கு உதவி

புகழ்பெற்ற கலை வித்தகர்கள் மறைந்தபின் வறுமையில் வாடும் அவர்களுடைய குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டு வந்த குடும்பப் பராமரிப்பு உதவித் தொகையை 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பன்னெடுங்காலமாக நமது முன்னோர்களால் போற்றப்படும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் மேன்மையை மென்மேலும் வளர்க்கும் வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்பட்டு வருகிறது. கலைகளை வளர்க்கும் நோக்கில் இதுவரை 1,170 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது என்பது சிறப்புக்குரியது.

இந்த விழாவில் 2001, 2002, 2003 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளின் எண்ணிக்கை 91.

இயல் துறையில் 3, இசைத்துறையில் 36, பரதநாட்டியத் துறையில் 17, நாடகத் துறையில் 10, திரைப்படத் துறையில் 16, இசை நாடகத் துறையில் 1, கிராமியக் கலைத் துறையில் 6, இதர கலைத் துறையில் 2 ஆக எட்டுத் துறைகளைச் சேர்ந்த மொத்தம் 91 கலை வல்லுநர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகழ்பெற்று விளங்கிய புலமை மிக்க கலை வித்தகர்கள் மறைந்த பிறகு அவர்களின் நினைவாக இதுவரை 268 கலை வித்தகர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதுபோல இந்த ஆண்டும் சிறப்புமிக்க 18 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தாயகத்தின் பண்பாட்டையும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்த்திடும் வகையில் மாநிலங்களுக்கு இடையேயான கலைக் குழுக்கள் பரிவர்த்தனை செய்யும் திட்டத்தின்கீழ் பிற மாநிலங்களில் உள்ள கலைக் குழுக்களை

தமிழகத்திற்கு வரவேற்று கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், அதேபோல தமிழகத்தில் உள்ள கலைக் குழுக்களைப் பிற மாநிலங்களுக்கு அனுப்பி கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் அரசு உதவி செய்து வருகின்றது.

**மனமார்ந்த பாராட்டுகள்**

வாய்ப்பாட்டு, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் பயிற்சிபெற்ற புத்திளங் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்க ஏதுவாக தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் சபாக்களுக்கு நிதியுதவியும், அந்த சபாக்கள் மூலமாக புத்திளங் கலைஞர்களுக்கு மதிப்பூதியமும் வழங்கப்படுகிறது.

2002 & 2003 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் 34 கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நன்கு இயங்கும் 14 கலை நிறுவனங்களின் வாயிலாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளைப் பெற்ற 91 கலை வித்தகர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே பொற்கிழி பெற்றுள்ள மூத்த கலைஞர்களுக்கும் கேடயம் மற்றும் சுழற்கேடயம் பெற்றுள்ள சிறந்த நாடகக் குழுவுக்கும், சிறந்த கலை நிறுவனத்துக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தொடரட்டும் உங்கள் கலைப்பணி! வளரட்டும் உங்கள் கலை வாழ்வு! என்று உளமார வாழ்த்தி, இந்த விருது வழங்கும் விழா, மிகச் சிறப்பாக நடைபெற பணியாற்றிய, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொறுப்பாளர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

*25.11.2003 அன்று கலைமாமணி விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை*

# புதுடெல்லியில் நடந்த அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2003

## தமிழ்நாடு நாள் விழா




புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நவம்பர் 14 முதல் 27 வரை இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி (India International Trade Fair-2003) சிறப்புடன் நடைபெற்றது. இப்பொருட்காட்சியில் தமிழ்நாடு அரங்கில் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் வகையில் மாதிரி வடிவமைப்புகளும், புகைப்படங்களும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, தமிழ்நாடு அரங்கில் 23-11-2003 அன்று தமிழ்நாடு நாள் விழா நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து இவ்விழாவினை தொடக்கி வைத்து பேசும்போது குறிப்பிட்டதாவது :

“ஆண்டுதோறும் நாட்டின் தலைநகரில் நடைபெறும் சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் இன்று நடைபெறும் “தமிழ்நாடு நாள்” விழாவைத் தொடங்கி வைப்பதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இத்தகைய அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய ஆற்றல் மிக்க முதலமைச்சர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக அளவில் – இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் தொழிற்துறையில் தொழில்நுட்பத் திறனில் வர்த்தக அடிப்படையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், மாற்றங்களையும், புதிய பரிமாணங்களையும் சுற்றுலா முக்கியத்துவம் குறித்த விவரங்களையும் பரிமாறிக்கொள்ளவும், அதன் வாயிலாக மக்கள் பயன் பெறவும் இத்தகைய

பொருட்காட்சிகளும், கண்காட்சிகளும் வழிவகுக்கு கின்றன என்பதில் ஐயமில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை உலக அரங்கில் ஒரு ஒப்பற்ற நாடாகத் திகழுகின்ற சிறப்பினையும், பெருமையினையும் பெற்றுள்ளது. உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்கிற பெருமை நமக்கு கிடைத்துள்ளது.

இந்திய நாட்டின் தென்பாகத்தில், புகழ்மிக்க மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு எண்ணற்ற சிறப்புகளையும் உலகம் போற்றும் உன்னதப் பெருமைகளையும் பெற்ற மாநிலமாகத் திகழுகிறது.

சங்க இலக்கியத்தில் ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று ஒரு பாடல் வருகின்றது. ''எல்லா இடமும் நமது ஊர், உலக மக்கள் அனைவரும் நமது உறவினர்'' என்பது அதன் பொருளாகும்.

உலக ஒற்றுமைக்கான பல்வேறு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே ஜாதி, மதம், மொழி, மாநிலம், நாடு என்கிற எல்லைக் கோடுகளை எல்லாம் கடந்து மக்களனைவரையும் உற்றார் உறவினர்களாகக் கருதி அந்த வகையில் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்ட பெருமை தமிழ்நாட்டு மக்களுக்கு உண்டு.

இங்கே,அமைந்திருக்கின்ற பொருட்காட்சி நாட்டின் கலாச்சாரப் பரிமாற்றத்திற்கு மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்கும், சுற்றுலா மேம்பாட்டிற்கும் உதவக் கூடிய வகையில் அமைந்திருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

நாடு, அடிமைப்பட்டுக் கிடந்த வேளையில், வாழ்ந்த நமது தேசியகவி மகாகவி பாரதியார், வருங்கால பாரதம் குறித்து சித்தரித்து, கவிதை படைத்தார். அதில் ஓரிடத்தில் அவர், அழகாகக் குறிப்பிடுகின்றார்.

> ''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்,
> காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்''

என்று பாரதியார் குறிப்பிட்டார்.

தொழில்துறையில், தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநிலங்களிடையே உலக அளவில் நாடுகளுக்கு இடையே பரிமாறிக் கொள்ள வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தும் வகையில் இந்தக் கவிதை வரிகள் அமைந்துள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அமைந்துள்ள இந்த சர்வதேசப் பொருட்காட்சி அத்தகைய நோக்கத்தினையும், குறிக் கோளையும் அடைந்திட உதவிடும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தொழில் வளர்ச்சிக்கும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய வழிகாட்டுதலில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் பெருமளவில் தொழில் தொடங்குவதற்கும், தொழில்களுக்கான முதலீட்டிற்கு



உகந்த சூழ்நிலையை உருவாக்கவும் இந்தியாவில் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழச் செய்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றி வருவதைப் பொருளாதார வல்லுநர்களும், பொது மக்களும் போற்றிப் பாராட்டி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில் செயல்படுத்தப்படும் புதிய தொழில் கொள்கை காரணமாக பெரிய அளவில் தொழில் முதலீடு பெறும் மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது என்பதைப் பெருமையுடன் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

தகவல் தொழில் நுட்பத் துறையைப் பொறுத்த வரை தமிழ்நாடு முன்னணியில் இருப்பதையும், அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களைப் பெற்று வருவதையும் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கை உன்னத நோக்கத்துடன் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

"With a vision to put the smile of prosperity on the face of every citizen of Tamil Nadu by leveraging Information Technology to create value and wealth for a knowledge - based state".

"தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி வாயிலாக ஒரு அறிவுச் சார்ந்த மாநிலத்திற்கான வளத்தினையும், மதிப்பினையும் உருவாக்கி தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் முகத்திலும் வளம் என்னும் புன்னகையினை தவழச் செய்வது" என்கிற குறிக்கோளோடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுக்கப்பட்டு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகின்றது.

தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதைக் காண்கிறோம்.

அதைப்போன்று காண்போரின் கண்ணையும், கருத்தையும் கவரும் வகையில் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கப்பூமியாகத் தமிழ்நாடு திகழுகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சி காரணமாக எப்பொழுதும் இல்லாத வகையில் சுற்றுலாத்துறை முக்கியத்துவம் பெற்று சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளும், தமிழ்நாட்டின் சுற்றுலா முக்கியத்துவம் குறித்து உலக அளவில் மக்கள் அறிகின்ற சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

தமிழ்நாடு நாள் விழா நடைபெறும் இந்நாளில், கடந்த அக்டோபர் திங்களில் சுற்றுலா வளர்ச்சிக்கான சர்வதேச அமைப்பின் 64ஆவது ஸ்கால் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் குறிப்பிட்ட ஒரு கருத்தை உங்களுக்கு நினைவூட்டுவதே எனது கடமையாகும்.

"தமிழகத்தின் சிறப்பான வரலாற்றுப் பக்கங்களில் இம்மாநாடு நடைபெறுவது ஒரு சாதனையாகும். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டில் புதைந்து கிடக்கின்ற அரிய பொக்கிஷங்களை உலகம் அறியச் செய்திட முடியும். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாடு சர்வதேச சுற்றுலா வரைப்படத்தில் இடம் பெறுகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாடு நாள் விழா நடைபெறும் இந்நாளில் சுற்றுலாப் பயணிகளுக்கும், பல்வேறு வகையான தொழில் முனைவோருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சார்பில் நான் வேண்டுகோள் விடுக்க விழைகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா மையங்களைக் காணவாருங்கள்! தொழில் முனைவோருக்கு தமிழ்நாட்டில் வழங்கப்படும் சலுகைகளையும் உதவிகளையும் பயன்படுத்திக்கொண்டு அதிக அளவில் தொழில் தொடங்க முன்வாருங்கள் என்று அனைவரையும் அழைக்கின்றேன்.

இங்கே அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கில் பல்வேறு துறைகள் தங்களுடைய வளர்ச்சியினையும், செயல்பாட்டினையும் விவரிக்கின்ற வகையில் காட்சிப் பொருட்களை அமைத்துள்ளார்கள்.

அனைத்துத் துறையினருக்கும் பாராட்டுதல் களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாட்டின் கலை கலாச்சாரத்தை எடுத்துக் காட்டும் வகையில் இங்கே நடைபெறவுள்ள கலை நிகழ்ச்சியினைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் அனைவரும் கண்டு மகிழுமாறு வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!"

இவ்வாறு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு.வி. ராமதாஸ், இ.ஆ.ப., செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.வ.கனகராஜ், இ.ஆ.ப., டில்லியில் உள்ள தமிழக அரசு உயர் அதிகாரி திரு.ஜஸ்பீர் சிங் பஜாஜ், இ.ஆ.ப., இணை இயக்குநர் திரு.இரா.பரதன், உதவி இயக்குநர் திரு. தில்லை கோவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் கலைமாமணி திருமதி சந்திரா தண்டாயுதபாணி அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியும், மதுரை முத்துவின் நாட்டுபுற கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பொதுமக்களும், வெளிநாட்டவர்களும் கண்டு, மகிழ்ந்து பாராட்டினார்கள். ❖

# ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத மாநிலம் தமிழகம் என்ற நிலையை அடைய புதிய ஊட்டச்சத்துக் கொள்கை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தை ஊட்டச்சத்துக் குறைபாடற்ற மாநிலமாக (Malnutrition Free State) மாற்றுவதற்கு வழிகோலும் மாநில ஊட்டச்சத்துக் கொள்கையினை (State Nutrition Policy) வெளியிட்டார்கள்.

தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமையில் அமைந்துள்ள அரசு உறுதியாக உள்ளது. இதனை மனதில் கொண்டு தான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடற்ற மாநிலமாக ஆக்குவோம் என்று கடந்த ஆண்டு அறிவித்தார். இதன் அடிப்படையில், 2003 ஆம் ஆண்டு முதல் பலதரப்பட்ட மக்களும் ஊட்டச்சத்து பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளும் வகையிலும், தமிழ்நாட்டில் உள்ள ஊட்டச்சத்துப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைக் களைவதோடு, அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையிலும், இதற்கான புதிய செயல்திட்டங்களை வரைந்து உலக அளவிலான அனுபவங்களை ஆய்வு செய்யும் வகையிலும், தமிழ்நாடு அரசு புதிய மாநில ஊட்டச்சத்துக் கொள்கையினை உருவாக்கி உள்ளது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் புதிய மாநில ஊட்டச்சத்துக் கொள்கையினை 12.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

ஒரு பெண் கர்ப்பம் தரித்து, கரு வளர்ந்து குழந்தை பிறந்து முதுமைக் காலம் வரை வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து அதனைக் களைந்து ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லா தமிழகம் என்ற நிலையை அடைய வழிகாட்டும் "வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை'' (Life Cycle Approach) மாநில ஊட்டச்சத்து கொள்கையில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மேலும், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 3 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், குடும்ப நல ஆலோசனைகள் வழங்குவதோடு நடைமுறைப் பழக்க வழக்கங்களில் ஊட்டச்சத்து தொடர்பான மாற்றங்களை உருவாக்குதல், இளைஞர் மன்றங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு களப்பணியாளர்களை ஒருங்கிணைத்தல், சுகாதாரப் பணிகள் மற்றும் ஊட்டச்சத்து வழங்கும் திட்டப் பணிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் பணிகளின் தரத்தை உயர்த்துதல், தேசிய ஊட்டச்சத்து சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுக்குள் ஊட்டச்சத்து கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துதல் ஆகிய விவரங்கள் இந்தப் புதிய கொள்கையில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, தலைமைச்செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., மாநில திட்டக் கமிஷன் துணைத் தலைவர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன், சென்னையில் உள்ள யுனிசெப் நிறுவனத்தின் மாநிலப் பிரதிநிதி திரு. டிம் ஸ்கஃப்னர், சமூகநலத் துறை செயலாளர் திருமதி. சி.கே. கரியாலி இ.ஆ.ப., உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜி. இராம கிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத தமிழகத்தை உருவாக்க வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை



**ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத தமிழகத்தை உருவாக்குவோம்!**

சர்வதேச மாநாடுகளில் இயற்றப்பட்ட தீர்மானங்களின்படி, உணவு மற்றும் ஊட்டச் சத்து தொடர்பான மனித உரிமைகளை பாதுகாக்கவும், நிறைவேற்றவும் மற்றும் மேம்படுத்தவும் தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. இதன் அடிப்படையில், "ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத தமிழகத்தை உருவாக்க '' – என்ற அரசாணை ஏப்ரல் 2003இல் வெளியிடப்பட்டது.

தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் இந்தச் சத்துக் குறைபாடுகளைக் கட்டுப்படுத்தி, ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத தமிழகத்தை உருவாக்க விரிவான உத்திகள் கொண்ட கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை ஒரு முக்கிய உத்தியாகும்.

**குறிக்கோள் (Goal)**

எல்லா வகையான ஊட்டச்சத்துக் குறைபாடுகளையும் 2020ஆம் ஆண்டிற்குள் குறைத்து, வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையான நிலையை அடைதல்.

**கருத்தாக்கம் (Concept)**

சமூகப் பொருளாதாரக் காரணங்களாலும் உடலியல் உணவுப் பயன்பாடு சரிவர இல்லாத காரணத்தாலும் சத்தில்லாத, பொருத்தமில்லாத உணவுப் பழக்கத்தினாலும் ஊட்டச்சத்துக் குறைபாடு உண்டாகிறது. குறிப்பாக பெண் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் சத்துக் குறைபாடானது கருவில் ஆரம்பித்து வாழ்க்கை முழுதும் தொடர்கிறது.

**எவ்வாறெனில்**

தாய்மார்களின் உடல்நலத்தையும் கருவளர்ச்சியையும் பாதித்து எதிர்காலத் தலைமுறையையும் பாதிக்கிறது.

பிறப்பு எடைகுறைந்த குழந்தைப் பிறப்பானது, சிசு மரண விகிதத்தை அதிகப்படுத்துகிறது.

தப்பிப் பிழைப்போர் பெரும்பாலும், ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாகவும் தொடர்ந்து நோய் தாக்குதலுக்கு ஆளாகி, போதிய உடல், மன வளர்ச்சி பெறாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்கள், பெரியவர்களாயினும், செயல்திறன் மற்றும் நாள் முழுவதும் திறம்பட பணியாற்றும் உடல் பலம் அற்றவர்களாகவும் இருப்பார்கள்.

வயதானவர்களாயின் நினைவாற்றல் குறைதல், எலும்புகள் பலமிழத்தல் ஆகியவற்றுக்கும் ஆளாவார்கள்.

**செயலாக்கத்தில் பங்கு பெறுவோர்**

- மத்திய அரசு
- உலக வங்கி மற்றும் யுனிசெப் நிறுவனம்
- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்
- பிற அரசு துறைகள்



- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாயக் குழுக்கள்

**செயல் உத்தி :**
**வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை**

பெண் கர்ப்பம் தரித்து, கரு வளர்ந்து குழந்தை பிறந்து முதுமைக் காலம் வரை வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் தொடரும் ஊட்டச் சத்துக் குறைப்பாட்டைக் கண்டறிந்து, அதைக் களைந்து, "ஊட்டச் சத்துக் குறைபாடில்லா தமிழகம்'' – என்ற நிலையை அடைய வழிகாட்டும் தத்துவம் தான் "உரிமைகள் சார்ந்த வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறை''

உடல் மற்றும் மன வளர்ச்சி என்பது இயல்பானது. அதைத் தடை செய்வது மனித குலத்திற்கு இழைக்கப்படும் கொடுமையான வன்செயல்.

**பொதுவான வாழ்க்கைச் சுழற்சி உரிமைகள்**

- பிறப்பு எடை 2.5 கிலோவுக்கு மேல் இருக்க வேண்டும்.
- பிறந்தது முதல் ஓராண்டு முழுவதும் போதுமான ஊட்டச்சத்து கிடைக்க வேண்டும்.
- தொற்றுநோய்களிலிருந்து காக்கப்பட வேண்டும்.
- சமூகப் பாலினப் பாகுபாடுகளின்றி காக்கப்பட வேண்டும்.
- ஆண் பெண் இன பேதமின்றி வளர்க்கப்பட வேண்டும்.
- வேறு எவ்விதப் பாகுபாடும் இன்றி எல்லோரும் காக்கப்பட வேண்டும்.
- போதுமான வளர்ச்சிக்கும், வளர்ச்சிக் குறைபாட்டைத் தவிர்க்கவும் சமூகம் சார்ந்த மனநலம் பேணுதல் மற்றும் நலப்பணிகள் அளித்தல்.
- ஊட்டச்சத்து, நலப்பணிகளுடன் வாழ்க்கைத் திறன் கல்வி.
- வருவாய் பெருக்கும் திட்டங்கள் மூலம் போதிய வருவாய் மற்றும் உணவு கிடைப்பதை உறுதி செய்து, குடும்ப அளவில் உணவு மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- நலமான வாழ்க்கை முறைக்குரியச் செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு.
- முதுமைக் காலத்தில் போதிய உணவு, பராமரிப்பு மற்றும் இதர சேவைகள் கிடைக்கப் பெற வேண்டும்.

**ஊட்டச்சத்துக் குறைபாட்டுத் தொடர் சுழற்சி**
**வாழ்க்கைச் சுழற்சி அணுகுமுறைச் செயல்பாடுகள்**

தாய், சிசு, குழந்தை, வளர் இளம் பருவம், வயது வந்த நிலை, முதுநிலை ஆகிய பல நிலைகளைக்





கொண்ட மனித வாழ்வில், பல சார்பு துறைகளுடன் ஒருங்கிணைந்த குடும்பம், சமுதாயம், அங்கன்வாடி மையம், துணை சுகாதார நிலையம் ஆகியவைகளின் மூலம் ஊட்டச் சத்து குறைபாடுள்ளவர்களுக்கு ஒருமித்த சேவை (ஒன்றிணைந்த நலப்பணிகள்) அளிப்பதாகும்.

**கர்ப்பிணித்தாய் (போதுமான பிறப்பு எடையை உறுதி செய்ய கீழ்கண்ட செயல்பாடுகள் அவசியம்)**

- 16 வாரத்திற்குள் கர்ப்பிணியைப் பதிவு செய்தல்
- கர்ப்ப கால பரிசோதனை
- தொடர்ந்து எடை எடுத்து, தேவையான அடிப்படைப் பரிசோதனைகள்
- குடும்ப அளவில் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு ஆலோசனைகள்
- இரத்தச் சோகை தடுப்புக்கான இரும்புச் சத்து மாத்திரைகள்
- இரணஜென்னி (டெட்டனஸ்) தடுப்பூசி
- மிதமான உடலுழைப்பு, போதிய ஓய்வு
- இணை உணவு
- உணவில் அயோடின் கலந்த உப்பு
- கர்ப்ப கால ஆபத்துக்களை முன்பே அறிந்து மேல் மருத்துவப் பரிந்துரை, சிகிச்சை மற்றும் பின் தொடர்கவனிப்பு
- வீடுகளில் சென்று சத்துணவு மற்றும் நலவாழ்வுப் பணியாளர்கள் கவனிப்பு.

**பாலூட்டும் தாய்மார்கள்**

- கர்ப்ப கால பின் பராமரிப்பு மற்றும் தன்சுத்தம்
- சீம்பாலின் அவசியம்
- தாய்ப்பாலின் முக்கியத்துவம் மற்றும் பழக்க வழக்கங்கள்
- ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு ஆலோசனைகள்
- இணை உணவு
- இரும்புச் சத்து மாத்திரைகள்
- கடின உழைப்பைத் தவிர்த்து போதிய ஓய்வும் மன அமைதியும் பெறல்
- வீடுகளுக்குச் சென்று சத்துணவு மற்றும் நலவாழ்வுப் பணியாளர்களின் கவனிப்பு

**6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகள் (ஊட்டச்சத்துக் குறைபாட்டையும், நோய் தொற்றையும் குறைத்தல்)**

- சீம்பால் புகட்டுதல் மற்றும் குழந்தை நல பராமரிப்பு.
- குழந்தைக்கு, முதல் ஆறு மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே சிறந்த உணவு.
- பிறந்த குழந்தையை வீட்டிலேயே நன்கு பராமரித்தல்
- கிராம அளவில் தன்னார்வலர்கள் மூலம் குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் மற்றும் நல ஆலோசனைகள்





❖ ஆபத்தை எதிர்நோக்கும் நிலையில் மேல் மருத்துவப் பரிந்துரை, சிகிச்சை மற்றும் பின்கவனிப்பு

❖ வீடுகளுக்குச் சென்று சத்துணவு மற்றும் நலவாழ்வுப் பணியாளர்கள் கவனிப்பு

**6-36 மாத குழந்தைகள்**
**(வளர்ச்சிக் குறைவு மற்றும் சத்துக் குறைவைத் தடுத்தல்)**

❖ 6ஆம் மாதம் முதல் திட திரவ உணவு உண்ணப் பழகுதல்

❖ தடுப்பூசி மற்றும் குழந்தையைப் பேணிக்காத்தல்

❖ தீவிர சுவாச மண்டல நோய்களைக் கட்டுப் படுத்துதல்

❖ கடும் வயிற்றுபோக்கு நோய்களைக் கட்டுப் படுத்துதல்

❖ 6 மாதம் ஆன குழந்தைக்கு இணை உணவு ஆரம்பித்தல்

❖ குடும்ப அளவில் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு ஆலோசனைகள்

❖ நோயுற்ற குழந்தைக்கான உணவு மற்றும் பராமரிப்பு

❖ நுண்ணூட்டச் சத்துக்கள் வழங்குதல்

❖ முறையான மருத்துவப் பரிந்துரை, சிகிச்சை மற்றும் பின் கவனிப்பு

❖ வீடுகளுக்குச் சென்று சத்துணவு மற்றும் நலவாழ்வுப் பணியாளர்கள் கவனிப்பு

**3-5வயது குழந்தைகள்**
**(ஊட்டச்சத்து குறைவு மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினைத் தவிர்த்தல்)**

❖ சீரான உணவை உண்ணுதல் மற்றும் சுகாதாரமான பழக்கங்களைக் கற்றுத் தருதல்

❖ நோயுற்ற குழந்தைக்கான உணவு மற்றும் பராமரிப்பு

❖ இணை உணவு

❖ நுண்ணூட்டச் சத்துக்கள்

❖ சுகாதாரக் கழிப்பிட பழக்கப் பயிற்சி மற்றும் முன் பருவக் கல்வி

❖ குடும்ப அளவில் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வு ஆலோசனைகள்



**5-10 வயது குழந்தைகள் (ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டைக் குறைத்தல்)**

❖ முறையாக உணவுண்ணுதல் மற்றும் சுகாதாரமான பழக்க வழக்கங்களைக் கற்றுத் தருதல்

❖ பள்ளி மாணவர்கள் நலவாழ்வுப் பணிகள்

❖ பள்ளிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள்

❖ பள்ளிகளில் ஊட்டச்சத்து மற்றும் நலவாழ்வுக் கல்வி

❖ வயிற்றுப் பூச்சி நீக்க மருந்து வழங்குதல்

- இரும்புச்சத்து மாத்திரை வழங்கல்.
- பள்ளிசத்துணவுத் திட்டம் சிறப்பாகச் செயல்படல்

**10-20வயது வளர் இளம் பருவத்தினர்**
**(சத்துக் குறைவு மற்றும் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளைக் குறைத்தல்)**

- குடும்ப உணவுப் பழக்க வழக்கங்களை மேம்படுத்துதல்
- குடும்ப வாழ்க்கைக் கல்வி
- தாமே எடை எடுத்து தம் வளர்ச்சியைக் கண்காணித்தல்



- வயிற்றுப் பூச்சி நீக்க மருந்து வழங்கல்
- இரத்த சோகை வராமல் தடுக்க இரும்புச்சத்து மாத்திரை வழங்கல்
- தன் சுத்தம் பேணுதல், குறிப்பாக மாதவிடாய் காலங்களில் தூய்மையைக் கடைப்பிடித்தல்
- தொழிற்கல்வி ஆலோசனை மற்றும் பயிற்சி
- சிறப்பாக பள்ளி சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல்

**20-60 வயதிற்குட்பட்டோர்**
**(ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் நுண்ணூட்டச் சத்துக் குறைவினைக் குறைத்தல்)**

- சுகாதாரமான வாழ்க்கை முறை மற்றும் குடும்ப உணவுப் பழக்க வழக்கங்களை முறைப்படுத்துதல் (உணவு, உடற்பயிற்சி, உடல்நல கவனிப்பு)



- அனைவருக்கும் உணவு கிடைத்தலை உறுதி செய்தல் (பொது உணவு விநியோகம் மற்றும் குடும்ப வருவாய் பெருக்க உரிய வழிமுறைகள்)
- சுயஉதவிக் குழுக்கள் அமைத்து வருமானம் பெருக்க வழிகாட்டல்
- நலவாழ்வு மற்றும் குடும்ப நலப்பணிகள், சேவைகள் அளித்தல்
- ஆணும் பெண்ணும் சமம் – சமத்துவம் பற்றி உணர வைத்தல்
- சமுதாய அளவில் சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி

**60வயதிற்கு மேல்**
**(சத்துக் குறைவைப் போக்குதல் மற்றும் உடல்நலப் பாதுகாப்பு)**

- ஏழை முதியவர்களுக்கு உணவளித்தல்
- குடும்ப உணவுமுறைகளில் ஆலோசனை வழங்குதல்
- நல வாழ்வுப் பணிகள் மற்றும் சேவை
- நல்லுறவு மற்றும் மன அமைதி
- சமுதாயம் சார்ந்த முதியோர் இல்லங்கள்
- தன்னார்வத் தொண்டர்கள் மூலம் குடும்ப ஆலோசனை மற்றும் தொடர் கவனிப்பு

*– திட்ட ஒருங்கிணைப்பாளர்*
*உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்*
*(தகவல் தொடர்புப் பிரிவு) தரமணி 3–ஆவது திட்டம்*
*சென்னை – 600 113.*

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளிகள்

திருச்சிராப்பள்ளி மாவட்ட குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு அமைப்பு, மாவட்டங்களில் ஆங்காங்கே சில நிறுவனங்களில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களை மீட்டு வந்து அரசுப் பள்ளிக்கூடங்களில், சேர்த்து கல்வியறிவு பெறச்செய்வதால், இருண்ட சூழலில் இருந்த குழந்தைத் தொழிலாளர்கள் ஒளிபெற்று பிரகாசமான, வெற்றிகரமான வாழ்வினைப் பெற்று வருகின்றனர்.

மாவட்ட நிருவாகத்தின் மூலம் குழந்தைத் தொழிலாளர்களுக்கென தற்பொழுது 30 சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் 1,500 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர். 2002–2003ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப்பள்ளியில் சேர்க்கப்பட்ட 1,500 மாணவ, மாணவியரில் 1,050 பேர் அடிப்படை பயிற்சி பெற்று முறையாக அரசு பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டு கல்வியறிவு பெற்று வருகிறார்கள்.

ஆரம்பத்தில் 1996–1997ஆம் ஆண்டில் 36 மாணவர்கள் மட்டுமே குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்கள். அடுத்து 1999–2000ஆம் ஆண்டில் 750 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 615 பேர் முழுமையான கல்வி அறிவு பெற்று பயன்பெற்றனர். 2000–2001ஆம் ஆண்டில் 810 மாணவர்கள் சேர்க்கப்பட்டதில் 608 பேரும், 2001–2002ஆம் ஆண்டில் 956 பேர் சேர்க்கப்பட்டதில் 849 பேரும் முழுமையான கல்வியறிவு பெற்று பயன்பெற்றுள்ளனர்.

இவர்களில் சிலபேர் பொதுக் கல்வியோடு நிறுத்திவிடாமல் அரசு கொடுக்கும் நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டும், தங்கள் திறமையாலும், மேலும் தொழில் கல்வி பெற்றும், பிற துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

சான்றாக மணப்பாறை அருகே இனாம்குளத்தூர் பகுதிஙயச் சேர்ந்த ஜாபர்சாதிக் என்கிற மாணவர் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் சேர்ந்து அடிப்படைக் கல்வி பெற்று பின்பு அரசுப் பள்ளியில் சேர்ந்து திறமையாகப் படித்து 2003ஆம் ஆண்டில் நடைபெற்ற பள்ளி இறுதித்தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி) 455/500 மதிப்பெண்கள் பெற்று சிறப்பான இடத்தைப் பிடித்து தற்பொழுது சிவில் இன்ஜினியரிங் பட்டயப்படிப்பு படித்து வருகிறார்.

இதுபோன்று 1997ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் பணியிலிருந்து மீட்கப்பட்ட திருச்சிராப் பள்ளியைச் சேர்ந்த பி.மோகன் என்கிற மாணவர் எலக்டிரிகல் இன்ஜினியரிங் பட்டயம் படித்து வருகிறார்.

1997ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் பணியிலிருந்து மீட்கப்பட்ட மணப்பாறை பகுதியைச் சேர்ந்த, வீட்டுவேலை செய்து வந்த ஏ. புஷ்பா என்கிற மாணவி தற்பொழுது பிளஸ்2 பயின்று வருகிறார். மேலும் மாவட்ட அளவில் சிறந்த கபாடி வீராங்கனையாகவும் விளங்கி வருகிறார். அவரது திறமையாலும், வெற்றியாலும் மாவட்ட நிருவாகத்தால் பாராட்டப் பெற்றுள்ளார்.



திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பீடி சுற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஏ. அப்துல்ஹக் என்கிற மாணவர் 1997ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்டு தற்பொழுது படிப்பிலும்,

விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறார். விளையாட்டுப் போட்டியிலும், பேச்சுப்போட்டியிலும் தன் திறமையை வெளிப்படுத்தி, பள்ளிக்கூட அளவிலும், மாவட்ட அளவிலும் பல பரிசுகள் பெற்றுள்ளார்.

திருச்சிராப்பள்ளியை சேர்ந்த அருள்பிரசாத் என்கிற மாணவர் பட்டறையில் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் ஊதியமாகப் பெற்று சுத்தம் செய்பவராகப் பணிபுரிந்து வந்தார். தற்பொழுது அவர் இளம் கவிஞராகத் திகழ்கிறார். அவருடைய கவிதைகள் நாளிதழ்களில் பிரசுரமாகின்றன. அந்த மாணவர் பள்ளிக்கூடத்தில் உடல் பயிற்சியாளராகவும் மாவட்ட கிரிக்கெட் அமைப்பில் பந்து வீசுபவராகவும் உள்ளார்.

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த நந்தினி என்கிற மாணவி குழந்தைத் தொழிலாளர் பணியிலிருந்து மீட்கும் முன்பு வீட்டுவேலை செய்து வந்தார். தற்பொழுது பள்ளிப்படிப்பிற்கு இடையே இளம் இசைக்கலைஞராகவும் திகழ்கிறார்.

குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புப்பணி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப. அவர்களின் அறிவுரையின்படி, குழந்தைத் தொழிலாளர் சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர, அவர்களுக்கு கணினிப் பயிற்சி, இசைப்பயிற்சிகள் கொடுத்தும், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்தும், மென்மேலும் அவர்களின் திறமைகளை வளரச்செய்து வருங் காலத்தில் அவர்கள் பயனடையச் செய்யும் விதத்தில் சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

முன்பு குழந்தைத் தொழிலாளர்களெல்லாம் பரிதாபத்துக்குரியவர்களாகவும், இரக்கப்பார்வை பெற்றவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் தற்பொழுது நல்ல வாய்ப்பை எதிர்பார்க்கிறார்கள். வாய்ப்புத் தந்தால் எங்களது திறமைகளை நாங்கள் நிரூபிக்கிறோம் என்கிற எண்ணத்தில் உள்ளனர். அவர்களின் எதிர்கால வெற்றிக்கு மிகவும் விருப்பம் உடையவர்களாக உள்ளனர்.

அவர்களின் இந்த எண்ணம் ஈடேறும் வண்ணம், அவர்களது எண்ணங்களுக்கும் விருப்பத்திற்கும், செயல்வடிவமாகவும் அவர்களது பிரகாசமான, வெற்றிகரமான வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், "குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம்" செயல்படுகிறது.

வறுமையின் வடிவமாகவும், வடிகாலாகவும் இருக்கும் குழந்தைத் தொழிலாளர்களை அங்கிருந்து மீட்டு வந்து, அவர்களையும், ஒரு சிவில் இன்ஜினியராகவும், எலக்டிரிகல் இன்ஜினியராகவும், விளையாட்டு வீராங்கனையாகவும், பேச்சுத் திறன் மிக்கவர்களாகவும், கவிஞராகவும், இசைக் கலைஞராகவும் ஆக்க முடியும் என்பதை குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புப் பள்ளி நிரூபித்துக் காட்டுகிறது.

**– கோ. பன்னீர்செல்வம்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருச்சிராப்பள்ளி*



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 125ஆவது பிறந்த நாளையொட்டி,
சென்னையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும்
மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (10.12.2003)



# ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த புதிய தொடக்கப் பள்ளிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிபட்டி, மயிலாடும் பாறை, பெரியகுளம் மற்றும் போடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 19 கிராமங்களில் அமையும் புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கி வைத்தார்கள். மேலும், இப்பள்ளிகளுக்குரிய நிரந்தரக் கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 21.11.2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசின் முனைப்பான நடவடிக்கைகளால், கல்வி அறிவு புகட்டுவதில் முதல் நிலையை எட்டிப் பிடித்துள்ளது தமிழகம். இந்தப் பெருமைக்கும் மேலும் பெருமை சேர்க்கும் வகையில், பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவரையும் தவறாமல் பள்ளிகளில் சேர்த்து, மாணவர் சேர்க்கையில் 100 சதவிகித இலக்கை இந்த ஆண்டிற்குள் அடைந்திட 2003–2004ஆம் ஆண்டில் 356 புதிய தொடக்கப் பள்ளிகளை, ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுடன் தொடங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், இந்தப் பள்ளிகளுக்குத் தேவையான புதிய கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, கற்றல்–கற்பித்தல் உபகரணங்கள், தளவாடச் சாமான்கள் ஆகிய அடிப்படை வசதிகளை செய்து தரவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 340 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த 356 பள்ளிகளில், தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி தொகுதிக்கு உட்பட்ட, மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த தாழையூத்து, சுப்பையா காலனி, அம்பேத்கார் வருசநாடு, அய்யனார்புரம், அம்பேத்கார் காலனி (கண்டமனூர்), புதுக்கோட்டை, அரண்மனைபுதூர், கருமலை சாஸ்தாபுரம், வைகை நகர், எருமைச்சுனை, வீரசின்னம்மாள்புரம், தென்பழனி, அருப்புக் கோட்டை நாயக்கன்பட்டி, அன்னை சத்யா நகர், செல்லமநாயக்கன்பட்டி, மணியாரம்பட்டி, எ.புதூர் ஆகிய 17 இடங்களிலும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சத்யாநகர், போடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சன்னாசிபுரம் ஆகிய 2 கிராமங்களிலும் ஆக 19 புதிய பள்ளிகள் அமைகின்றன.

தேனி மாவட்டத்தில் அமைந்திடும் இந்த 19 புதிய தொடக்கப் பள்ளிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 21.11.2003 அன்று தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பள்ளிகள் இப்போதைக்கு தற்காலிகக் கட்டடங்களில் இயங்கும். இதற்குரிய நிரந்தரக் கட்டடங்களை உடனடியாகக் கட்டும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதே நிகழ்ச்சியில் இந்தப் பள்ளிகளுக்குமான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு. எஸ். செம்மலை, உயர்கல்வி மற்றும் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் செல்வி. லீனா நாயர் இ.ஆ.ப., தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. இரா. கண்ணன், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மாநிலத் திட்ட இயக்குநர் டாக்டர் சந்திரசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால் மதுரை மாவட்டத்தில் உருவாகும் தொழிற்சாலைகள்

தமிழகத்தில் உள்ள ஊராட்சிப் பகுதிகளில் வேலை வாய்ப்பினைப் பெருக்கும் பொருட்டு சிறுதொழில் வளர்ச்சியில், குறிப்பாக வேளாண்சார் தொழில்களில் தொழில் முதலீட்டை மேம்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் துவக்கி ஊரகப் பகுதிகளில் தொழிற்சாலைகள் உருவாக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளில் ஒரு புதிய மைல் கல்லாக அமையும் வகையிலும் ஊரக கிராமப்புறங்களில் கிடைக்கும் வேளாண்சார் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நான்கு வேளாண்சார் தொழில்களுக்கு மேற்படாமல் குறைந்தது ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் வேளாண்சார் தொழில்களை ஊக்குவிக்கும் முயற்சியாக புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தோட்ட உற்பத்திப் பொருட்கள் மலர்ச்சாறு தயாரிப்பு, தென்னை நார் மற்றும் உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட வேளாண்சார் தொழில்களை ஊக்குவிக்கும் நிறுவனங்களுக்கு 'சிறப்பு ஊக்குவிப்பு சலுகைகளாக' 1) இயந்திரத் தளவாடங்களின் முதலீட்டின் பேரில் 15 சதவிகிதம் முதலீட்டு மானியம் 2) மின் ஆக்கியின் (ஜெனரேட்டர்) முதலீட்டின் பேரில் 15 சதவிகிதம் மானியம் 3) மூன்றாண்டுகளுக்கு மின்மானியம் 4) நிறுவனங்களில் பணிபுரியும் பணியாட்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டு மகளிர் இருந்தால் கூடுதலாக 5 சதவிகிதம் முதலீட்டு மானியம் 5) சிட்கோ சிப்காட் மற்றும் இதர அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் தொழிற்கூடங்களைப் பெற்றுத் தருவதில் முன்னுரிமை ஆகியவை அரசால் வழங்கப்படுகிறது.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பி.சந்திர மோகன், இ.ஆ.ப., தெரிவிக்கையில், "மதுரை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இவ்வொன்றியங்களில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை செயலாக்கம் செய்வதின் மூலம் கிராமப்பகுதியில் வேலை வாய்ப்பினைப் பெருக்குவதுடன் மறைமுக வேலைவாய்ப்பும் அரசிற்கு வரி மூலம் வருவாயும் பெருகும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 188 தகுதியான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் மாவட்ட அளவிலான குழுக்கூட்டத்தில் 23 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 23 விண்ணப்பங்களில் 19 விண்ணப்பங்கள் மாநில அளவிலான குழுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு கடன் வழங்கப்படும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை 6 நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.



1) அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாலமேடு கிராமத்தில் பத்திரகாளியம்மன் சங்க கிளை பால் குளிரூட்டுதல் நிலையம் ரூ.47.30 இலட்சத்திலும்;

2) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் மதுரை மீனாட்சி அக்ரோ புட்ஸ் நிறுவனம் மூலம் ரூ.54.28 இலட்சத்தில் பருப்பு ஆலையும்;

3) வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நகரி கிராமத்தில் சிம்ரா புரொஜன் புட்ஸ் மூலம் ஐஸ்கிரீம் தயாரிப்புக் கூடம் ரூ.66.79 இலட்சத்திலும்;



மேலும் இம்மாவட்டத்தில் உசிலம்பட்டி, சேடப்பட்டி, திருமங்கலம், அலங்காநல்லூர், மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, மேலூர் ஆகிய ஆறு இடங்களில் பயோ பெஸ்டிசைட்ஸ் உற்பத்தி, கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி, ஊறுகாய் தயாரித்தல், சோடியம் அல்ஜினேட் உற்பத்தி, மூலிகை மருந்துகள் தயாரித்தல், மசாலா பொடி தயாரித்தல், எண்ணெய் ஆலை ஆகிய நிறுவனங்களின் விண்ணப்பங்கள் நிதி நிறுவனங்–களின் நிலுவையில் உள்ளது'' என்றார்.

4) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன அனுப்பானடியில் மாடர்ன் ரைஸ் மில் கூடம் ரூ.44 இலட்சத்திலும்;

5) வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முள்ளிப்பள்ளம் கிராமத்தில் கயிறு பித் பிளாக் தொழிற்கூடம் ரூ.71 இலட்சத்திலும்;

6) திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் சின்ன அனுப்பானடியில் மாடர்ன் ரைஸ் மில் ரூ.30 இலட்சத்திலும் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் பெரியார் பாசனத் திட்டத்தின் கீழ் விளைச்சல் ஆகும் நெல்லை, அரிசி ஆக்கும் தொழிலில் அதிகம் பேர் பயனுறுவதாகவும் பருப்பு ஆலையின் தரமான உளுந்து பருப்பு மூலம் அப்பளம் தயாரிக்கும் தொழிலில் அதிகம் பேர் பயனுறுவதாகவும் பால் பதனிடும் தொழிலும், கயிறு தயாரித்தல், ஐஸ்கிரீம் தயாரித்தல் ஆகிய தொழில் மூலம் ஊரக மக்கள் பயனுறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

மேலும் இம்மாவட்டத்தில் நான்கு நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் ஒப்பளிப்பு செய்யும் நிலையில் உள்ளது. இதன் மூலம் திருமங்கலம் ஒன்றியத்தில் ரூ.107 இலட்சத்தில் குளிர் சாதனக் கிடங்கும் திருமங்கலம் ஒன்றியத்தில் ரூ.38 இலட்சத்தில் சோற்றுக் கற்றாளை பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் மதுரை கிழக்கு ஒன்றியத்தில் ரூ.35 இலட்சத்தில் மூலிகை மருந்து தயாரிப்புத் தொழிற்சாலையும் திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் ரூ.45.02 இலட்சத்தில் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் விரைவில் அமையும்.

வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றி–யத்தில் நகரி கிராமத்தில் சிம்ரா புரொஜன் புட்ஸ் நிறுவனம் மூலம் ஐஸ்கிரீம் தயாரிப்பு கூடம் ரூ.66.79 இலட்சத்தில் அமைக்கப் பட்டுள்ள தொழிற்சாலையின் மேலாளர் திரு.டி.ராஜீவ் அவர்களை கேட்டபோது, ஐஸ்கிரீம் தயாரிப்பிற்குத் தேவைப்படும் முக்கிய மூலப்பொருளாக பால் மற்றும் பால் பவுடர் தேவைப்படுகிறது. இங்கு 900 லிட்டர் பாலில் ஐஸ்கிரீம் தயாரிப்பு தினமும் நடைபெறுவதாகவும் தற்போது ஆவின் மூலம் பால் பவுடர் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் 12 பெண்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாகவும் இங்கு தயாராகும் ஐஸ்கிரீம் மதுரை, திண்டுக்கல், திருச்சி, பாண்டிச்சேரி, விருதுநகர் போன்ற இடங்களுக்கு அனுப்பப் படுவதாகவும் தெரிவித்தார்.

இதேபோல் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாலமேடு கிராமத்தில் பத்திரகாளியம்மன் சங்க கிளை பால் பண்ணை செயலர் திரு.எ.டி.சுப்பு ராஜன் அவர்களிடம் இத்திட்டம் குறித்து கேட்டபோது, "36 கிராமங்களிலிருந்து 1,300 உறுப்பினர்களின் கறவை மாடுகள் மூலம் தினந்தோறும் 7,500 லிட்டர் பால் இரண்டு வேளை கறக்கப்பட்டு மதுரை, சிவகாசி வரை விற்கப்படுவதாக கூறினார். ஆனால் தற்போது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டவுடன் விற்காத பால் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் இச்சங்கத்தின் மூலம் தற்போது ½ லிட்டர், 1 லிட்டர் பால் பாக்கெட் மூலம் விற்பனை செய்வதாகவும் தற்போது 700 மகளிருக்கு இந்தப் பால் பண்ணை மூலம் மாதத்திற்கு செலவுகள் போக ரூ.1,000 கிடைப்பதாகவும் கூறினார். எனவே இத்திட்டம் ஊரகப் பகுதியில் உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும் அவர் கூறினார்.

**- சிவ.கு.சரவணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை.

# தருமபுரி மாவட்டத்தில் முன்னோடியாகச் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்கள்

தமிழ்நாட்டின் வட எல்லையில், மலைசூழ்ந்து அமையப்பெற்றுள்ள மாவட்டம், தருமபுரி மாவட்டமாகும். தருமபுரி மாவட்டத்தின் மொத்த பரப்பளவு **9.62** எக்டேர் ஆகும். இதன் மூன்றில் ஒரு பகுதி அளவிற்கு அதாவது **3.66** எக்டேர் பரப்பிலான அளவிற்கு வனப்பகுதிகள் அமைந்துள்ளன.

இம்மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை **28,33,252** பேர் ஆகும். இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் **3,38,594** பேரும், மலைவாழ் பழங்குடி மக்கள் **52,443** பேரும் அடங்குவர். சராசரியாக ஒரு சதுர கிலோமீட்டருக்கு **252** பேர் வசித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் பரப்பளவில் மிகப்பெரிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் **51** சதவிகிதம் பேர் மட்டுமே கல்வியறிவு பெற்று, இது கல்வியறிவில் தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக உள்ளது.

கல்வியில் பின்தங்கிய இம்மாவட்டத்தில், மாண்புமிகு முதல்வர் உத்தரவின்படி கல்வியறிவை வளர்த்திட புதிய பள்ளிகள் பல திறக்கப்பட்டும் நிலை உயர்த்தப்பட்டும் உள்ளதுடன் அனைவருக்கும் கல்வி இயக்கம், வளர்கல்வி இயக்கம் ஆகியவற்றின் மூலம் கல்வியறிவு வழங்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதனைப்போல் மக்களின் சுகாதார வாழ்க்கையும் தமிழ்நாட்டளவில், தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

இந்திய அளவில் தமிழ்நாட்டில்தான் பிறப்பு விகிதம் அதிகம். அதாவது **1000** பேருக்கு **18** குழந்தைகள் என்கிற விகிதத்தில் பிறப்பு விகிதம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில்தான் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அதாவது **1000** பேருக்கு **22** குழந்தைகள் என்கிற விகிதத்தில் பிறப்பு விகிதம் தற்போது உள்ளது.



அதைப்போல் ஆண், பெண் விகிதாச்சாரமும், தருமபுரியில் சமநிலையற்றுள்ளது. தமிழ்நாட்டில் 1000 ஆண்களுக்கு 986 பெண்கள் என்கிற நிலை உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் 1000 ஆண்களுக்கு 938 பெண்கள் என்கிற நிலையில் மிகவும் சமநிலையற்று உள்ளது.

தமிழ்நாட்டில் 1000 குழந்தைகள் பிறப்பில் 52 குழந்தைகள் இறக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் 1000 குழந்தைகளுக்கு 67 குழந்தைகள் இறப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஆண், பெண் வர்க்க பேதத்தை ஒழித்து, ஆண், பெண் இருவரும் சமம் என்பதை உணரச் செய்து, குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### இலவச நவீன குடும்பக்கட்டுப்பாடு சிகிச்சை அளித்திடும் திட்டம்

இக்குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் இரண்டு வருடங்களுக்கு முன் இம்மாவட்டத்தில் 6 அரசு மருத்துவ மனைகளில் மட்டுமே செய்யப்பட்டு வந்தது. இதனை தற்சமயம் 9 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தி, தற்சமயம் 15 இடங்களில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை தீவிரமாக மேற்கொள்ளப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்தியாவிலேயே தருமபுரி மாவட்டத்தில், முதன்முறையாக, 5–3–2003 முதல் பொம்மிடி கிராமத்தில், குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சையினை அரசின் செலவில் தனியார் மருத்துவ மனையில் செய்திட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் பொம்மிடியில் உள்ள ராஜா நர்சிங்ஹோம் எனும் தனியார் மருத்துவமனைக்கு குடும்பநல அறுவை சிகிச்சைக்காக, நாளொன்றுக்கு மூன்று பேருக்கு குறையாமல் அறுவைச் சிகிச்சை செய்திட அறுவைச் சிகிச்சை அரங்கு, மருத்துவர் கட்டணம், மருந்துகள் செலவு உள்பட 800 ரூபாயினை அரசு வழங்கிடும். மேலும், குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்பவர்கள் காலையில் மருத்துவ மனையில் சேர்ந்து மாலையிலேயே வீட்டிற்குச் சென்றுவிடலாம். மேலும் அவர்களுக்கு ரூ.200–ம் அரசின் சார்பில் அங்கேயே வழங்கப்பட்டு விடுகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் இங்கு சென்று இலவசமாக குடும்பநல அறுவை சிகிச்சை செய்துகொண்டு பயன்பெற்றுக் கொள்ளலாம்.

5–3–2003 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 17–10–2003 வரை 1089 பேர் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டு பயன்பெற்றுள்ளனர். அதாவது சராசரியாக நாளொன்றுக்கு 5 பேர் வீதம் மாதம் ஒன்றிற்கு 150 பேர் வரை இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தில் குடும்பநல அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களை நேரில் சென்று இத்திட்டம் குறித்து கேட்டறிந்தபோது, இத்திட்டம் மிகச் சிறந்த திட்டம் என்றும், இதன் மூலம் தனியார் மருத்துவமனையில் மிகச் சிறந்த சிகிச்சையினை நாங்கள் பெற்று பயனடைந்து உள்ளதாகவும் மனநிறைவோடு குறிப்பிட்டுள்ளனர்.

### அரசின் சார்பில் தனியார் மருத்துவமனையில் ‘சிசேரியன்’ செய்திடும் திட்டம்

இதைப்போல குழந்தை பிறப்பதில் சிக்கல் ஏற்பட்டு, சிசேரியன் செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும் என்கிற நிலை வருகின்றபோது தொலைதூரத்தில் உள்ள ஏழைகள் தொலைதூர அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று சிசேரியன் செய்து கொள்வது மிக அரிதாக இருந்து வந்தது. இந்நிலையில் அவர்களுக்கு உரிய நேரத்தில் சிசேரியன் செய்யவில்லை யென்றால் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் இறப்பு ஏற்படும் ஆபத்தான சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. மேலும், வசதி இல்லாத ஏழைகளும் அதிகளவில் செலவு செய்வதற்கு வாய்ப்பில்லாமல் பெரும் ஆபத்தைச் சந்திக்கின்றனர்.

இதனை ஆய்ந்துணர்ந்து, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிள்ளைப் பேற்றிற்காகச் சேர்க்கப்படும் தாய்மார்களுக்கு சிசேரியன் செய்திடவேண்டிய நெருக்கடி ஏற்படும் பட்சத்தில், அவர்களை, சுகாதார நிலையத்தின் பரிந்துரையின்படி, தனியார் மருத்துவமனைக்குச் சென்று சிசேரியன் செய்து கொள்ளும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு

அனுமதியளித்தது. இத்திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுபவர்கள் தனியார் மருத்துவமனைக்கு ரூ.1,500 கட்டணம் செலுத்தினால் போதுமானது. அரசின் சார்பில் சிசேரியன் செய்யும் மருத்துவமனைக்கு ரூ.1,800 வழங்கப்படும் இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தில் தற்சமயம் ஆரம்பிக்கப் பட்டு சிசேரியன் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

## மகளிர் சுயஉதவிக் குழுவின் மூலம் ஆம்புலன்ஸ் வசதி ஏற்பாடு

தருமபுரி மாவட்டத்தில் தொலைதூரக் கிராமங்கள் அதிகம் உள்ளது. இதன் காரணமாக அவசர சிகிச்சைக்காக, மருத்துவமனைக்கு வருவதற்கு மக்கள் மிகுந்த சிரமம் அடைந்து வருகின்றனர். இதனைப் போக்கிட, சுகாதாரத்துறையின் மூலம் பரிச்சார்த்தமாக ரூ.3.50 இலட்சம் மதிப்புள்ள ஆம்புலன்ஸ் வண்டியினை காரிமங்கலம் பேரூராட்சியில் செர்ச் (Search) என்னும் தொண்டு நிறுவனத்தின் மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு வழங்கப்பட்டு, அதனைப் பொதுமக்கள் கிலோமீட்டர் ஒன்றிற்கு ரூ.5 என்கிற மிகக் குறைந்தக் கட்டணத்தில், ஆம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. இந்த ஆம்புலன்சை அப்பகுதியினைச் சுற்றியுள்ள மக்கள், பிரசவம், விஷக்கடி, விஷமருந்து ஆகியவை உள்பட மிக அவசர சிகிச்சைக்காகப் பயன்படுத்தி நல்ல பயனைப்பெற்று வருகின்றனர். ஆம்புலன்சிற்காக கிலோ மீட்டருக்கு வழங்கப்படும் 5 ரூபாய் கட்டணத்திலேயே வண்டி பராமரிப்புச் செலவு, எரிபொருள், ஓட்டுநர் மற்றும் இதரச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

## தொண்டு நிறுவனத்தின் மூலம் பெண்சிசுக் கொலை தடுப்பு

பெண் சிசுக் கொலை அதிகம் நிகழ்வதைத் தடுத்திட பல்வேறு முனைப்பு நடவடிக்கைகள் வெகுவாக எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு முன்னோடித் திட்டமாக நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில், கருவுற்றத் தாய்மார்களிடம் தொடர்ந்து கலந்துரையாடல் (கவுன்சிலிங்) செய்து பெண் சிசுக்கொலைகளை தடுத்திடும் பணிகளை 'பூந்தளிர்' என்னும் தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி 5 ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு சமூக சேவகர் மற்றும் ஒரு களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் முதன்முறையாக கருவுற்றத் தாய்மார்கள், ஏற்கெனவே ஒரு பெண் குழந்தை மற்றும் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று மீண்டும் கருவுற்றத்தாய்மார்கள் ஆகியோர்களைக் கண்டறிந்து பட்டியலிட்டு, அவர்களைத் தொடர்ந்து சந்தித்து ஆலோசனை வழங்கி அவர்களுக்கு நல்ல மருத்துவ சிகிச்சை அளித்திட உதவிகள் செய்து, அவர்கள் பெண் குழந்தை பெற்றால் அதனை அவர்களே வளர்க்கவும், முடியாவிட்டால் அக்குழந்தைகளை தொட்டில் குழந்தை மையத்தில் சேர்த்திடவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதன் காரணமாக இப்பகுதியில் நூறு சதவிகித அளவிற்குப் பெண்சிசுக் கொலை தடுக்கப் பட்டுள்ளது.

மாவட்டத்தில் இதரப் பகுதியில், ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள கிராம செவிலியர்கள், கிராமத்திலேயே தங்கியிருந்து இப்பணியினைச் செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக 2000ஆம் ஆண்டில் 549ஆக இருந்த பெண் சிசுக்கொலைகள், 2001இல் 368ஆகவும் 2002இல் 108 ஆகவும், 2003இல் இதுவரை 40 ஆகவும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இப்படி, தருமபுரி மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்விற்காக மாண்புமிகு முதல்வர் உத்தரவின்படி இந்தியாவிலேயே முன்னோடித் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தை தமிழ்நாட்டின் முதன்மை மாவட்டமாக்கிட மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களும், மாவட்ட ஆட்சியர் திரு.மு.அ.சித்திக், இ.ஆ.ப., அவர்களும் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம் நூறு சதவிகிதம் சுகாதாரத்தைப் பெற்று தமிழ்நாட்டின் முன்னோடி மாவட்டமாக மாறிடும் என்பதில் ஆச்சரியமில்லை.

– **தா. மனோகரன்**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தருமபுரி*

• • •

# கல்வி பயில நிதிஉதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.11.2003 அன்று தலைமைச் செயலகத்தில், போதிய நிதிவசதி இல்லாது தவிக்கும் மருத்துவம் (M.B.B.S) பொறியியல் (B.E.) தொழில்நுட்பம் (B.Tech) ஆகிய பட்டப்படிப்புகளில் பயிலும் மாணவ– மாணவிகள் 20 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் செல்வி ஜெ. ராஜம், செல்வன். சி. வருண், திருச்சிராப்பள்ளி மாவட்டம் செல்வன் டி. சந்திரசேகரன், பெரம்பலூர் மாவட்டம் செல்வன். வி. கொளஞ்சியப்பன், திண்டுக்கல் மாவட்டம் செல்வி. எ. உமா ஆகியோர் மருத்துவக் கல்வி (M.B.B.S) பயிலவும், திருநெல்வேலி மாவட்டம் செல்வன். டி. முருகேசன், செல்வி. ஆர் உமா மகேஸ்வரி, செல்வன். எஸ். ஸ்ரீரங்கன், காஞ்சிபுரம் மாவட்டம் செல்வன் ஆர். நிவிஸ் விக்டோரியா, செல்வன். எச். நைனா முகம்மது, தூத்துக்குடி மாவட்டம் செல்வன். எம். மந்திரமூர்த்தி, திருவண்ணாமலை மாவட்டம் செல்வி. எஸ். கோமதி, தேனி மாவட்டம் செல்வி. எஸ். நர்மதா, சிவகங்கை மாவட்டம் செல்வன். பி. ரமேஷ், ஈரோடு மாவட்டம் செல்வன். பி. சுப்பிரமணியன், திண்டுக்கல் மாவட்டம் செல்வன். ஜி. ஜெயகணேஷ், கோயம்புத்தூர் மாவட்டம் செல்வன். கே. வீரராகவன் ஆகியோர் பொறியியல் கல்வி தொடரவும், கோயம்புத்தூர் மாவட்டம் செல்வி. ஆர். பத்மஸ்ரீ, காஞ்சிபுரம் மாவட்டம் செல்வன். ஜெ. ருத்ரகுமார், சிவகங்கை மாவட்டம் செல்வன். வி. முத்தையா ஆகியோர் தொழில்நுட்ப கல்வி (B.Tech) பயிலவும் கல்லூரிகளில் இடம் கிடைத்தும் போதிய நிதிவசதி இல்லாமல் அவதிப்படும் தங்களுக்கு நிதிஉதவி செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

இவர்களது கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த இந்த 20 மாணவ – மாணவிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய் 5 இலட்சம் வழங்க ஆணையிட்டு இதற்கான காசோலைகளை 25.11.2003 அன்று அந்த மாணவ – மாணவிகளிடம் நேரில் வழங்கினார்கள்.



நிதிஉதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ – மாணவிகள் அனைவரும் தங்களது குடும்பச் சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதிஉதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖

# சேலம் மாவட்டத்தில்
# மழைநீர் சேகரிப்புத் திட்டத்தால் கிடைத்த நன்மைகள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சேலம் மாவட்டத்தில் நூறு சதவீதம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு விட்டது. இம்மாவட்டத்தில் மழைநீர் கட்டமைப்புக்கள் அமைத்ததனால் நிலத்தடி நீர் அதிகரித்ததை அறிந்து மகிழ்வுற்று இத்திட்டத்தினை அறிமுகப்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மக்கள் வாயாரப் புகழ்ந்த வண்ணம் உள்ளனர்.

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் உமையாள்புரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. வீ. செல்வம் அவர்களைச் சந்தித்து இது குறித்துக் கேட்டபோது, அவர் கூறியதாவது, "உமையாள்புரம் ஊராட்சி 2,534 மக்கள் தொகை கொண்டதாகும். இவ்வூராட்சியில் 749 குடும்பங்கள் உள்ளன. இவ்வூராட்சியில் உள்ள 720 வீடுகளிலும், பொதுமக்களின் பங்களிப்போடு மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டு நூறு சதவீதம் பணிகள் அரசு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு விட்டது.

இவ்வூராட்சியில் கடந்த இரண்டு வருட காலமாக சரியாக மழை பெய்யவில்லை. கடந்த ஆறு மாத காலத்தில் வறட்சி நிலை ஏற்பட்டு அதனால் இவ்வூராட்சியில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. இதனையொட்டி இவ்வூராட்சியில் பொது இடங்களில் 8 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைத்தோம். ஆழ்துளைக் கிணறுகளுக்கு அருகில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைத்ததனால் தற்போது அவ்வப்போது பெய்த குறைந்த அளவு மழையினால் 6 மாத காலம் வறண்டு கிடந்த ஆழ்துளைக் கிணறுகளில் தற்போது தண்ணீர் வருகிறது. இவ்வூரின் மத்தியில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் 110 அடியிலும், ஆரம்பப் பள்ளிக்கூட வளாகத்தில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் 130 அடியிலும் தண்ணீர் வருகிறது.



ஆனால், இந்த ஆழ்துளைக் கிணறுகளுக்கு அருகில் உள்ள தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் 1,000 அடியிலிருந்தும் தண்ணீர் வருவதில்லை. தவிர, இவ்வூராட்சியில் அமைக்கப் பட்டுள்ள விசைபம்பில் 650 அடியிலிருந்தும் தண்ணீர் வருவதில்லை. இதற்குக் காரணம் இங்கு மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் இல்லாமைதான் என்பதை எங்களால் உணர முடிந்தது.

எனவே, வீடுகளிலும், பொது இடங்களிலும் உள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்கு அருகிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டதால் தற்போது இவ்வூராட்சியில் தண்ணீர் வசதி ஏற்பட்டுள்ளது. மேலும், இவ்வூராட்சியில் 50 ஆயிரம் ரூபாய் செலவில் பண்ணைக் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. இக்குட்டையின் வரத்துக்கால்வாய் தூர்வாரி அகலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் 6 மி.மீட்டர் முதல் 10 மி.மீட்டர் மழை பெய்தால் கூட இவ்வரத்துக்கால்வாய் மூலம் பண்ணைக் குட்டைக்கு நீர் வந்துவிடும். இப்பண்ணைக் குட்டைக்கு நீர்வந்து விட்டால் இவ்வூராட்சியில் நிலத்தடி நீர் பெருகி, தண்ணீர்ப் பற்றாக்குறையே இருக்காது. இவ்வூராட்சியில் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் நூறு சதவீதம் நிறைவேற்றப்பட்டது போல் விரிவாக்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினையும் நூறு சதவீதம் எய்திவிடுவோம்.'' என்று கூறினார். இத்திட்டங்களை ஊர் மக்களின் பங்களிப்போடு செயல்படுத்தியதால் எங்கள் ஊரின் தண்ணீர் பற்றாக்குறை நீங்கிவிட்டது என்று கூறலாம். இதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று முகமலர்ச்சியுடன் கூறினார்.

– **மூ.நா. கிருட்டிணசாமி,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சேலம்.*

# ஈரோடு மாவட்டத்தில் மானாவாரி பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க "நவப்ரா" திட்டம்



நீரின்றி அமையாது உலகம். பெருகி வரும் மக்களின் தேவைக்கேற்ப வேளாண்மை விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். மனிதன் ஒருவனுக்கு மிகவும் அத்தியாவசியமான தேவை நீர், உணவு, நிலம் ஆகியவையாகும்.

நமது நாட்டில் 142 மில்லியன் எக்டேரில் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இச்சாகுபடி பரப்பில் 37% நீர்ப்பாசனம் பெறும் நிலமாகவும், 63% மானாவாரி நிலமாகவும் உள்ளது. நவப்ரா திட்டம் உணவு உற்பத்தியை பெருக்கிட, மானாவாரி நிலங்களை பாசன வசதி நிலமாக மாற்றிட வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் 1.50 இலட்சம் எக்டேர் பரப்பில் மானாவாரி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்திற்கு 10-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 மைக்ரோ வாட்டர் செட் பகுதிகள் வெள்ளக்கோவில், மூவனூர், ஊத்துக்குளி, குண்டடம், பவானி, பவானிசாகர் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 50 மைக்ரோ வாட்டர்செட் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, சுயஉதவிக் குழுக்கள், பயனீட்டாளர் குழுக்கள் மற்றும் நீர்வடிச் சங்கங்கள் அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.

நவப்ரா திட்டம் செயல்பாடு குறித்த பயிற்சி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கு (60 நபர்களுக்கு) 2 நாட்கள் வழங்கப்பட்டது. மேலும் செயல்திட்டம் தயாரிக்க திட்டம் செயல்படும் கிராமங்களில் நீர்வடி மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கு திறனாய்வுப் பற்றி பயிற்சி (Participatory Rural Appraisal) 4 நாட்கள் மைராடா, தாளவாடி தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் அளிக்கப்பட்டது.

நவப்ரா திட்டத்தின் மூலம் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளது. திட்ட வழிமுறைகள், செயல் படுத்தும் பகுதிக்கும் ஏற்ப மாற்றிக் கொள்ள வழிவகுக்கப் பட்டுள்ளது. இயற்கை வளங்களை பேணி பாதுகாத்து, அபிவிருத்தி செய்து திறம்பட பயன்படுத்துதல், வேளாண்மை உற்பத்தியை நீடித்து பெருக்குதல், பசுமை தரும் மரங்கள் தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் மானாவாரி மற்றும் இறவை நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினைக் களைதல், கிராமப்புற வேலைவாய்ப்பை பெருக்குதல்.

நீர், நிலம், தாவரங்கள் ஆகியவற்றில் தேவையான வளர்ச்சியை ஊக்குவித்து மனிதனுக்கும்,

கால்நடைகளுக்கும் தேவையான வளங்கள் கிடைக்க அனைத்து வழிமுறைகளையும் கடைப்பிடிப்பதே நீர்வடிப் பகுதியாகும். இதில் நிலப் பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, வளம் குறைந்த மண்ணை திறமையாக பயன்படுத்துதல், மாறுபட்ட வானிலையில் நிலையான வருமானம், மழைநீர் பயன்பாடு அறிதல், குறைந்த நீரில்

ஈரோடு மாவட்டத்தில் முதலாவது ஆண்டில் 10% இரண்டாவது ஆண்டில் 20% , மூன்றாவது ஆண்டில் 27.3%, நான்காவது ஆண்டில் 21.2%, ஐந்தாவது ஆண்டில் 21.5%, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டு 10%, தொகையாக ரூ. 89.775 இலட்சம் நிதி பெறப்பட்டு, சமுதாய அமைப்பான சுய உதவிக்குழு,



அதிக விளைச்சல், நீடித்த நிலையான வேளாண்மை, அதிக நீரை எதிர்காலத்தின் உபயோகத்திற்கு சேமித்தல், ஊடுபயிர், தொடர்பயிர், சாகுபடி, சேமிப்பு, போக்குவரத்து, சந்தை வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

சமூகப் பங்கேற்பு (Community Participation) தற்போதைய திட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து நீர்வடிப் பகுதிகளுக்கும் ஒரு பொதுவான வழிகாட்டு முறைகள் வேளாண்மை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் மக்களின் திட்டமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் நிலம், நீர் ஆகிய வளங்களை திறம்படப் பயன்படுத்தி மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது நோக்கமாகும்.

திறமைகளை வளர்க்க செயல் திட்டத்தின் மூலம் பயிற்சிக்குரிய நபர்களை பல்வேறு நிலைகளில் தேர்ந்தெடுத்தல், பல பிரிவு நபர்களை அடையாளம் கண்டு வகைப்படுத்தி அவர்களுக்கேற்றாற்போல் பயிற்சிகளை அமைத்தல், யாருக்கு எந்த வகை தேவையோ அந்தவகை பயிற்சி அளித்தல், பயிற்சி மையங்களைக் கண்டு அவற்றிற்கான கட்டண விகிதங்களைக் கண்டறிதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றது.

பயனீட்டாளர் குழு, நீர் வடிச் சங்கங்கள் அமைக்கவும், நிருவாகச் செலவு இனங்களுக்கும் மற்றும் பயிற்சி இனங்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட நவப்ரா திட்டத்தின் மூலம் மானாவாரி விவசாயம் மேம்பட இவ்வாண்டில் 52 வாரங்களுக்கு தொழில்நுட்ப உரைகள் ஒளிபரப்பப் படவுள்ளன.

நவப்ரா திட்டத்தின் மூலம் மானாவாரி நிலங்கள் ஆண்டு பாசனம் பெற்ற விளைநிலங்களாக மாற்றி நாட்டின் பொருளாதார கிராமப்புற வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக அமையும்படி இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே வருங்காலங்களில் விவசாய உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற ஒரு மாவட்டமாக உருவாக, மாவட்ட நிருவாகம் மூலம் முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

– எம். ஆர். லிங்கம்
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

* * *

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்



வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கும் மாவட்டங்களுள் ஒன்றான புதுக்கோட்டை மாவட்டத்தையும் நடப்பாண்டு வறட்சி விட்டு வைக்கவில்லை. வழக்கமாக விழும் மழைப்பொழிவைக் காட்டிலும் 71 சதவிகிதம் குறைவான மழைப்பொழிவு, அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்யாத நிலை போன்றவற்றினால் சாகுபடி பாதிக்கப்பட்டது. வழக்கமாக பயிர் செய்யப்படும் நிலங்களில் 93,299 எக்டேர் நிலங்கள் சாகுபடி பாதிக்கப்பட்டு அறுவடை செய்ய இயலவில்லை. மாவட்டத்தில் உள்ள 5,262 குளங்களிலும் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகின்றது. நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்து கிணற்றுப்பாசனம் மூலம் செய்யப்படும் சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆலங்குடி, மணமேல்குடி, ஆவுடையார்கோவில், கந்தர்வக்கோட்டை ஆகிய வட்டங்களை உள்ளடக்கிய காவிரி மேட்டூர் நீர்ப் பாசனக் கால்வாய் மூலம் பயன்பெறும் கல்லணைக் கால்வாய்ப் பகுதிகள் முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதிகளாகும். காவிரியில் போதுமான தண்ணீர் வரத்து இல்லாமையால் பாசன வாய்க்காலில் தண்ணீர் வராமையால் அதையே நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகளின் நிலை இன்னும் மோசமானது. குறுவையில் 8,400 எக்டேர் பரப்பில் நெல் சாகுபடியின்றியும், சம்பா பருவத்தில் 10,916 எக்டேர் பரப்பு சாகுபடிக்கு தண்ணீர் இன்றியும் வறட்சியால் காய்ந்து பாதிப்பிற்கு உள்ளானது.

### வறட்சி நிவாரணம்

காவிரி நீர் பாயும் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட அரிசி, பருப்பு, இனிப்பு, காய்கறிகள், பணமுடிப்புடன் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

ஆதரவற்ற நிலையில் உள்ள விவசாயிகள், விவசாயக் கூலிகள் போன்றவர்களுக்கு முதலில் இலவச மதிய

உணவும் தொடர்ந்து இலவசமாக மாதந்தோறும் 30 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் எப்பகுதிகளிலும் பசி, பட்டினி என்ற நிலையே இல்லாத அளவுக்குத் தகுதியுள்ள பயனாளிகள் அனைவரும் பயன்பெற்று வருகின்றனர்.

மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அதன் மூலம் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள், வறண்டு போன குழாய்க் கிணறுகளுக்குப் பதிலாக புதிதான ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கால்நடைகளுக்கும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அனைத்துக் கால்நடை மருந்தகங்களில் கால்நடைத் தொட்டிகள் மற்றும் தேவை அடிப்படையிலும் கிராமங்களில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு அருகாமையில் கால்நடைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து ஒன்றியங்கள்தோறும் வறட்சி நிவாரணப் பணியாக எடுத்து செய்ய வாய்ப்புள்ள, அதுவும் மனிதர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகம் வழங்கும் தன்மையுள்ள வேலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பல்வேறு துறைகள் மூலமாகவும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்கான வறட்சி நிவாரணப் பணிகள் தொடரப்படுகின்றன.

அவ்வாறு நடைபெறும் அனைத்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கும் வேலைக்கு உணவு என்ற அடிப்படையில் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதியாக அரிசியும் வழங்கப்படுகிறது.

கால்நடைகளுக்கு தொடர்ந்து தீவனம் கிடைப்பதை உறுதி செய்தல், கால்நடைகளை வறட்சியின் காரணமாக இறைச்சிக்காகவோ பிற காரணங்களுக்காகவோ விற்பனை செய்வதை தடுத்துப் பாதுகாத்து போதுமான தீவனம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிர்க்கடன்கள் மற்றும் பிற விவசாயக் கடன்களை குறுகிய காலக் கடனாக இருப்பதை மாற்றி நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது.

## குடிநீர்த் திட்டங்கள்

வறட்சியினால் அதிகம் பாதிக்கப்படுவது குடிநீர்த் திட்டங்களேயாகும். மழையின்மையால் நிலத்தடி நீர் வெகுவேகமாக குறைவதினால் பல்வேறு கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள், நீராதாரங்கள் வற்றி வறண்டு வரும் சூழ்நிலை உண்டாகிறது. மேலும் ஊருணி நீரையே குடிநீராகப் பயன்படுத்தும் கிராமங்களில் நீராதாரம் வற்றும்போது பிரச்சினை ஏற்படுகிறது. குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க அரசு 5 தவணைகளாக இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ.350 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 347 இடங்களில் புதிய மாற்று ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அரசினால் வழங்கப்பட்ட சிறப்பு நிதியைத் தவிர பதினாறாவது நிதிக்குழுத் திட்டம், மாநில நிதிக்குழுமத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமும் குடிநீர் ஆதாரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு குடிநீர்ப் பஞ்சம் தீர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல இடங்களில் கால்நடைகளுக்குப் போதுமான குடிநீர் கிடைக்கவில்லை என்ற குறையைப் போக்க கால்நடை மருந்தகங்கள் உள்ள 18 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்க ரூ.19.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மேலும் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 18 இடங்களில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு அருகாமையில் கால்நடைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் கால்நடைகள் நீரருந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளது.





## வேலைவாய்ப்பின்மையைப் போக்க "வேலைக்கு உணவு" திட்டம்

தமிழக அரசின் ஆணைப்படி வறட்சி நிவாரணப் பணிகளாக பல்வேறு துறைகள் வாயிலாக செய்ய வேண்டிய பணிகளின் விவரங்கள் கிராம வாரியாக, ஊராட்சி வாரியாக, ஊராட்சி ஒன்றியம் வாரியாக கண்டறியப்பட்டு ஊரக வளர்ச்சித்துறை மூலமாக எடுத்துச் செய்யப்படவுள்ள பணிகள் பகுதி ''அ'' ஆகவும், பிற துறைகள் மூலமாக எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகள் பகுதி ''ஆ'' ஆகவும் தொகுக்கப்பட்டது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பணிகளில் இருந்து ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள வேலை தேடுவோர்களுக்கு செப்டம்பர் மாதம் வரை தொடர்ந்து வேலை வழங்கும் விதமாக பல்வேறு துறை மூலம் பல்வேறு திட்டப்பணிகள் ''வேலைக்கு உணவு திட்டமாக'' செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறட்சியைச் சமாளிக்க கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கிட தமிழக அரசு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை மூலம் பணிகள் எடுத்துச் செய்ய ரூ.144.32 இலட்சமும், பிற துறைகள் மூலம் வேலைகள் எடுத்துச் செய்ய ரூ.144.32 இலட்சமும், ஒதுக்கீடு செய்து உத்தர விட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்த நிதியை வேலையாட்களுக்கு வழங்கும் கூலியின் ஒரு பகுதி பணமாகவும், மீதமுள்ளவை அரிசியாகவும் வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரணப் பணிகளில் வேலையாட்களுக்கு தினக்கூலியாக அரிசியாக 7 கிலோவும், பணமாக ரூ.14.45ம் ஆக மொத்தம் ஆணுக்கும் பெண்ணுக்கும் ரூ. 54 வழங்கப்படுகிறது. மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி 10,132 மெட்ரிக் டன்னும் பல்வேறு துறைகளின் மூலம் நடைபெறும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை முன்னேற்றத்துக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டு அருகாமையில் உள்ள அங்காடியின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது மேலும் கூடுதல் வேலைகள் எடுத்து கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கி 19,000 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பயிர்க்கடன் சலுகை

வறட்சியின் காரணத்தால் விவசாயிகள் மிகவும் துன்புற்றுள்ளதால் அவர்களது பாதிப்பைக் குறைப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிர்க்கடன்கள் குறுகிய காலக் கடனிலிருந்து மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நிலவி வரும் வறட்சியின் காரணமாக பயிர்சாகுபடி செய்யாத விவசாயிகளுக்கும், சாகுபடி செய்து விளையாமல் பயிர் கருகி இழப்பீடு ஆன விவசாயிகளுக்கும் அரசு வறட்சி நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி

பாதித்த 1,33,595 விவசாயிகளுக்கு ரூ.5.40 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிட்டு பாதிப்பு இருந்தால் மானாவாரி பகுதிக்கு எக்டேருக்கு ரூ.1,000, பாசனப் பகுதிக்கு எக்டேருக்கு ரூ.2,500 நீண்டகாலப் பயிராக இருந்தால் எக்டேருக்கு ரூ.4,000 வழங்கப்படுகிறது.



வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய இயலாது ஏற்பட்ட பாதிப்பிற்கு மானாவாரிப் பகுதிக்கு எக்டேருக்கு ரூ.500 பாசனப் பகுதிக்கு எக்டேருக்கு ரூ.1,250 நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு இரண்டு எக்டேருக்கு மட்டும் நிவாரண தொகை வழங்கப்படுகிறது.

தற்போது நிலவி வரும் வறட்சி கொடியது எனினும் ஏழை எளிய மக்களை வறட்சியின் கொடுமையிலிருந்து காப்பாற்ற, தமிழக அரசு எடுத்த நடவடிக்கை பெருமளவிற்கு உதவி புரிந்திருக்கிறது. இன்று மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கமாக வேலை தேடி அண்டை மாவட்டத்திற்கு செல்லுபவர்கள் கூட உள்ளூரில் போதுமான வேலை இருப்பதால் குடிபெயர்தல் என்பது தவிர்க்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளுக்கும் கூலியின் ஒரு பகுதியாக 7 கிலோ அரிசி வழங்கப் படுவதால் கிராமங்களில் இன்று தேவைக்கும் அதிகமான அரிசி ஒவ்வொரு குடும்பத்திலும் கையிருப்பு உள்ளது. எனவே ரேஷன் அரிசியின் விநியோகம் கூட அதிகளவு குறைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் எவ்வித குறைபாடுகளுக்கும் இடமின்றி உடனுக்குடன் விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடிநீர்ப் பிரச்சினை உடனுக்குடன் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக வரும் காலங்களில் வறட்சியைத் தவிர்க்கக்கூடிய பல்வேறு பணிகள் வறட்சி நிவாரணப் பணிகளாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தின் அனைத்து முக்கியப் பகுதிகளிலுள்ள குளங்கள், கண்மாய்கள், வரத்துகால்கள் ஆகியவை சீரமைக்கப்பட்டு மழைநீரை முழுமையாகச் சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனியார் நிலங்களில் 800 பண்ணைக் குட்டைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளது. பல காலங்களாக சீரமைக்கப்படாத ஊருணிகள் சீரமைக்கப் பட்டு குடிநீருக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கையையும் நல்ல எண்ணத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

– துரை. தாமரைச்செல்வம்
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*புதுக்கோட்டை*

❖ ❖ ❖

# தூத்துக்குடி மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் செயல்பாடுகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் அனைவருக்கும் கல்விதிட்டம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஆசிரியப் பெருமக்கள், கிராமக் கல்வி குழு உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரின் சீரிய முயற்சியால் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்பணியாகத் தொடக்க, நடுநிலை, மேல்நிலைப்பள்ளிகளில் கிராமக் கல்விக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் பகுதிகள் ஒதுக்கப்பட்டு, பள்ளி வயதுக் குழந்தைகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் பணியில் ஆசிரியர்கள், கிராமக் கல்விக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராமக் கல்வி பதிவேட்டின்படி தூத்துக்குடி மாவட்டத்தில் 5 வயது நிரம்பிய குழந்தைகள் 28,473 பேர் உள்ளனர். இவர்களில் 28,425 பேர், அதாவது 99.8 சதவிகிதம் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மீதம் உள்ள குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்த்திட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழு ஊனமுற்றவர்கள் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் நடப்பாண்டு 2003–2004ஆம் ஆண்டிற்காக ரூ.934.810 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் கட்டடப் பணிகளுக்கு மட்டும் ரூ.283.450 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மழலையர் கல்விக்கென நடப்பாண்டில் (2003–04) ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டு இரண்டு வகுப்பறை கொண்ட பள்ளிக் கட்டடங்கள் 63ம், மூன்று வகுப்பறைகள் கொண்ட பள்ளிக்கட்டடங்கள் 8ம், கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு தற்போது பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நடப்பாண்டு அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ், விளாத்திகுளம் பகுதியில் 4ம், சாத்தான்குளம் பகுதியில் 2ம், திருச்செந்தூர் கோவில்பட்டி பகுதிகளில் தலா ஒன்று வீதம் மொத்தம் புதிதாக 8 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப் பட்டுள்ளன.

பள்ளிகளில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ஒரு அரசுப் பள்ளிக்கு ரூ.2,000 வீதம் 515 தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ.10,30,000 நடப்பாண்டு செலவழிக்கப் பட்டுள்ளது. அதேபோல் 138 நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ.2,76,000 கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இனிமையாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பக் கற்றல், கற்பித்தல், உபகரணங்கள் வாங்குவதற்காக நடப்பாண்டு இடைநிலை ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.500 வீதம் 2,324 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் 1,585 பேர்களுக்கும் மொத்தம் ரூ.19,54,500 வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு கவனக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத்திறன் உடைய குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகள் இவர்களது கல்விக்கென தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கென இதுவரை ரூ.20,390 செலவிடப்பட்டுள்ளது. 6,7,8ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிப்பதற்காக சிம்மா வட்டத்தில் 9 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு கணினிப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென நடப்பாண்டில் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.






இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல், சேர்க்கப்பட்ட குழந்தைகளை தக்க வைத்தலை எய்திட ஆசிரியப் பெருமக்கள், கிராமக்கல்விக் குழுவினர், அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, இத் திட்டம், இம் மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

– துரை. ராஜ்குமார்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி

# பாதரி

அஸ்ஸாமியச் சிறுகதை

– லட்சுமிநாத் பேஸ் பருவா

சிசுராம் அப்போதுதான் வயல்காட்டிலிருந்து திரும்பியிருந்தான். ஏர்க்காலை வாசலில் வைத்துவிட்டு, அவசர அவசரமாகக் குளித்து முடித்தான். இடுப்புத் துணியை மாற்றிக் கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தான். அவன் மனைவி பாதரி நண்பகல் சோறு ஆக்கிக்கொண்டிருந்தாள். சமையல் முடியாததைக் கண்ட சிசுராமுக்குக் கோபம் வந்தது. சாதம் இன்னும் வடித்தாகவில்லை. பொரியலுக்கான காய்கறியை இன்னும் அடுப்பில் வைக்கவில்லை. ஏன்? இன்னும் நறுக்கப்படவில்லை. செத்துக் கிடந்த மயில் மாதிரி மைதாமாவு வாழை இலையில் அப்படியே கிடந்தது. உடம்பெல்லாம் விபூதியாக, கஞ்சா அடித்த மயக்கத்தில் விழுந்து கிடக்கும் பக்கிரிகளைப் போலச் சாம்பல் பூசி இன்னும் கழுவாமல் நிலத்தில் கிடந்தது உளுவை மீன். அடுப்பின் எதிரில் கண்ணைக் குருடாக்கிய புகையில் அடுப்பை ஊதிக்கொண்டிருந்தாள் பாதரி, அவன் மனைவி.

சாப்பாடு இன்னும் தயாராகாததைக் கண்டு சிசுராமுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. காலையிலிருந்தே சண்டைக்கான மனநிலையில் அவன் இருந்ததாகத் தெரிந்தது. அவனது ஆத்திரம் மேலும் கூடி வளர எல்லாவிதமான காரணங்களும் இருந்தன. அதற்கு முந்தின நாளன்று அவனால் ஏர் கட்ட முடியவில்லை. அன்றைக்குக் கிருஷ்ண ஏகாதசி. ஏர் கட்டுவது கூடாது என்று சொல்வார்கள். இன்றைக்கு மாடுகள் வயலில் சண்டித்தனம் பண்ணிவிட்டன. போதாதென்று, காலை எழுந்தவுடனே பக்கத்து வீட்டுக்காரன் பஹுவாவுடன் ஒரு நிலத்தகராறு. நல்லவேளையாக அது முற்றிப் பெரிய சண்டையாக வெடிப்பதற்கு முன்னால் நிலைமையை உணர்ந்து பஹுவா இடத்தை விட்டு நகர்ந்துவிட்டான். பழமொழி சொல்வார்களே அதுதான். ஆம்படையான் கோவத்தைக் கடைசியாகப் பெண்டாட்டிதான் தாங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னால் ஒரு தடவை இப்படித்தான் பஹுவாவின் மேல் உள்ள ஆத்திரத்தை, அவன் மாடுகளுக்கு வேளையில் தண்ணீர் காட்டவில்லை என்று சொல்லி, பாதரி மேல் காட்டி அவளை நையப்புடைத்தான் சிசுராம்.

பாதரி, பூமியைப் போல், எல்லா இம்சைகளையும் ஒரு முணுமுணுப்பு, அதிருப்தி இல்லாமல் பொறுத்துக் கொண்டாள். உண்மையில் இவையெல்லாம் தாம்பத்தியத்தின் தவிர்க்க முடியாத அம்சங்கள்; உதையும், திட்டுகளும் பசியைப்போல, தூக்கத்தைப் போல இயல்பானவை என்றே, பாதரி நம்பி ஏற்றுக்கொண்டாள். அவள் பதிபக்தியின் மூலமாகவே கதிமோட்சம் தேடினாள்.

ஆனாலும் எதற்கும் ஓர் அளவு இருந்தது. ஏன், பூமி மாதா கூடக் கோபம் தாளாமல் சமயங்களில் பூகம்பமாக வெளிப்படுகிறாள். பாதரியும் பெண்தான். அவள்கூட எதிர்த்து நிற்கவேண்டிய நேரம் வந்துவிட்டதென்றால், அது இயற்கைக்கு விரோதமான காரியமாகிவிடுமா என்ன!

பாதரி அடுப்பை ஊதி ஊதிக் களைத்துவிட்டாள். தூரத்திலிருந்து கொண்டு சிசுராம் அவளை வெறுப்பைக் கக்கும் பார்வையோடு, யார் யாருக்கோ அவளை மகளாக்கி வசை பாடிக் கொண்டிருந்தான்.

"ஏண்டி மவளே!.... சமையல் பண்றதுக்கு எத்தனை நேரம்டி?'' அவன் முகமும் கண்களும் கோபத்தால் சிவந்து தகித்தன.

அடுப்புப் புகையிலிருந்து முகத்தைத் திருப்பி பாதரி அலட்டிக் கொள்ளாமல் பதிலளித்தாள்: "இந்த அடுப்பிலே நான் என் தலையை வச்சா எரிக்க முடியும்? ஒரு சுள்ளிக்கொம்பு இல்லே வீட்லே. இருக்கிற ஈரக்கட்டைகளைப் போட்டு, ஊதி ஊதி நானே வெடிச்சுப்



போயிருவேன் போல இருக்கு. அறிவில்லாமப் பொறிஞ்சு கொட்டினா எப்படி?'' களைத்த அவளது இமைகளில் வேர்வை கோத்து நின்றது.

"என்னடி சிறுக்கி நாயே! என்ன சொல்றே?'' என்று பாய்ந்து எழுந்த சிசுராம் அரிவாள்மனையைத் தூக்கிப் பாதரி முதுகில் வீசினான். இரண்டாவது வெட்டு விழுவதற்குள், பாதரியின் விபரீத ஓலத்தைக் கேட்டுச் சிசுராமின் சகோதரன் சினராம் ஓடிவந்து சிசுராமைக் கட்டி வளைத்து வெளியே இழுத்துக் கொண்டு போனான். ர்த்தவெள்ளத்தில் பாதரி மயங்கிக் கிடந்தாள்.

பாதரியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். மூன்றாம் நாள் ஆஸ்பத்திரியில் பிரக்ஞை தெளிந்த போது, பாதரி யாரையோ, எதிர்பார்த்தவளைப் போல பார்வையைச் சுழற்றினாள். அங்கே இருந்த ஆள் அருகில் வந்தான். பாதரி மிகவும் பலவீனமான குரலில், "அவர் இல்லையா?'' என்று கேட்டாள்.

"யாரைக் கேட்கிறீர்கள்?''

ஓரளவு குழப்பத்துடன், "என் புருஷனைத்தான்!'' என்றாள் பாதரி.

"ஓ அவனா...! அயோக்கியன் லாக்கப்பில் இருக்கிறான்''.

"அவரை இங்கே அழைத்து வாருங்கள்'', பாதரி அழாக்குறையாகக் கெஞ்சினாள்.

"எப்படி முடியும்? அவனைப் போலீஸ் அல்லவா அடைத்து வைத்திருக்கிறது. அவனைப் பற்றி ஏம்மா கவலைப்படறே? அவனை நெனைச்சு உடம்பைக் கெடுத்துக்காதே!'' என்றான் அந்தப் பணியாள்.

பாதரியின் பார்வை குறுகி மூடிக்கொண்டது. சில விநாடிகளில் அவள் மீண்டும் நினைவிழந்தாள். டாக்டருக்கு அனுப்பினார்கள். பணியாள் நடந்ததைச் சொன்னான். டாக்டருக்குப் புரிந்து போயிற்று. சிசுராம் வந்தாலொழிய பாதரியின் நிலைமை மேலும் மோசமாகிவிடக்கூடும். சிசுராம் அவள் அருகே இருக்க, டாக்டர் வேண்டிய ஏற்பாடு செய்தார். பிரக்ஞை மீண்டும் தெளியும்போது அவள் தன் புருஷனைப் பார்க்க முடியும்.

மறுநாள் காலை பாதரி கண் விழித்தபோது அவள் கணவன் சிசுராம் அருகில் உட்கார்ந்து அவள் நெற்றியை தடவிக் கொடுத்து கூந்தலை லேசாக வருடிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் அவள் பார்வையில் ஒரு நிம்மதி தெரிந்தது. அவளது கவலைகள் யாவும் போய்விட்டாற்போன்றதொரு உணர்வு. லேசான புன்னகையுடன் அவனைக் கேட்டாள்,

"எப்படி இருக்கிறீங்க? ஒழுங்காகச் சாப்பிடுறீங்களா? கவலைப்படாதீங்க. எல்லாம் ரெண்டு நாள்லே எனக்குச் சரியாகி விடும். என்னை வீட்டிற்கு அழைத்துப் போங்க''.

சிசுராம் விழிகளிலிருந்து கண்ணீர் தாரைகள் கன்னங்களில் வழிந்தன.

டாக்டர் உள்ளே வந்ததைக் கண்ட பாதரி அவரிடம், "ஐயா நீங்க தெய்வம்; என் அப்பா மாதிரி. இவர் பேர்ல ஒரு குத்தமும் இல்லே. இவர் ஒரு பாவமும் அறியாதவர். இவரை மன்னித்து விட்டுடுங்கோ. எம் புருஷனை விட்டுடுங்கோ, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். அரிவாள்மனை மேல் நான்தான் தவறி விழுந்து வெட்டுப்பட்டுக் கொண்டேன்'' என்று கண்களில் நீர் பளபளக்க வேண்டிக்கொண்டாள்.

டாக்டரும், பணியாளும், சிசுராமும் அப்படியே ஊமையாய்ச் சமைந்து நின்றார்கள். சிசுராமால் அதற்குமேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. குபீரென்று வாய்விட்டுப் பொங்கிக் கதறிக் குழந்தைபோல அழுதான்.

"இல்லீங்க, டாக்டர். அவ சொல்றது பொய். நான்தான் அவளை வெட்டினேன். என்னைத் தூக்கிலே போடறதுதான் சரி. ஐயா, நான் ஒரு பாவி. என்மேல உயிரையே வைச்சிருந்த என் பெண்டாட்டியை வெட்டிய பாதகன் நான்'' என்று உணர்ச்சிபூர்வமாக முறையிட்டான் சிசுராம்.

சில வாரங்களிலேயே பாதரியின் காயங்கள் முழுதும் ஆறி ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினாள் அவள். எத்தனைதான் அவள் முயன்றாலும், அவளால் கணவனைச் சட்டத்தின் நடவடிக்கையிலிருந்து மீட்க முடியவில்லை. சிசுராமுக்கு மூன்று மாதம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. அவனும் மகிழ்ச்சியுடன் தவறுக்காகத் தண்டனை அனுபவிக்கச் சிறை சென்றான்.

கணவனுக்கு நேர்ந்த வருத்தமான நிலைமைக்குப் பாத்ரி தன்னைத்தானே மிகவும் நொந்து சபித்துக் கொண்டாள்.

*-"தற்கால இந்தியச் சிறுகதைகள்''*
*நூலிலிருந்து*
*வெளியீடு : சாகித்திய அகாதமி*

* * *

# தேனி மாவட்டத்தில் ஏற்றமிகு மா ஏற்றுமதி மண்டலம்

**தே**னி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது. மா விவசாயிகளின் வாழ்க்கையில் ஏற்றமிகு பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், மா ஏற்றுமதியிலும் மிக சிறந்த முத்திரையை இம்மண்டலம் மூலம் பதிக்கலாம்.

மா மிகவும் முக்கியமான பயிராகும். இதன் தாயகம் இந்தியா என கருதப்படுகிறது. ''பழங்களின் அரசன்'' எனப்படும் மா, தமிழ் இலக்கியத்தில் கூறப்படும் முக்கனிகளில் முதலிடத்தை வகிக்கிறது. உலகின் மொத்த மாங்கனி உற்பத்தியில் 64 சதவிகிதம் வரை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் தேனி மாவட்டம் மா உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. தேனி மாவட்டம் பெரிய குளத்தில் உள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மா சாகுபடி மற்றும் ஏற்றுமதி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

மா சாகுபடி குறித்த தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டு மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் பேசும்போது, ''உலக அரங்கில், மொத்த பழ உற்பத்தியில், 10 சதவிகித உற்பத்தியை இந்தியாவே அளித்து, உலக நாடுகளில் சீனாவுக்கு அடுத்த இரண்டாவது இடத்தை பெருமையுடன் வகிக்கிறது. முக்கனிகளான மா, பலா, வாழை ஆகியவற்றில் மா, வாழை ஆகிய இரண்டிலும் இந்தியாவே, உலக அரங்கில் உற்பத்தி மற்றும் பரப்பளவில் முதலிடம் வகிக்கிறது.

பழங்களை எடுத்துக் கொண்டால் வெப்ப மண்டலப் பயிர்களான மா, சப்போட்டா, கொய்யா, வாழை போன்றவற்றை அனைத்து சமவெளிகளிலும், மித வெப்ப மண்டலப் பயிர்களான அன்னாசி, ஆரஞ்சு, மங்குஸ்தான், பலா போன்றவை மலை அடிவார பகுதிகளான பழனி, குற்றாலம், மேட்டுப்பாளையம் போன்ற இடங்களிலும், குளிர் மண்டல பயிர்களான ஆப்பிள், பிளம்ஸ், பேரி போன்றவை கொடைக்கானல், ஊட்டி மலைப் பகுதிகளிலும், மழை மறைவுப் பிரதேசங்களுக்கேற்ற பயிர்களான நெல்லி, சீமை இலந்தை, மாதுளை, சீதா போன்றவை இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களிலும் பிரதானமாக விளைகின்றன. எனவே கிட்டத்தட்ட அனைத்து விதமான பழங்களையுமே தமிழகத்தில் சாகுபடி செய்ய இயலும் என்பது நமக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும் என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டில் மட்டும் கிட்டத்தட்ட 1.52 மில்லியன் எக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டு, ஆண்டுக்கு 10.2 மில்லியன் மெட்ரிக் டன்கள் பழங்கள் உற்பத்தியாகின்றன. தற்போதைய இந்தப் பரப்பளவும், உற்பத்தியும், தமிழ்நாடு அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் பயனாக பன்மடங்கு உயரும் வாய்ப்பும் உள்ளது. காரணம், மா வறட்சியை தாங்கி வளரும் ஓர் உன்னத பயிர் ஆகும். வறட்சியில் புரட்சி செய்யும் பழப்பயிர் என்ற கூற்றும் மிகையாகாது. இன்னும் குறிப்பாக கூற வேண்டுமானால், வறட்சிப் பகுதிகளில் விளையும் மாங்கனிகள் ருசியிலும், நிறத்திலும் மற்ற பகுதிகளில் விளைவிக்கப்படும் கனிகளை விட சிறப்பானவை என்பதும் கண்கூடு.

தமிழ்நாட்டில் நீலம், செந்தூரம், பங்கனப் பள்ளி, மல்கோவா, கலப் பாடு, தோதபுரி, பீட்டர், ஹிமாயுதீன், ருமானி போன்ற இரகங்களே அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன. சமீப காலங்களில் வெளியிடப் பட்ட வீரிய ஒட்டு இரகங்களான மல்லிகா, அமரபாலி, சிந்து, ரத்னா, அர்கா, அருணா, அர்கா புனித், அர்கா அனி மோல், அர்கா நீல் கிரன் போன்றவைக்கும் விவசாயிகள் சாகுபடி செய்ய ஆர்வமுடன் முன் வருகின்றனர்.

தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு மா ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டியது நமது கடமையாகும். இதன் அடிப்படையில்தான், பெரியகுளத்தில் இயங்கும் இந்த தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை மையமாக கொண்டு ''மா ஏற்றுமதி மண்டலம்'' ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கமே, மா ஏற்றுமதியில் தமிழ்நாடும் ஒரு முக்கிய இடத்தை பெறவேண்டும் என்பதே ஆகும்.




தேனி மாவட்டத்தினை மையமாக கொண்டு இயங்கும் இந்த மா ஏற்றுமதி மண்டலத்தை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் எனது நன்றியினை உங்களது சார்பிலும், எனது சார்பிலும் காணிக்கை யாக்குகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.ஜீவானந்தம் அவர்கள் பேசும்போது, "தமிழ்நாட்டில் சுமார் 1.52 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 10.2 இலட்சம் டன்கள் மாம்பழங்கள் ஆண்டுதோறும் உற்பத்தியாகின்றன. தமிழகத்தில் பெரும்பாலும், தருமபுரி, சேலம், மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, வேலூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பிரதானமாக விளைகின்றது.

தமிழ்நாட்டில் மா உற்பத்தியின் தனிச்சிறப்பே ஆண்டுக்கு இருமுறை மா விளைச்சல் கிடைப்பதாகும். அடிப்படையில், இது தமிழ்நாட்டிற்கு இயற்கை அளித்த ஒரு வரப்பிரசாதமாகும். தமிழ்நாட்டின் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகளான கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, தேனி மாவட்டத்தில் பெரியகுளம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி போன்ற பகுதிகளில் மரங்கள், ஆண்டுக்கு இருமுறை பூக்களை உற்பத்தி செய்கின்றன. இதனைத்தான் "கோடை மாங்காய்" என்றும் விவசாயிகள் அழைக்கின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தோட்டக்கலை பயிர்களில், ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் உள்ள பயிர்கள் மற்றும் பகுதிகளை கண்டறிந்து சிறப்புமிக்க திட்டங்களை அறிவித்து இருக்கின்றார். இதன் அடிப்படையில், பூக்கள் ஏற்றுமதிக்கு நீலகிரி மாவட்டமும், மாம்பழங்கள் ஏற்றுமதிக்கு தேனி மாவட்டமும் அடையாளம் காணப்பட்டு இருக்கின்றன. எனவே இம்மாவட்டங்களில், மேற்கூறிய பயிர்களின் ஏற்றுமதி வாய்ப்புகள் பல்கி பெருகக்கூடிய சூழ்நிலையினை, தமிழக அரசு முழு மூச்சோடு உருவாக்கி வருகின்றது.

தற்சமயம், இந்திய அளவில், மா ஏற்றுமதி வர்த்தகம், உலகரங்கில் 3 சதவிகிதம் மட்டுமே நடந்து வருகின்றது. மா பரப்பளவு மற்றும் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் இந்தியா, மா ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க சாதனையை இதுவரை நிகழ்த்தவில்லை என்பது கசப்பான ஒரு உண்மையாகும்.

தமிழ்நாட்டில் மாம்பழ ஏற்றுமதிக்கு ஏற்ற சூழ்நிலை உள்ளது. குறிப்பாக தேனி மாவட்டத்தில் நிலவும், தட்பவெப்பநிலையும், இங்கு காணப்படும் இரகங்களும், அவை அனைத்தையும் விட பல்வேறு முன்னோடி விவசாயிகளையும் பெற்றிருப்பதால் நிச்சயம் இப்பகுதியானது மா ஏற்றுமதியினை நல்ல முறையில் செய்ய இயலும்.

பழங்களை வெப்பநிலை குறைவாக இருக்கும் காலைப்பொழுதில் மட்டுமே அறுவடை செய்தல் வேண்டும். கைகளால், முற்றிய பழங்களை மட்டுமே, காயம் அல்லது சேதம் இல்லாமல் அறுவடை செய்ய வேண்டும். 10 முதல் 20 செ.மீ. நீளக் காம்புடன் கூடிய பழங்களை பறித்து, பின்னர் 1 செ.மீ. நீள அளவாக வெட்டி, அவற்றை 20 கிலோ எடை கொண்ட பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைக்க வேண்டும். குறிப்பாக, பறிக்கும்போது தரையில் விழுந்த பழங்களை, பெட்டிகளில் அடைப்பதைத் தவிர்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டிடிவி. தினகரன் அவர்கள் பேசும்போது, "காய்கறிகள் மற்றும் பழங்களில், நமது நாடு உலகிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கின்றது". நமது தமிழக முதல்வர் அவர்கள் விவசாய ஏற்றுமதி மண்டலங்களை, தமிழ்நாட்டில் அந்தந்த பகுதிகளுக்கேற்ற தோட்டக் கலைப் பயிர்களுக்கு அமைத்து வருகின்றார்.

நீலகிரி மாவட்டத்தில் மலர் ஏற்றுமதி, தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் மா ஏற்றுமதி என, பல்வேறு ஏற்றுமதி மண்டலங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது.

தேனி மாவட்டத்தை உள்ளடக்கிய இந்த "மா ஏற்றுமதி மண்டலத்தை" நிர்மாணிப்பதற்கு மட்டும், நமது தமிழக முதல்வர் அவர்கள் ரூ.24.60 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதனை அறியும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனவே, நமது மா விவசாயிகள், இனி வரும்காலங்களில் மா உற்பத்தியினை அதிகரிப்பதோடு நின்று விடாமல், ஏற்றுமதி வர்த்தகத்திலும் சிறப்பான முத்திரையை பதிக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு.க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அதுல்ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமை உரை ஆற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தங்கதமிழ்ச் செல்வன், திரு.எஸ்.பி.எம்.சையதுகான், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர். டி. கணேசன், திரு.எஸ். ராமராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை செயலாளர் திரு.தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் சி. இராமசாமி அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள். பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி முதல்வர் திரு. செ. அன்பு நன்றியுரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் மா விஞ்ஞானிகள் எடுத்துரைத்த அரிய கருத்துக்கள் மூலம் மா விவசாயிகளின் சந்தேகங்களை போக்கி, மா ஏற்றுமதிக்கான அனைத்து தொழில் நுட்பங்களை அறிந்திட வழிவகை காணப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தேனி மாவட்டத்தை மா உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு ஏற்ற பகுதியாக கண்டறிந்து அதற்கான முயற்சிகளை முடுக்கி, அதன் ஓர் அங்கமாகத்தான் இந்த கருத்தரங்கு தேனி மாவட்டத்தில் சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

**– உல. ரவீந்திரன்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
தேனி

* * *

# வேலூர் மாவட்டத்தில் பாலியல் ஊனமுற்றவர்களுக்கான தொகுப்பு வீடுகள்

வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, ஆம்பூர், வாணியம்பாடி, குடியாத்தம், அரக்கோணம் போன்ற இடங்களில் 1,000–க்கும் மேற்பட்ட பாலியல் ஊனமுற்றவர்கள் உள்ளார்கள். இவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடையச் செய்யும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு உதவிகள் செய்து வருகின்றார்கள்.

வாழ்க்கை என்பதே பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலம்தான். அதில் பாலியல் ஊனமுற்றவர்களாக (அரவாணிகள்) பிறந்தது அவர்களுடைய தவறில்லை. ஆண்டவனின் படைப்பில் ஏற்பட்ட தடுமாற்றத்திற்கு பாலியல் ஊனமுற்றவர்கள் மேல் குற்றம் சுமத்துவதில் அர்த்தம் இல்லை. மற்றவர்களை விட செயல் திறன் அவர்களிடம் அதிகமாகவே இருக்கின்றன.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும் பாலியல் ஊனமுற்றவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் காகிதப் பை தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால் மற்றவர்களைவிட பாலியல் ஊனமுற்றவர்கள் கற்றுக்கொண்ட விதமும் செய்யும் நேர்த்தியும் அருமையாக இருந்தது.




சமுதாயத்தில் வாழவும் இருக்கவும் மிகவும் சிரமப்படும் பாலியல் ஊனமுற்றவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். சமுதாயத்தில் மற்றவர்களைப் போல் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் மாவட்ட நிருவாகம் அவர்களுக்காக உதிரிப்பூக்கள் சுய உதவிக்குழுக்கள் என்ற குழுவை 20 பேர் கொண்டு அமைத்துக் கொடுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரத்தால் சுழல்நிதியாக ரூ.25 ஆயிரம் வழங்கி காகிதப் பை தயாரிக்கும் சுய தொழில் செய்து வருகின்றார்கள்.

பாலியல் ஊனமுற்றவர்களைப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் வீட்டைச் சேர்ந்தவர்களே வீட்டை விட்டு வெளியே துரத்திய கொடுமைகளும் மற்றும் துன்புறுத்திய கொடுமைகளும் நடந்திருக்கிறது. தங்க இடம் இல்லாமல் ரோட்டின் ஓரங்களில் வாழ்ந்த அவர்களுக்காக மாண்புமிகு தமிழக முதல்வரின் அனுமதியின் பேரில் வேலூர் ஆரிமுத்து மோட்டூரில் 20 பாலியல் ஊனமுற்றோர்களுக்கு தொகுப்பு வீடுகள் ரூ.6 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் 5 அடுக்கு கட்டடங்களாகக் கட்டப்பட்டுள்ளது. இதை தவிர ரூ.1 இலட்சம் மதிப்பில் சுய தொழில் கட்டடம் ஒன்றும் கழிப்பறை ஒன்றும் ரூ.40 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இவை தவிர சந்தையில் இரண்டு கடைகளும், பாலியல் ஊனமுற்றவர்களுக்கென ஒதுக்கப்பட்டு, அதில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்து வருகின்றார்கள். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பாலியல் ஊனமுற்றவர்களுக்கு ரேஷன் கார்டு இல்லை. இது தொடர்பாக மாநில உணவு வழங்கல் துறை ஆணையரிடம் தெரிவிக்கப்பட்டு, குடும்ப அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எல்லா பாலியல் ஊனமுற்றவகளிடம் இருந்தும் ரேஷன் கார்டுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றது. இன்னும் ஓரிரு வாரத்திலேயே கார்டுகள் வழங்கப்படும். பாலியல் ஊனமுற்றவர்களை அரவணைப்பதிலும் ஆதரிப்பதிலும் இந்தியாவின் முன்னோடியாக வேலூர் மாவட்டம் திகழ்கிறது. பாலியல் ஊனமுற்றவர்களை ஒதுக்குவதும் கேவலமாக நினைப்பதும் தவறு. அவர்களும் நம்மைப் போலவே மனிதர்கள்தான் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரவாணிகளை பாலியல் ஊனமுற்றவர்கள் என்று அழைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஆ.சி. மோகன்தாஸ் , இ.ஆ.ப., அவர்கள் ஆணையிட்டு உள்ளார்.

பாலியல் ஊனமுற்றவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள இந்தத் தொகுப்பு வீடுகள், ஆம்பூர், அரக்கோணம் போன்ற இடங்களிலும் கட்டப்படவுள்ளது. இந்தத் திட்டம் மாநிலத்தின் முன் முயற்சி ஆகும். இது வேலூர் மாவட்டத்தில் மேலும் தொடரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- எம். கலைமணி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.

# வாழ்க்கை வாழ்வதற்கே..



### எச்.ஐ.வி. என்றால் என்ன?

எச்.ஐ.வி. என்பது மிக நுண்ணிய கிருமி. இது மனித இரத்தத்தில் உள்ள இரத்த வெள்ளையணுக்களை நேரடியாகத் தாக்குவதால் உடலின் எதிர்ப்பு சக்தி குறைந்து பல நோய்கள் தாக்க வழி வகுக்கும்.

### எய்ட்ஸ் என்றால் என்ன?

எச்.ஐ.வி. என்னும் கிருமியால் மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து சந்தர்ப்பவாத நோய்கள் தாக்கும் நிலையே எய்ட்ஸ் ஆகும்.

### எச்.ஐ.வி./எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?

எச். ஐ.வி. கிருமி நான்கு வகைகளில் பரவுகிறது.

1. பாதுகாப்பற்ற உடலுறவால் நோய்த் தொற்றியுள்ள ஒரு நபரிடம் இருந்து மற்றவருக்குப் பரவும்.
2. பரிசோதிக்கப்படாத இரத்தம் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவும்.
3. சுத்தம் செய்யப்படாத ஊசிகளைப் பகிர்ந்து கொள்வதால் பரவும்.
4. எச்.ஐ.வி. உள்ள கர்ப்பிணித் தாயிடமிருந்து கருவிலிருக்கும் குழந்தைக்குப் பரவும்.

மேற்கண்ட நான்கு வழிகளிலும் பெரும்பாலும் அதாவது 90 விழுக்காட்டிற்கு அதிகமாக, எச்.ஐ.வி. பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமே பரவுகிறது.

### எச்.ஐ.வி.வராமல் எவ்வாறு தடுக்கலாம்?

- ❖ தனிமனித ஒழுக்கமே எய்ட்ஸ் வராமல் தடுக்க சிறந்த வழி.
- ❖ ஆணுறையைப் பயன்படுத்துவதன் மூலம் எச்.ஐ.வி. பரவாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.
- ❖ பரிசோதனை செய்யப்பட்ட இரத்தம் மற்றும் இரத்தப் பொருட்களையே பயன்படுத்துங்கள்.
- ❖ உபயோகப்படுத்தப்பட்ட ஊசியையும், பிளேடையோ, காது குத்தும் கருவியையோ பயன்படுத்துவதைத் தவிருங்கள்.

எச்.ஐ.வியுள்ள தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. பரவாமல் தடுக்க அரசு மருத்துவமனைகளை நாடி ஆலோசனையும் மருத்துவ சிகிச்சையும் பெறுங்கள்.

### எச்.ஐ.வி.கிருமி உடலுக்குள் நுழைந்தவுடன் என்ன நிகழ்கிறது?

எச்.ஐ.வி. என்ற நுண்கிருமி உடலுக்குள் புகுந்தவுடன் அது உடலிலுள்ள செல் அணுக்கள் உற்பத்தியாகும் இடங்கள், எலும்பு மஞ்சை போன்ற இடங்களில் புகுந்து கொள்கிறது. மேலும், இந்த கிருமிகள் இரத்தத்தில் கலந்து இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களில் குடிகொண்டு தன்னைப் பெருக்கிக் கொள்கிறது. இதனால் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு உடலின் நோய் எதிர்ப்பு சக்தி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது.

இவ்வாறு நோயை எதிர்க்கும் வெள்ளை அணுக்கள் குறைகின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பல்வேறு வகையான தொற்று நோய்கள் உடலைத் தாக்குகின்றன. இந்த வகை நோய்கள் சந்தர்ப்பவாத நோய்கள் என்று குறிப்பிடப்படுகிறது. தொடர்ச்சியாக சந்தர்ப்பவாத நோய்கள் வரும் நிலையே எய்ட்ஸ் என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக



ஒருவரின் உடலில் எச்.ஐ.வி. கிருமி நுழைந்த சுமார் பத்து வருடங்கள் கழித்து இந்த எய்ட்ஸ் நிலை ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

### எச்.ஐ.வி. உள்ள கர்ப்பிணிப் பெண் எச்.ஐ.வி இல்லாத குழந்தையைப் பெற முடியுமா?

முடியும். கர்ப்பிணிப் பெண் பிரசவ வலி ஏற்பட்டவுடன் நெவரப்பின் என்ற மருந்து / மாத்திரை கொடுக்க வேண்டும். குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் எடைக்குத் தகுந்தாற்போல் ஒரு கிலோவிற்கு **0.2** மி.லி. மருந்து கொடுக்க வேண்டும். தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. பரவுவதைத் தடுக்க அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைகளில் இலவச மருந்துகளும் ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே எச்.ஐ.வி. உள்ள பெண்கள் எச்.ஐ.வி. இல்லாத குழந்தையைப் பெற்றெடுக்க இம்மருத்துவ மனைகளுக்குச் சென்று ஆலோசனையும் மருத்துவமும் இலவசமாகப் பெறலாம்.

### தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம்

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமை மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் இம்மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு இலவச ஆலோசனையும் மற்றும் இரத்தப் பரிசோதனையும் ரூ.10 /– மட்டுமே பெற்று இயலாதவர்களுக்கு இலவசமாக எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப்படுகிறது. ஆலோசனை விவரங்களும் பரிசோதனை முடிவுகளும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். பரிசோதனை முடிவில் – எச்.ஐ.வி. உள்ளவர் எனத் தெரியவந்தால் சரியான தெளிவான ஆலோசனையும் வழிகாட்டுதலும் வழங்கப்படும்.

### எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய தவறான எண்ணங்கள்

- ஆரோக்கியமானவர்கள் எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்படுவதில்லை.
- ஒரு நபர் ஒரு சிலருடன் மட்டுமே உடலுறவு வைத்துக் கொண்டால் பால்வினை நோயோ, எய்ட்ஸோ தாக்காது.
- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயால் தாக்கப்பட்டவர்களை அவர்களின் தோற்றத்தை வைத்தே எளிதில் அடையாளம் காணமுடியும்.
- உடலுறவின் போது வேப்ப எண்ணெய் போன்ற மூலிகைத் திரவங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எச்.ஐ.வி. கிருமி பரவுவதைத் தடுக்கலாம்.

### உண்மை நிலை

- எச்.ஐ.வி. / எய்ட்ஸ் உள்ளோரிடம் பாதுகாப்பற்ற உடலுறவு வைத்துக் கொள்ளும் எவருக்கும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் வரலாம்.
- பாதுகாப்பற்ற உடலுறவால் பால்வினை மற்றும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் தாக்கும் வாய்ப்புகள் உள்ளது.
- எச்.ஐ.வி. / எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களைத் தோற்றத்தை வைத்து கண்டுபிடிக்க இயலாது. இரத்தப் பரிசோதனையின் மூலமே அறிந்து கொள்ள முடியும்.
- ஆணுறையைப் பயன்படுத்தி பாதுகாப்பான உடலுறவு கொள்வதால் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

### எய்ட்ஸ் பற்றிய உண்மைகள்

- வெளிதோற்றத்தை வைத்து ஒருவருக்கு எச்.ஐ.வி. உள்ளது என கண்டுபிடிக்க முடியாது. எனவே இரத்தப் பரிசோதனை மூலமே ஒருவருக்கு எச்.ஐ.வி. உள்ளதா இல்லையா என சரியாக அறியமுடியும்.
- பெரும்பாலும் எச்.ஐ.வி. பாதுகாப்பற்ற பலருடன் கொள்ளும் உடலுறவு மூலமாகப் பரவுகிறது.
- பால்வினை நோய் உள்ளவர்களுக்கு எய்ட்ஸ் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
- எய்ட்ஸின் ஆரம்ப அறிகுறிகள் தெரியாது.
- எய்ட்ஸ் நோயை முழுமையாகப் போக்க மருந்து ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

### எச்.ஐ.வி.வுடன் வாழ்வோருக்கான சில ஆலோசனைகள் - நலமாய் இருக்க சில வழிகள்

- நன்றாக காய்ச்சிய நீரையே குடிக்க வேண்டும்.
- உணவுப் பொருட்களை நன்றாக வேகவைத்து சாப்பிட வேண்டும்.
- உடலுக்கு ஒவ்வாத உணவை உண்பது ஆகாது.
- காரம் அதிகமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.
- இடத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளவும்.
- தினமும் காலையில் நீராடுவது நல்லது.
- சுத்தமான காற்று கிடைக்கும் இடத்தில் வசிப்பது நல்லது.

❖ சிகரெட், குடிப்பழக்கம் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

❖ தொடர்ந்து ஆலோசனை பெற்று உடலை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பவாத நோய்களுக்கு மருத்துவம் பெற்றுக் கொள்வது நல்லது.

❖ உடலுறவின் போது ஆணுறையைப் பயன்படுத்த வேண்டும்.

**உங்கள் உணவு முறை எப்படி இருக்க வேண்டும்?**

❖ உடலுக்கு ஆரோக்கியமும் ஊக்கமும் தரும் நல்ல சத்தான உணவை உட்கொள்ளவேண்டும். புரதம், கார்போஹைட்ரேட் (Carbohydrate), தாது பொருட்கள் அடங்கிய உணவையே சாப்பிட வேண்டும். உணவிற்காகப் பயன்படுத்தப்படும் பாத்திரங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

❖ சளி, இருமல், நிமோனியா, மலேரியா, வாந்தி பேதி மற்றும் சந்தர்ப்பவாத நோய்களைத் தவிர்க்க கொதிக்க வைத்து ஆறவைத்த நீரைப் பருகவும். சூடான நீர் பருகுவது நல்லது.

❖ உடல் அரிப்பு ஏற்படுத்தக்கூடிய உணவு பதார்த்தங்களைத் தவிர்க்க வேண்டும்.

❖ அவ்வப்போது உடல் எடையையும் உடல் பரிசோதனையையும் மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்ளவேண்டும்.

❖ உடலுக்குத் தேவையான சக்தியைத் தரும் கேரட், பீட்ரூட், முள்ளங்கி, பால், முட்டை, பீன்ஸ், கீரை வகைகள் போன்ற உணவுகளை உண்ண வேண்டும்.

**எச்.ஐ.வியும் உடற்பயிற்சியும்**

முறையாகத் தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வருவது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சிக்கு என 30 நிமிடத்தை ஒதுக்க வேண்டும்.

**தியானமும் யோகாவும்**

மன அமைதிக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் தியானமும் யோகாவும் மிகவும் சிறந்தது.

**எய்ட்ஸிற்கு மருந்து உண்டா?**

எச்.ஐ.வி. கிருமிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள உதவும் மருந்துகள் ஆங்கில



மருத்துவ முறையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகை மருந்துகள் ஆங்கிலத்தில் ஏ.ஆர்.வி. (ஆன்டி ரிட்ரோ வைரல் ARV-Anti RetroViral Therapy) என்று அழைக்கப்படுகிறது.

இவ்வகை மருந்துகள் மிகவும் வீரியம் வாய்ந்ததாகும். மருந்துகளை மருத்துவரின் ஆலோசனையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இம்மருந்தினை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். இம்மருந்து நோய் எதிர்ப்புத் தன்மையினை அதிகரிக்க வல்லது.

**ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழிகள்**

❖ எச்.ஐ.வி. பற்றி முழுமையான தகவல்களைத் தெரிந்துகொள்ளுங்கள்.

❖ நோய் குறித்து உடனடியாக ஆலோசனை மற்றும் சிகிச்சை பெறுங்கள்.

❖ கர்ப்பிணிப் பெண்கள் தகுந்த ஆலோசனை மையங்களைத் தொடர்பு கொள்ளவேண்டும்.

❖ சுத்தமான சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

❖ தண்ணீரைக் காய்ச்சி வடிகட்டி குடிக்கவேண்டும்.

❖ பெண்கள் ஆறு மாதத்திற்கொருமுறை மருத்துவர் களிடம் சென்று உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

❖ உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம் போன்ற வற்றில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

*ஆதாரம் :*

–தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்,
சென்னை.

# விழுப்புரம் மாவட்டத்தில் காற்று ஒலிப்பான்களை அகற்றுவதில் சாதனை !



விழுப்புரம் மாவட்டத்தில் இயக்கப்படும் அனைத்து வாகனங்களிலும் காற்று ஒலிப்பான்கள் 100 சதவிகிதம் அகற்றப்பட்டுவிட்டன. காற்று ஒலிப்பான்கள் ஒலிமாசு ஏற்படுத்தக்கூடியது. மேலும் காற்று ஒலிப்பான் பயன்படுத்துவதால் ஏற்படும் அதிகமான ஒலி பொதுமக்களுக்கு பெரும் இடையூறு விளைவிக்கிறது. காற்று ஒலிப்பான் பயன்படுத்தும் வாகனங்களால் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளான பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார் தெரிவித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப, அவர்கள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால், விழுப்புரம் மாவட்டத்தில் காற்று ஒலிப்பான்களை வாகனங்களிலிருந்து அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. அதன்பயனாக விழுப்புரம் மாவட்டத்தில் இயக்கப்படும் 3,850 கனரக வாகனங்களிலிருந்தும், 1,035 அரசு மற்றும் தனியார் பேருந்துகளிலிருந்தும் காற்று ஒலிப்பான்கள் முற்றிலும் நீக்கப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் 100% காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்ட மாவட்டம் என மாவட்ட ஆட்சித்தலைவரால் அறிவிக்கப்பட்டது.

மேலும், மாவட்ட எல்லைகளில் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்கும்படியும், இனிவரும் காலங்களில் காற்று ஒலிப்பான்களை பயன்படுத்தாமல் இருக்க திடீர் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும்படியும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

அரசு விதிமுறைகளுக்கு புறம்பாக வாகனங்களில் காற்று ஒலிப்பான்கள் பயன்படுத்தினால் காற்று ஒலிப்பான்களை பறிமுதல் செய்து, வாகன ஓட்டுநர்கள் மீதும், வாகன உரிமையாளர்கள் மீதும், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், காற்று ஒலிப்பான்கள் பயன்படுத்துவது குறித்த புகார்கள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பலாம் என்றும், அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாவட்டம் முழுவதும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

- பா. நாராயணமூர்த்தி,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
விழுப்புரம்.

* * *

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

9 மாத சந்தா செலுத்துவீர்!

# 10 வது
# மாத சந்தா
# இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com



**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WP

